

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஏப்ரல் 05, 2007 புரட்சி 4 முழக்கம் 69 விலை : ரூ.2.50


# அவமதிக்கிறது, உச்சநீதிமன்றம்!

**மீண்டும் உச்சநீதிமன்றம் தனது கொடுவாளை வீசி விட்டது. உரிமை கோரும் பிற்படுத்தப்பட்டோரை அவமதித்துவிட்டது.**

*உயர் கல்வி நிறுவனங்களில் 27 சதவீத பிற்படுத்தப்பட்டோருக்கு மாணவர் சேர்க்கை நிகழ இருக்கும் நேரத்தில் உச்சநீதி மன்றம் கடந்த மார்ச் 29 ஆம் தேதி இடைக்கால தடை விதித்து விட்டது. அஜித் பசாயத், லோகீஸ்வர்சிங்பட்னா ஆகிய இரு நீதிபதிகள், இந்தத் தடையை விதித்துள்ளனர். நீதி மன்றம் தடைக்கு தெரிவித்துள்ள காரணங்கள் ஏற்கவியலாதவை!*

1931 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு, சாதிவாரியாக நடத்தப்பட்டது. அதற்குப் பிறகு சாதிவாரியாக கணக்கெடுப்பு நடக்கவில்லை. எனவே பிற்படுத்தப்பட்டோரை - 1931 ஆம் ஆண்டு கணக்கெடுப்பை வைத்து தீர்மானிப்பதை ஏற்க முடியாது என்று கூறுகிறது, உச்சநீதிமன்றம். இந்தியாவில் வாழும் மக்களில் பிற்படுத்தப்பட்டோர் 52 சதவீதம் பேர் என்று மண்டல் குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1931 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சாதிவாரியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பை மண்டல் குழு அடிப்படையாக ஏற்றுக் கொண்டது. அதே நேரத்தில் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கையை வேறு நான்கு கோணத்திலும் பரிசீலித்தது. மாநில அரசுகள் தயாரித்திருந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியல்கள் பரிசீலிக்கப்பட்டன. மண்டல்குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களோடு, அவை ஒப்பு நோக்கப்பட்டன. இந்தியா முழுதும் மண்டல்குழு சுற்றுப் பயணம் செய்து, பிற்படுத்தப்பட்ட சாதிகளின் பிரதிநிதிகளை சந்தித்து, மனுக்களைப் பெற்று ஆய்வு செய்தது. மாதிரி கணக்கெடுப்புகளும் நடத்தப்பட்டன. அதன் பிறகுதான் பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 52 சதவீதம் என்ற முடிவுக்கு வந்தது. சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று, காகாகலேல்கர் தலைமையில் அமைக்கப்பட்ட முதல் பிற்படுத்தப்பட்டோர் குழு பரிந்துரைத்தது. ஆனால் நிறைவேற்றப்படவில்லை. 'சுதந்திர' இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராக இருந்த வல்லபாய் பட்டேல் தான் 1951 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் போது சாதி வாரியான கணக்கெடுப்பை எடுக்க தடைவிதித்தார். மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் சாதி கணக்கெடுப்பை எடுக்கக் கூடாது என்று உத்தரவிட்டவர் அவர்தான். அப்படிக் கணக்கெடுப்பு நடத்தினால், சமூகம் பிளவுபட்டுவிடும் என்று அவர் கருதினார். மண்டல் தலைவராக பொறுப்பு ஏற்றப் பிறகு 1978-79-ல் உள்துறை அமைச்சராக இருந்த எச்.எம். பட்டேல், 1979-ல் உள்துறை அமைச்சராக இருந்த ஒய்.பி.சவான், 1980-ல் உள்துறை அமைச்சராக இருந்த ஜெயில்சிங் ஆகிய மூவருக்கும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தக் கோரி தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். ஆனால், பட்டேல் உத்தரவை காரணம் காட்டி, மண்டலின் கோரிக்கை ஏற்கப்படவில்லை.

ஆனாலும்கூட மாதிரி சர்வேக்கள் பல தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் ஜூலை 2004 முதல் ஜூன் 2005 வரை கணக்கெடுப்பு நடத்தி இந்தியாவில் 41 சதவீத பிற்படுத்தப்பட்ட மக்கள் இருப்பதாகக் கூறியது. இது பிற்படுத்தப்பட்ட மக்களின் எண்ணிக்கையைத் திட்டமிட்டு குறைத்துக் காட்டும் உள்நோக்கம் கொண்டது என்று, பல்வேறு தரப்பினரிடமிருந்து கடும் எதிர்ப்புகள் வந்தன. 7999 கிராமங்கள், 4602 நகரப் பகுதிகளில் 1 லட்சத்து 24 ஆயிரத்து 680 வீடுகளில் எடுக்கப்பட்ட மாதிரி கணக்கெடுப்பு அடிப்படையில், இந்த முடிவுக்கு வந்ததாக அந்த நிறுவனம் கூறியது.

மக்கள் தொகை எண்ணிக்கையில் கருத்து மாறுபாடு இருந்தாலும்கூட - எந்த ஒரு 'மாதிரி கணக்கெடுப்பும்', பிற்படுத்தப்பட்டோர் 27 சதவீதத்துக்குக் கீழே இருப்பதாகக் கூறவில்லை. மண்டல் குழு பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கை 52 சதவீதமாக இருக்கிறது என்று கூறினாலும், 27 சதவீத இடஒதுக்கீட்டைத் தான் பரிந்துரைத்தது. இப்போது தரப்பட்டிருப்பதும் 27 சதவீத இடஒதுக்கீடு தான். 1931 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பை ஏற்க மறுத்த உச்சநீதிமன்றம் 2004 முதல் 2005 வரை தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம் கூறிய அடிப்படையை ஏற்றிருக்கலாமே!

இந்தியாவில் பட்டம் பெற்றோர் - மேல்பட்டப் படிப்பில் பட்டம் பெற்றோர் பற்றி 'தேசிய மாதிரி கணக்கெடுப்பு நிறுவனம்' (என்.எஸ்.எஸ்.ஓ) 1999-2000 ஆம் ஆண்டில் இந்தியா முழுமைக்கும் மாதிரி கணக்கெடுப்பு நடத்தியது. அய்ந்தாண்டுகளுக்கு ஒரு முறை இது நடத்தப்படுகிறது. என்றாலும் இந்தக் கணக்கெடுப்புதான் அவற்றில் மிகப் பெரிய அளவில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு ஆகும். அதாவது 2.24 லட்சம் பேரிடம் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

நகர்ப்புறப் பகுதிகளில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி - பார்ப்பன உயர் சாதியினர், 37 சதவீதம் பேர். தொழில் நுட்பம் சாராத பட்டப் படிப்பில் - பார்ப்பன உயர்சாதியினர் 66 சதவீதம். மருத்துவப் பட்டதாரிகளில் 65 சதவீதம். பொறியியல் மற்றும் தொழில் நுட்ப பட்டதாரிகளில் 67 சதவீதம். விவசாயப் பட்டப் படிப்பில் 62 சதவீதம். அதாவது, தங்கள் மக்கள் தொகை விகிதாச்சாரத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக பட்டப்படிப்பிலும், உயர் பட்டப் படிப்பிலும் இவர்கள் இடம் பெற்றுள்ளார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

மாதிரி கணக்கெடுப்பில் மேலும் அதிர்ச்சியான தகவல்களும் வெளி வந்தன.

1.51 லட்சம் பேரிடம் எடுத்த கணக்கெடுப்பில் 1359 பேர் பொறியியல் பட்டதாரிகள். இதில் 908 பேர் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் 202 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டோர். 535 டாக்டர்களில் பார்ப்பன உயர்சாதியினர் 350 பேர். பிற்படுத்தப்பட்டோர் 56 பேர். 17,501 தொழில் நுட்பம் சாராத பட்டதாரிகளிடம் எடுத்தக் கணக்கெடுப்பில், 11,529 பேர் பார்ப்பனர் மற்றும் உயர்சாதியினர் (இது, அவர்கள் எண்ணிக்கையைவிட 4 மடங்கு). பிற்படுத்தப்பட்டோர் 2402. தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் எல்லோரையும்விட, பார்ப்பன உயர்சாதியினர், பட்டம் மற்றும் உயர் பட்டப் படிப்புகளில் அவர்களின் எண்ணிக்கையை விட குறைந்தது இரண்டு மடங்குக்கு அதிகமாகவே உள்ளார்கள். (ஆதாரம் - 'எக்னாமிக்ஸ் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி', ஜன.17, 2006)

1931 மக்கள் தொகைக் கணக்கெடுப்பைத் தவிர வேறு ஏதாவது புள்ளி விவரங்கள் இருக்கிறதா என்று நீதி மன்றம் கேட்டதா என்பதும் தெரியவில்லை.

ஆனாலும், இடஒதுக்கீட்டை நிறுத்தி வைப்பதற்கு ஏதாவது ஒரு காரணம் வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டப் பிறகு, இதை எல்லாம் எப்படி பரிசீலிப்பார்கள்? ஆனால், எத்தனையோ நூற்றாண்டு பழமையான ஆகமங்களை - அப்படியே பின்பற்றப்பட வேண்டும் என்று கூறும் உச்சநீதி மன்றங்கள், மக்கள் தொகைக் கணக் கெடுப்பில் மட்டும் வேறு பார்வையை முன் வைக் கின்றன.

மக்கள் தொகைக் கணக்கெடுப்பைக் கூட நடத்தத் தேவையில்லை. உயர்கல்வி நிறுவனங்களில் தற்போது படிக்கும் மாணவர்களின் சாதிவாரியான கணக்கெடுப்பை எடுக்கட்டும்! அறிவிக்கப்படாத பார்ப்பன, உயர்சாதியினருக்கான 70 சதவீதத்துக்கும் மேலான இட

4 ஆம் பக்கம்

## மே 19 சனிக்கிழமை – தஞ்சையில்

**சாதி ஒழிக்கச் சட்டம் எரித்த 50ஆவது ஆண்டில்...**

## பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் சாதி ஒழிப்பு மாநாடு



- எழுச்சி இசை, கருத்தரங்கம், பாவரங்கம், சட்ட எரிப்பு வீரர்களின் நினைவலைப் பகிர்வு, பேரணி, பொது மாநாடு,
- 1957 சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்று நூல் வெளியீடு

கழகத் தோழர்களே! சாதி ஒழிப்பாளர்களே,

**தயாராவீர்! தயாராவீர்!**

## ஈழத் தமிழர் ஆதரவைக் குலைத்திட உளவு நிறுவனங்களின் சதி (3)

# போராளிகளை மிரட்டிய உளவு நிறுவனங்க

தமிழ்நாட்டில் நடந்த தி.மு.க. ஆட்சியில் உள்ள சில முக்கிய தலைவர்கள் விடுதலைபுலிகளுடன் தொடர்பு கொண்டு பேசி வருவதே தேச விரோதமாக - நாட்டுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியதாக உளவுத் துறை மூலம் அறிக்கை தயாரித்தவர் எம்.கே. நாராயணன். உளவுத் துறையின் தலைவர் என்ற முறையில், அன்றைய பிரதமர் வி.பி. சிங் பார்வைக்கு இதைக் கொண்டு போயிருக்க வேண்டிய கடமை எம்.கே. நாராயணனுக்கு உண்டு. ஆனால், அதிகார மட்டத்தில் கமுக்கமாக வைக்கப்பட்டது அந்த அறிக்கை. மண்டல் குழு பரிந்துரை, ஈழத் தமிழர் பிரச்சினைகளில் - பார்ப்பன அதிகார வர்க்கத்தின் உணர்வுகளுக்கு எதிராக உறுதியோடு நின்றார் வி.பி.சிங் என்பதால் அவரது ஆட்சியை பார்ப்பன சக்திகள் திட்டமிட்டு கவிழ்த்தன. சந்திரசேகர் தலைமையில் பொம்மை ஆட்சி ஒன்றை உருவாக்கியவுடன், உளவுத் துறை தயாரித்து வி.பி.சிங்கிடம் மறைக்கப்பட்ட அறிக்கையை வைத்து, அதையே காரணமாக்கி, அன்று தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில், விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். ராஜீவ் கொலைச் சம்பவம் நடந்தது, அதற்குப் பிறகுதான். விடுதலைப்புலிகள் இயக்கம் இந்தியாவில் தடை செய்யப்படாத காலத்திலேயே - அந்த இயக்கத்தினரோடு பேசுவதே 'தேச விரோதம்' என்ற கருத்தை உருவாக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைக் கவிழ்க்கும் அதிகாரம் கொண்டவைகளாக உளவு நிறுவனங்கள் செயல்பட்டன என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

வெளியுறவுத் துறையின் கொள்கைகளை நிர்ணயிப்பதில் வெளிநாட்டுத் துறை அமைச்சக அதிகார வர்க்கமும், உளவு நிறுவனங்களுமே, தீர்மானகரமான சக்திகளாக மாறி நிற்கின்றன. இந்திரா பிரதமராக இருந்த போது, அவர் பல்வேறு பிரச்சினைகளில் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும் பிரதமராக செயல்பட்டிருக்கிறார் என்பதற்கான சான்றுகள் உண்டு. பார்ப்பன அதிகார வர்க்கத்தின் ஆலோசனைகளை அவ்வப்போது ஏற்பவராக இருந்தாலும், முழுமையான கைப்பாவையாக அவர் மாறிடவில்லை என்ற முடிவுக்கே வர நேரிடுகிறது. பாகிஸ்தான் இந்தியாவுக்கு எப்போதும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதிய இந்திரா, அந்நாட்டை கூறு போட்டு, பங்களாதேஷ் நாட்டை உருவாக்கிட முடிவெடுத்து, அதற்கு இந்தியாவின் ராணுவ உதவியையும் வழங்கினார். அதுபோல இலங்கையையும், இந்திரா உடைத்து விடுவார் என்ற அச்சம் - அன்றைய அதிபர் ஜெயவர்த்தனாவுக்கு இருந்து வந்தது. இலங்கைப் பிரச்சினையில் சிங்களத் தலைவர்களைப் பற்றிய சரியான பார்வை, இந்திராவுக்கு இருந்தது என்று மறைந்த அன்டன் பாலசிங்கம் தனது 'போரும் அமைதியும்' நூலில் குறிப்பிடுகிறார். "இந்திரா தொடர்ந்து அதிகாரத்தில் இருந்தால், அவர் இலங்கையை இரண்டாகப் பிரித்து விடுவார் என்று ஜெயவர்த்தனா என்னிடம் பலமுறை கூறியதுண்டு" என்று, இந்திய வெளியுறவுத் துறையின் மூத்த அதிகாரி ஜெ.என்.தீட்சித் தனது 'Assignment Coloumbo' நூலில் குறிப்பிடுகிறார்.

இந்திராவின் மரணத்தைத் தொடர்ந்து, அரசியலின் ஆழம் புரியாத - ராஜீவ் காந்தி பிரதமராக வந்தார். பார்ப்பன அதிகார வட்டம் மகிழ்ச்சிக் கடலில் குதித்தது. ஆசியாவின் வலிமை மிக்க தலைவராக உயரவேண்டும் என்ற துடிப்பில் இருந்த ராஜீவுக்கு அதிகார வர்க்கம் தூபம் போட்டது. கடந்த காலத்தில் இந்திராவின் ஆட்சியில் பின்பற்றப்பட்டு வந்த வெளியுறவுக் கொள்கைகளை மாற்றி அதிரடியான நடவடிக்கைகளில் இறங்கினால்தான் உடனடியான மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று ராஜீவ் காந்தியிடம் தெரிவிக்கப்பட்டன. அதற்கு ராஜீவ் காந்தியும் பச்சைக்கொடி காட்டினார். அதன் காரணமாக இலங்கைப் பிரச்சினையில் இந்திராவின் ஆலோசகர்களாக இருந்த அதிகாரிகள் ஓரம் கட்டப்பட்டனர். ஈழத் தமிழர் பிரச்னையில் ஓரளவு தமிழர்களுக்கு ஆதரவாக செயல்பட்ட பார்த்தசாரதியிடமிருந்து அந்தப் பொறுப்புகளைப் பறித்து ரமேஷ் பண்டாரி என்ற மற்றொரு பார்ப்பன அதிகாரியிடம் ராஜீவ் ஒப்படைத்தார்.

இலங்கை உட்பட - ஆசியாவில் - இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கும் சக்திகளாக உளவுத் துறை, வெளியுறவுத் துறையின் பார்ப்பனிய அதிகார வர்க்கம் உருவெடுத்தது. ராஜீவ் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த இந்த கொள்கை மாற்றங்களை விடுதலைப்புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் எழுதிய 'போரும் அமைதியும்' நூலில் பதிவு செய்துள்ளார். (அந்நூலின் 64, 65 ஆம் பக்கங்கள்)

இந்திராவின் ஆலோசகராக செயல்பட்டு வந்த பார்த்தசாரதியை அன்டன் பாலசிங்கம் புதுடில்லியில், அந்த அதிகாரியின் இல்லத்தில், 1985 ஜனவரியில் சந்தித்துப் பேசினார். ராஜீவ் ஆட்சிக்கு வந்த பிறகு, வெளியுறவுக் கொள்கைகள் மாற்றப்பட்டு வருகின்றன என்று கூறிய பார்த்தசாரதி, இணக்கமான அணுகுமுறைகளை கைவிட்டு இனி கடுமையான போக்குகளைப் பின்பற்ற முடிவு செய்துவிட்டார்கள். ராஜீவ், ஜெயவர்த்தனாவை நம்பத் துவங்கிவிட்டார் என்றும், ஜெயவர்த்தனாவின் இரட்டை வேடம் - சூழ்ச்சிகளை, ராஜீவிடம் எடுத்துச் சொல்லி, அவரை ஏற்க வைக்கும் நிலையில் தான் இல்லை என்றும், பிரச்சினை தனது கையை விட்டுப் போய்விட்டது என்றும், பார்த்தசாரதி தம்மிடம் கூறியதாக, பாலசிங்கம் பதிவு செய்துள்ளார்.

"போராடும் அமைப்புகள் தங்களுக்குள் ஒருங்கிணைப்பை உருவாக்கிக் கொண்டு, பொதுவான கோரிக்கைகளை உருவாக்கி, பேச்சு வார்த்தையில், அழுத்தமாக வலியுறுத்துங்கள்" என்று ஆலோசனை கூறிய பார்த்தசாரதி, இனி உளவுத் துறைதான் இந்தப் பிரச்சினைகளை விவாதிக்கும் என்பதையும் சுட்டிக் காட்டினார். (Mr. Parthasarathy also told me that the Indian Intelligence agencies wood soon brief us on the new policies and approaches of Rajiv's administration)

ஆக, ராஜீவ் பிரதமராக வந்த பிறகு, வெளியுறவுக் கொள்கைகளை - குறிப்பாக ஈழப் பிரச்சினைக்கான கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் தீர்மானிக்கும் உரிமைகளை உளவுத்துறை பார்ப்பனிய அதிகார வர்க்கம் எடுத்துக் கொண்டு விட்டது என்பதை இது உறுதிப்படுத்துகிறது. ஒரு ஜனநாயக அமைப்பில் அரசியல் தலைவர்கள் - அமைச்சர்கள் தீர்மானிக்க வேண்டிய கொள்கைகளை அவர்களை எல்லாம் ஓரம் கட்டிவிட்டு, அதிகாரவர்க்கம், தன் கரங்களில் எடுத்துக் கொண்டது.

இந்த மாற்றங்கள் - வெளிப்படையாகவே தெரியத் தொடங்கின. ஒரு புறம் 'டெலோ' அமைப்பும், மறுபுறம் விடுதலைப்புலிகள் அமைப்பும், இலங்கை ராணுவத்துக்கு எதிராகத் தீவிரமான தாக்குதல்களை நடத்தி வந்தன. யாழ்தேவி தொடர் வண்டியில் டெலோ நடத்திய தாக்குதலில் (1985 ஜன.19-ல்) 22 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர். கொக்கிலாய் ராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலில் (1985, பி.13) 106 சிங்கள ராணுவத்தினர் பலியானார்கள். அதிர்ந்து போனது இலங்கை ராணுவம். தாக்குதலை சமாளிக்க முடியாத நிலையில், முல்லைத் தீவில் தமிழர் அகதிகள் முகாமில் பதிலடித் தாக்குதலை நடத்தி 52 அப்பாவித் தமிழர்களைக் கொன்றது. இந்த 'இனப் படுகொலையைத் தடுக்க வேண்டும்' என்று தமிழ் ஈழ அரசியல் தலைவர்கள் இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்தும் - இந்தியா மவுனம் சாதித்தது. கடந்த காலங்களில் இத்தகைய இனப் படுகொலைகளைக் கண்டித்து வந்த இந்தியா - அப்போது மவுனம் சாதித்தது, இந்தியாவின் அணுகுமுறையில் ஏற்பட்டிருந்த மாற்றத்தை அறிவிப்பதாகவே இருந்தது, என்கிறார் அன்டன் பாலசிங்கம்.

1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் - ஈழப் போராளிக் குழுக்களின் தலைவர்களை, உளவு நிறுவனங்கள் அழைத்தன. அவர்களிடம், உளவு நிறுவன அதிகாரிகள், இந்தியாவின் புதிய கொள்கைகளை விளக்கினார்கள்.

அப்போது 'ரா' உளவு நிறுவனத்தின் தலைவராக இருந்தவர் கிரிஷ் சந்திர செக்சேனா. இவர் தான் ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு ஆலோசகராக பிறகு நியமிக்கப்பட்டார். அதன் பிறகு ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டார். சென்னையில் ஒரு ரகசிய இடத்தில் - 'ரா' தலைவர் சச்சேனா அழைப்பை ஏற்று, விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனும், அன்டன் பாலசிங்கமும் அவரை சந்தித்தனர். அதிகார மிடுக்குடன், பேசிய அந்த அதிகாரி -

"கடந்த கால அணுகுமுறை இப் போது மாறிவிட்டது. இலங்கைத் தமிழர்களை ராணுவத் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்குத்தான் உங்களுக்கு இந்தியா ஆயுதம் வழங்கியதே தவிர, தனி நாடு போராட்டத்துக்கு அல்ல. அது உங்களின் உணர்வாக இருக்கலாம். ஆனால், அங்கே நாடு பிரிவதை இந்தியா ஒரு போதும் ஆதரிக்காது. அது எங்கள் நாட்டில் பெரும் பாதிப்புகளை உருவாக்கிவிடும்" என்று கூறிய அவர், பிரபாகரனைப் பார்த்து, குரலை உயர்த்தி, "எங்களின் இந்த அணுகுமுறையைப் புரிந்து கொண்டு, நீங்கள் ஆதரித்தாக வேண்டும்" என்றார். 'ரா'வைத் தொடர்ந்து வேறு ஒரு நாளில், இந்திய உளவுத்துறை (அய்.பி.) அழைத்தது. விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் - அன்டன் பாலசிங்கத்தை சந்தித்தவர் உளவுத்துறை இயக்குனராக இருந்த இதே எம்.கே.நாராயணன் தான். உ.பி. மாநிலம் காசியில் இந்த சந்திப்பு நடந்தது. சச்சேனா கடுமையான குரலில் - புதிய வெளியுறவுக் கொள்கையை விளக்கினார் என்றால், எம்.கே.நாராயணன், மென்மையாக, அதே கருத்தை பிரதிபலித்தார். இவை எல்லாம் உளவுத் துறை வழக்கமாகப் பின்பற்றும் தந்திரங்கள் தான். 'தெற்கு ஆசியாவின் வலிமையான நாடு இந்தியா. இந்த மண்டலத்தில் நிலையான அமைதியைக் கொண்டு வருவது இந்தியாவின் கடமை. தெற்கு ஆசியாவை அமைதி மண்டலமாக்கிடுவதற்கான புதிய திட்டங்களை, நாங்கள் வகுத்துள்ளோம். இதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்" என்றார் எம்.கே.நாராயணன். இந்தியாவின் பல்வேறு இனங்களை தனது அதிகார மய்யத்தின் கீழ் அடக்கி வரும் இந்திய தேசிய ஆட்சி, தனது எல்லைகளையும் கடந்து, தெற்கு ஆசிய மண்டலம் முழுவதற்கும் 'அமைதியை' தனது அதிகார வலிமையால் திணிக்க விரும்பியது. தெற்கு ஆசியா அமைதி மண்டலமாக இருப்பதுதான் அவர்களின் ஒரே நோக்கமே தவிர, அங்கு ஒடுக்கப்படுகிற இனங்களின் பிரச்சினைகள், அடக்குமுறைகள் அவர்களுக்கு முக்கியமல்ல. இதுவே ராஜீவ் காந்திக்கு பார்ப்பனிய அதிகார வர்க்கம் உருவாக்கிக் கொடுத்த, புதிய வெளியுறவுக் கொள்கைக்கான அணுகுமுறையாகும். இந்திய அதிகாரப் பார்ப்பன மேலாண்மையின் விரிவாக்கமாகவே இது அமைந்திருப்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா ?



எம்.கே. நாராயணன்

இலங்கை ராணுவத்தின் ஒடுக்குமுறை பற்றியும் ஜெயவர்த்தனா விரிக்கும் சூழ்ச்சி வலை பற்றியும் பிரபாகரன், எம்.கே.நாராயணனிடம் எடுத்துக் கூறினார், அவற்றைப் பொறுமையுடன் கேட்ட எம்.கே. நாராயணன், இறுதியில் தனது கருத்தையே மீண்டும் வலியுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, வேகமான மாற்றங்கள் உருவாயின. 'டெலோ' ஈ.பி.ஆர்.எல்.எப்.', 'இரோஸ்' ஆகிய அமைப்புகள் கூட்டாக உருவாக்கியிருந்த 'ஈழ தேசிய விடுதலை முன்னணி' (ஈ.என்.எல்.எல்.) என்ற கூட்டமைப்பில், விடுதலைப் புலிகளும் அங்கமாகியது. பூட்டான் தலைநகரான திம்புவில் இலங்கை அரசின் பிரதிநிதிகளுடன், போராளிகளின் பிரதிநிதிகள் பேச்சுவாத்தை நடத்த உளவு நிறுவனங்கள் ஏற்பாடு செய்தன. பேச்சுவார்த்தை துவங்குவதற்கு இரு வாரங்களுக்கு முன் ராணுவ விமானத்தில் போராளி குழுக்களின் தலைவர்களை டெல்லிக்கு அழைத்து, நட்சத்திர ஓட்டலில் தங்க வைத்தனர். போராளிகளை 'ரா' தலைமை நிலையத்துக்கு அழைத்துப் பேசிய 'ரா' உளவு நிறுவனத் தலைவர் சச்சேனா "பேச்சு வார்த்தைக்கு முழு ஒத்துழைப்பு தந்தாக வேண்டும். எந்த மீறலையும், மோதலையும், ராஜீவ் அரசு சகித்துக் கொள்ளாது. அப்படி ஏதும் நடக்குமானால், இந்தியாவில் நீங்கள் பாதுகாப்பு கோரி அடைக்கலம் கோர முடியாது. எந்தப் பாதுகாப்பு உதவியையும் இந்தியா செய்யாது. பூட்டானில் பேச்சு வார்த்தை, இன்னும் இரண்டு வாரங்களில் துவங்கும். பங்கேற்க மறுப்பீர்களேயானால், இந்தியாவின் மண்ணையோ, அல்லது இந்தியாவின் கடற்பரப்பையோ நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாது. (If you refuse to attend, neither Indian soil, nor territorial waters will be made available to you) என்று மிரட்டினார் (அன்டன் பாலசிங்கம் எழுதிய 'போரும் அமைதியும்' நூல். பக்.76)

(தொடரும்)

**- விடுதலை இராசேந்திரன்**

# தேசிய பாதுகாப்பு சட்டத்தைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

*பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைப் போட்டுள்ள அரசைக் கண்டித்து பல்வேறு ஊர்களில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டச் செய்திகளை ஏற்கனவே வெளியிட்டிருந்தோம். மேலும் வந்துள்ள ஆர்ப்பாட்டச் செய்திகள்:*

### மயிலாடுதுறை

மயிலாடுதுறையில் மார்ச் 16 ஆம் தேதி காலை 11 மணியளவில் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே மாவட்ட கழகத் துணைத் தலைவர் சோம. இராசராசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் பரசுராமன், செயலர் தெ.இரமேசு, நகரத் தலைவர் தெ. மகேசு, செயலர் நாஞ்சில். சங்கர், துணைச் செயலர் காத்திருப்பு குமார், சீர்காழி நகரத் தலைவர் பிரபாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விடுதலை சிறுத்தைகள் மாவட்ட அமைப்பாளர் மா. ஈழ வளவன், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் இரா. முரளிதரன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியவர்கள்: பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் - குத்தாலம் ஒன்றியத் தலைவர் செ. இயற்கை, ஒன்றியச் செயலாளர் சா. ஜீவா, அ. முத்தழகன், மாவட்ட அமைப்பாளர் நா. இளையராசா, சீர்காழி நகரத் தலவைர் பெரியார் செல்வம், ராசா, மெயில் ரமேஷ். விடுதலை சிறுத்தைகள் தோழர்கள் - வடக்கு மாவட்ட துணை செயலர் தமிழ்த் தென்றல், ஒன்றிய அமைப்பாளர் சி.இளந்தமிழன், வடக்கு ஒன்றிய செயலர் கோ. உமாகாந்த், தெற்கு ஒன்றிய செயலர் பொன்னையன், நகர அமைப்பாளர் பா.இறையன். தமிழர் உரிமை இயக்கம் - இணை அமைப்பாளர் சுப்பு. மகேசு, மாவட்ட அமைப்பாளர் இரா. சந்திர சேகரன், நகர அமைப்பாளர் க. இராச வேல், மா. முருகானந்தம், குத்தாலம் நகர அமைப்பாளர் வேல் முருகன் பெரியார் மாணவர் பேரவை மு. அன்பு நன்றியுரை யாற்றினார்.

### திருவண்ணாமலை

19.3.2007 திங்கள் கிழமை காலை 11 மணியளவில் அடக்குமுறை சட்டமான தேசப் பாதுகாப்பு சட்டத்தை எதிர்த்து திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் பெரியார் சிலை அருகில் திருவண்ணாமலை மாவட்ட அமைப்பாளர் அ.தமிழ்தாசதுரை தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தை குறித்து விழுப்புரம் ந. அய்யனார் பேசிய பின்பு தா. சிவக்குமரன் (தமிழ்நாடு தேசிய இளைஞர் பேரவை), சேத்துப்பட்டு சு.கலைவாணன், எடுத்துனூர் ராமசெயம், சௌந்தரராசன் (பாரதிதாசன் புத்தக நிலையம்), தமிழ் மணி (புரட்சிகர இளைஞர் முன்னணி), ம. வர்கீசு (மாவட்ட அமைப்பாளர் அம்பேத்கர் புரட்சிகர முன்னணி), ஏழுமலை (மாவட்டத் தலைவர் அம்பேத்கர் பேரவை), தேவராசு (பகுத்தறிவாளர் கழகம்), எ.வி சுப்பிரமணி (பி.எஸ்.பி. மாவட்டத் தலைவர்), எழுச்சி கவிஞர் தா. நெஞ்சிற்கினியன் (மாநில தலைவர் இந்திய ஜனநாயக கட்சி) ஆகியோர் உரையாற்றியதை தொடர்ந்து விடுதலை சிறுத்தைகளின் மாவட்ட அமைப்பாளர் பி.கா. அம்பேத்வளவன் கண்டன உரை நிகழ்த்தினார்.

ஆர்ப்பாட்டத்தில் 70க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். விழுப்புரம் மாவட்டத்திலிருந்து மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, குப்புசாமி, அ.முருகன், ராசா, மு.அன்பழகன், உள்பட பல்வேறு தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். ந. ரவிவர்மா ஒலி ஒளி அமைத்து தந்தார். ஆ. ராமர் பொது மக்களிடையே ஆர்ப்பாட்ட துண்டறிக்கை களை கொடுத்து பிரச்சாரம் செய்தார். வ. செல்வராசு நன்றி கூறினார்.

### திருப்பூரில்

திருப்பூர் நகராட்சி அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஆட்சிக் குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி தலைமை தாங்கினார். ஆட்சிக்குழு உறுப்பினர் இரா. மனோகரன், வடக்கு மாவட்டத் தலைவர் துரைசாமி, தெற்கு மாவட்ட செயலாளர் கருமலையப்பன், கோவை மாநகர செயலாளர் கோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டார செயலாளர் இரவி, ஆதித்தமிழர் பேரவை பவுத்தன், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் கணேசன், நகர செயலாளர் இராசேந்திரன், தென்மொழி அவையம் துரையரசனார் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். அங்குமார், அகிலன், பாண்டியநாதன், சரவணமூர்த்தி, சந்திரா, லாவண்யா, விசயன், யாழ் நடராசன் உட்பட 100க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## தீ மிதித்த தி.மு.க. எம்.எல்.ஏ.

ஈரோடு மாவட்டம் சத்திய மங்கலம் அருகே உள்ள பன்னாரி மாரியம்மன் கோயிலில் தீமிதி நடந்து முடிந்திருக்கிறது. இந்தக் கோயிலில் ஒரு முறை அந்தியூர் செல்வராசு என்ற தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் தீ மிதித்த போது கலைஞர் காட்டுமிராண் டித்தனம் என்று அதைத் துணி வோடு சுட்டிக் காட்டினார்.

நேற்று முன் தினம் நடந்த அதே கோயில் 'தீமிதி'யில் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் எல்.பி. தர்மலிங்கம், பக்தி பரவசத்தோடு தீமிதித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சி சட்டமன்ற உறுப்பினர் விடியல் சேகர், முன்னாள் அ.தி.மு.க. எம்.பி. கே.கே.காளியப்பன், காவல் துறை அதிகாரி சோனல் மிஸ்ரா (இவர்தான் ஈரோடு மாவட்டக் கழகத் தோழர்கள் மீது தேசப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவிய அதிகாரி), அறநிலையத் துறை ஆணையர் பத்மநாபன் என்று அரசு அதிகாரிகளும் தீ மிதித் துள்ளனர்.

தீ மிதிப்பது எனும் மூட நம்பிக்கைக்கு உரமூட்டி வளர்ப்பதுதான் அரசு அதிகாரி களின் வேலையா ? பெரியார் ஆட்சி நடப்பதாகக் கூறிக் கொண்டு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினரே, தீக்குழியில் இறங்கியுள்ளாரே ?

அந்தியூர் செல்வராசைக் கண்டிப்பது போல் - கலைஞர் இவரையும் கண்டிப்பாரா ?

விஞ்ஞான மனப்பான்மையை வளர்க்க வேண்டும் என்கிறது அரசியல் சட்டம். மதச்சார்பற்ற அரசின் அதிகாரிகளோ, மூட நம்பிக்கையின் தூதுவர்களாக செயல்படுகிறார்கள் !

வெட்கக்கேடு !

## 'தலித்' ஓதுவாருக்கு அவமதிப்பு

அறநிலையத் துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது - சென்னை நுங்கம் பாக்கத்திலுள்ள அகத்தீசுவரன் கோயில். இந்தக் கோயிலில் தேவாரம் பாடும் ஓதுவாராக - தலித் சமூகத்தைச் சார்ந்த கதிர்வேல் நியமிக்கப்பட்டார். அரசு இசைக் கல்லூரியில் முறையாக தேவாரம் பயின்று, தமிழில் முதுகலைப் பட்டம், கருநாடக இசையில் சான்றிதழ் பெற்றவர் கதிர்வேலு. ஓதுவார் பணியில் முதல் முதலாக தமிழ்நாட்டுக் கோயிலில் நியமனம் பெற்றுள்ள தலித் இவர் தான். முதலில் இவரின் சாதி தெரியாத பார்ப்பன அர்ச்சகர்கள் மரியாதையுடன் நடத்தினர். சாதி தெரிந்த பிறகு அவமதிப்புக் குள்ளாக்கப்படுகிறார். அறநிலையத் துறையும் பணி நிரந்தரம் செய்ய மறுத்து வருகிறதாம். கர்ப்பகிரகத்துக்கு வெளியே நின்று, ஒரு தலித் தேவாரம் பாடுவதையே பொறுக்காத பார்ப்பன அர்ச்சகர்கள், கர்ப்பக்கிரகத்துக்குள் அனுமதிப்பார் களா ? அறநிலையத்துறை இதில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதுதான் கேள்வி.


"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
☎ 2451 2857, 2461 6233


## தொடரும் போர்!

*– தமிழேந்தி –*

*எத்தனை எத்தனை ஆண்டுகள் தொடரும்*
*இந்த மண்ணில் 'சாதி'ப்போர்?*
*எத்தனை ஆண்டுகள் தொடர்ந்தால் என்ன,*
*பார்ப்பனர் தாமே சாதிப்போர்?*

*சட்டம் நீதி ஆட்சி எல்லாம்*
*தர்ப்பைப் பூணூல் சொற்படியே!*
*பட்டம் பதவி படிப்புகள் எல்லாம்*
*பார்ப்பா னின்மனு நூற்படியே!*

*இடஒதுக்கீட்டுக் கேடர்கள் காங்கிரசுத்*
*தலைமையில் இருந்த எத்தர்களே!*
*படமெடுத் தாடும் பாம்பாய் நேரு*
*பரம்பரை வந்த பார்ப்பனரே!*

*எல்லாம் தெரிந்தும் நேரு மகான்(!) தான்*
*இந்தச் செய்தியில் குழிபறித்தார்*
*கல்வி தராமல் சூத்திர மக்களைக்*
*காயடித்து விழி பறித்தார்.*

*நீதி பதியாய் அமர்ந்தால் போதுமா*
*நிகழ் காலத்தின் அறிவிலையா?*
*சாதி வாரிக் கணக்கெடுப் பதனைத்*
*தடுத்தவன் இங்கெவன் தெரியலையா?*

*ஒதுக்கீட் டால்பிறர் உரிமை கெடுவதை*
*ஒப்பேன் என்று குதிக்கின்றாய்*
*இதுவரை கொழுத்தவை எல்லாம் சாதி*
*எருமைகள் என்பதை மறக்கின்றாய்.*

*கிழியக் கிழியப் பக்க பக்கமாய்*
*ஆயிரம் விளக்கம் கிளத்துகிறாய்*
*வழிய வழியக் கொழுத்துத் தின்னும்*
*வயிறுகள் பார்த்தும் பிதற்றுகிறாய்.*

*இடுப்பை ஒடிக்க இப்போது நீ*
*சாதிக் கணக்கை எடுக்கின்றாய்*
*படித்து முடித்தவன் எல்லாம் பார்ப்பான்*
*என்பது தெரிந்தும் நடிக்கின்றாய்.*

*வாக்குக் கட்சிகள் வீராப் பெல்லாம்*
*வந்து போகும் தேர்தல்வரை*
*நோக்கம் முடிந்து கோட்டை சென்றால்*
*'நாலோர்' போல வாழ்க்கை முறை*

*பிச்சை யல்ல பிறப்புரிமை இது*
*நிலமே பெயர்ந்திட எழுந்திடுவோம்*
*செத்தாலும் பகை சாய வைத்து*
*மண்ணில் விழுந்து உயிர் விடுவோம்.*

## கொள்ளைக்கு துணைப் போவதா?

தமிழ்நாட்டில் மொத்தம் 14 அரசு மருத்துவக் கல்லூரிகளும் 7 தனியார் மருத்துவக் கல்லூரிகளும் உள்ளன. தனியார் மருத்துவக் கல்லூரிகளில் 65 சதவீத இடங்கள் அரசு கவுன்சிலிங் மூலம் நிரப்பப் படுகின்றன. இந்த தனியார் கல்லூரிகளில் அரசு கவுன்சிலிங் மூலம் சேரும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தை நிர்ணயிக்கும் நீதிபதி இராமன் குழு, ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயாக கட்டணத்தை நிர்ணயித்தது. இதுவே மிக அதிகமான கட்டணம்.

ஆனால் தனியார் கல்லூரிகளோ, ரூ.4 லட்சம் கட்டினால் தான் அனுமதி என்று கூறி விட்டன. எப்படியோ முதல் வருடம் கடன் வாங்கி, பெற்றோர்கள் ரூ.4 லட்சம் கட்டணத்தை செலுத்தினர். இரண்டா மாண்டு கட்டணம் கட்ட முடியவில்லை. அரசுக்கு பெற்றோர்கள் மனுப்போட்டும், அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ராமன் கமிட்டி நிர்ணயித்த கட்டணத்தை எதிர்த்து தனியார் கல்லூரி நிறுவனங்கள், உயர்நீதிமன்றத்தில் தடை வாங்கிவிட்டன. இந்தத் தடையை நீக்க வேண்டும் என்று தமிழக அரசு, நீதிமன்றத்தில் எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

தனியார் மருத்துவக் கல்லூரிகளின் கொள்ளைக்கு தமிழ்நாடு அரசு துணை போவது சமூகநீதியா ? அன்றாடம் தமிழக அரசுக்கு 'சமூக நீதியில்' அறிவுரையும் வாழ்த்துரையும் வழங்கிக் கொண் டிருக்கும் 'வீரமணியார்கள்' இந்தக் கொள்ளையைப் பற்றி மவுனம் சாதிப்பது ஏன் ? அவர்களும், இப்படி கல்வி வியாபாரம் நடத்துவதாலா ?

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# [illegible]

முதல் பக்கத் தொடர்ச்சி

ஒதுக்கீடு, அங்கே நீடிக்கிறது என்ற உண்மையும், தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினருக்கான இடஒதுக்கீட்டில் பாதியளவுக்குக்கூட பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் அப்போது வெளிச்சத்துக்கு வரும். இப்படி ஒரு கணக்கெடுப்பை - மத்திய மனித வளத்துறை அமைச்சகம் எடுத்ததாக - சில மாதங்களுக்கு முன் செய்தி வெளிவந்தது. அப்படி எடுக்கவில்லையானால், கணக்கெடுப்பை நடத்தி மத்திய மனித வளத்துறை அமைச்சகம் அதை மக்கள் மன்றத்தில் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள் கிறோம்.

அதே போல் - உச்சநீதிமன்ற உயர்நீதி மன்ற நீதிபதிகளிலும், சாதிவாரியான கணக்கெடுப்பு எடுக்கப்பட்ட வேண்டியதும் அவசியமாகும்.

பொதுப் போட்டியில் இடங்கள் பாதிக்கப்படாத அளவுக்கு, அதிகரிக்கப்பட்டுள்ளன என்ற அரசின் வாதத்தை உச்சநீதிமன்றம் ஏற்க மறுத்துவிட்டது. இடஒதுக்கீடே இல்லாமல், இடங்கள் அதிகரிக்கப்பட்டிருக்குமானால், பொதுப் போட்டியில் இன்னும் கூடுதல் இடங்கள் கிடைக்குமே என்று, நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். இதிலிருந்து நீதிபதிகள், பொதுப்போட்டியில் இடம் பிடிக்கும் பார்ப்பன உயர்சாதியினர் நலன் சார்ந்தே, இந்தப் பிரச்சினையை அணுகியிருப்பது உறுதியாகிறது. காலம் காலமாக உயர் கல்வியில் நுழைய முடியாமல் தடுக்கப்பட்டுள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைகள் பற்றி இவர்களுக்கு கிஞ்சித்தும் கவலை இல்லை!

1950-ல் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கை விசாரித்தவர்களில் ஒருவரான விசுவநாத சாஸ்திரி என்ற பார்ப்பன நீதிபதி, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை அமுல்படுத்துவதால், பார்ப்பன உயர்சாதி மாணவர்களுக்கு கிடைக்காமல் போன இடங்களைப் புள்ளி விவரங்களோடு குறிப்பிட்டு, வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ரத்து செய்தார். அதே கண்ணோட்டத்தில் தான், இப்போது உச்சநீதிமன்றமும், பொதுப் போட்டி இடங்கள் குறைவதற்காக கண்ணீர் வடிக்கிறது.

உச்சநீதிமன்றம் வெளியிட்டுள்ள மற்றொரு கருத்து, பிற்படுத்தப்பட்டோரை கிரிமிலேயர் வைத்து ஏன் வடிகட்டக்கூடாது என்பதாகும்! மத்திய அமைச்சரவை கொள்கை ரீதியாக எடுத்த முடிவை கேள்விக் குள்ளாக்குகிறது உச்சநீதிமன்றம்.

> பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கு சரியான புள்ளி விவரம் இருக்கிறதா என்று கேட்கும் உச்சநீதி மன்றம், கிரிமிலேயர்கள் பிரிவினர் அதிகம் இடம் பிடிக்கிறார்கள் என்பதற்கு புள்ளி விவரம் வைத்திருக்கிறதா?

உயர்கல்வி நிறுவனங்களில் தற்போது - தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு மட்டுமே இடஒதுக்கீடு இருக்கிறது. ஏனைய பொதுப் போட்டிகளில் வசதிப் படைத்த பிற்படுத்தப்பட்டவர்கள் (கிரிமிலேயர்) அதிக அளவில் இடம் பிடித்துள்ளார்கள் என்பதற்கு, நீதிமன்றம் ஏதாவது புள்ளி விவரம் வைத்திருக் கிறதா?

பிற்படுத்தப்பட்டோர் எவரும் நுழையவே முடியாத 'அக்கிரகாரங்களாக'வே உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிலையில் 'வடிகட்டி' எடுக்கக்கூடிய 'கிரிமிலேயர்' பற்றி சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லையே! பிற்படுத்தப்பட்டோர் எண்ணிக்கைக்கு சரியான புள்ளி விவரம் இருக்கிறதா என்று கேட்கும் உச்சநீதி மன்றம், கிரிமிலேயர்கள் பிரிவினர் அதிகம் இடம் பிடிக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தும் புள்ளி விவரம், தகவல்கள் ஏதுமில்லாமலே, 'கிரிமிலேயரை' கொண்டுவர வேண்டும் என்று கோருவது என்ன நியாயம்?

'கிரிமிலேயர்' பிரிவினர் திறந்த போட்டியில் - முன்னேறிய சாதியினரின் இடங்களையும் பறித்துக் கொள்கிறார்கள் என்று, ஒரு பார்ப்பனர் ஆசிரியருக்கு கடிதம் பகுதியில் ('இந்து' ஏப்.4) புலம்பியுள்ளனார். 'கிரிமிலேயர்' எனும் பார்ப்பனக் கூப்பாட்டுக்குக் காரணம் பிற்படுத்தப்பட்டோர் நலன் அல்ல என்பது இப்போது புரிகிறதா!

உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள வேறு சில கருத்துகள் பிற்படுத்தப்பட்ட மக்களை அவமதிப்பதாகவே உள்ளது.

"உலகில் எந்த ஒரு பகுதியிலாவது, தங்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உறுதி செய்வதற்குப் போட்டி போடும் கூட்டம் இருக்கிறதா? அல்லது - உன்னைவிட நான் மிகவும் பின்தங்கியவன் என்று உரிமை கோருகிறார்களா? என்று தீர்ப்பில் நீதிபதிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

"உன்னைவிட - பிறப்பில் நான் உயர்ந்தவன், பிறக்கும் போதே எனது உயர்வு நிலைநாட்டப்பட்டுவிட்டது. உயர் கல்வியைப் பெறுவதற்கு உன்னைவிட நானே தகுதியுள்ளவன்" என்று இறுமாப்போடு கூறிக் கொள்ளும் கூட்டம் உலகில் வேறு எங்கேயாவது உண்டா? இந்தக் கூற்றுக்கு நீதிமன்றத்தின் பாதுகாப்பும் உண்டு என்று நீதி வழங்கக்கூடிய நீதிபதிகள் உலகில் எந்த நாட்டிலாவது இருப்பார்களா என்ற கேள்வியைத்தான் நாம் இந்த நீதிபதிகளை நோக்கி எழுப்ப வேண்டியிருக்கிறது.

பிற்படுத்தப்பட்டோர் என்பதற்கான வரையறையையும், அவர்களுக்கு 27 சதவீத அளவிலான இடஒதுக்கீடு வழங்கலாம் என்பதையும் மண்டல் பரிந்தரை வழக்கில், உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் அடங்கிய 'பெஞ்ச்' ஏற்றுக் கொண்டப் பிறகு, 2 நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச், அதையே இப்போது கேள்விக்குள்ளாக்குகிறது!

இந்த நிலையில் தமிழ்நாடு மட்டுமே இது 'பெரியார் மண்' என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியிருக்கிறது! - தமிழகம் காட்டிய வழியில் ஆந்திராவும் முழு அடைப்பு செய்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மார்ச் 29 ஆம் தேதி உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன், 31 ஆம் தேதி முழு அடைப்பு நடத்தி, உச்சநீதி மன்றத் தீர்ப்புக்கு தமிழகம் பதிலடி கொடுத்திருக்கிறது. உடனடி நடவடிக்கையில் இறங்கிய தமிழக முதல்வரையும் அனைத்துக் கட்சியினரையும் ஒடுக்கப்பட்ட மக்கள் நிச்சயம் பாராட்டுவார்கள்.

நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன் - சி.என்.என். தொலைக்காட்சியின் ஒரு செய்தியாளர் - 'தமிழ்நாட்டிலிருந்து இன்னும் கருத்துகள் வரவில்லை. ஆனாலும் ஆபத்து வந்துவிட்டதற்காக புலி கண்ணீர் சிந்தாது' என்று அழகாகக் கூறினார். ஆம்! புலியின் உறுமல், தமிழ்நாடு முழுவதும் 31 ஆம் தேதி எதிரொலித்தது.

அய்.அய்.டி., அய்.அய்.எம். போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் - தகுதியின் அடையாளங்களாம். திறமைகளின் மய்யங்களாம். எனவே, அங்கே இடஒதுக்கீடு வரக்கூடாது என்று 'இந்து' ஏடு (ஏப்.3) தலையங்கம் தீட்டி தனது பார்ப்பன புத்தியை காட்டிவிட்டது. இட ஒதுக்கீட்டின் கீழ் வரும் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எல்லோருமே தகுதியற்றவர்கள் என்று, அவமானப்படுத்துகிறார்கள். இந்த உயர்க் கல்வி நிறுவனங்களில் அரசு செலவில் கல்வி பயின்ற "தகுதி திறமையானவர்கள்" வெளிநாட்டுக்கு சேவை செய்ய ஓடு கிறார்கள். இதனால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் இழப்பு 88,000 கோடி அன்னியச் செலாவணி இழப்பு ஏற்படுவதாக என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

பார்ப்பனர்கள் ஆதிக்கம் எங்கே இருக்கிறது என்று பேசுவோர் இப்போதாவது கண் திறந்து பார்க்கட்டும்!

பார்ப்பனர்களைப் பொறுத்தவரை தங்களின் உயர் கல்வி ஆதிக்கத்தை அவ்வளவு எளிதில் விட்டுத்தர மாட்டார்கள். ஒடுக்கப்பட்டோர் போராட்டம் மேலும் தீவிரமாக வேண்டும். திறக்கப்படாத கதவுகளை உடைப்பதைத் தவிர வேறு வழியில்லை!

# சிப்பாய் கலகம் 'சுதந்திர'ப் போராட்டமா?

பிரிட்டிஷாரை எதிர்த்து 1857 களில் நடந்த சிப்பாய் கலகம், முதல் சுதந்திரப் போராட்டம் என்று குறிப்பிடப்படுகிறது. அது மதக் கலவரமே தவிர, சுதந்திரப் போராட்டமல்ல என்றார் பெரியார்.

இப்போது மத்திய அரசு முதல் சுதந்திரப் போராட்டம் என்று கூறப்படும், அந்தப் போராட்டத்தின் 150வது ஆண்டை கோலாகலமாகக் கொண்டாட பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

இதை இந்தியாவின் முதல் சுதந்திரப் போராட்டமாக முதன்முதலில் குறிப்பிட்டவர் காரல் மார்க்ஸ் தான். இந்தியாவில் இந்தப் போராட்டத்தின் உண்மையான பின்னணி பற்றி துல்லியமாக அறியும் வாய்ப்பு அவருக்கு இல்லை.

1674 ஆம் ஆண்டிலிருந்தே தென்னகத்தில் ஆங்காங்கே கலவரங்கள், போராட்டங்கள் வெடித்திருந்தாலும் அவை எல்லாமுமே இந்தியாவின் சுதந்திரத்துக்கான போராட்டம் அல்ல.

அண்மையில் 'தென்னிந்திய வரலாற்று காங்கிரஸ்' டில்லியில் கூடியது. அதில் பிரபலமான 6 சரித்திர ஆய்வாளர்கள் பங்கேற்று, 1857-லும், அதற்கு முன்பும் நடந்த கலவரங்கள், சுதந்திரத்துக்கான போராட்டமல்ல என்று அறிவித்துள்ளனர்.

அப்போது, இந்தியா என்ற நாடே உருவாகவில்லை. பல்வேறு நாடுகளாக, பிரிந்திருந்தது. எனவே அப்போது நடந்த கலவரங்களை இந்தியாவுக்கான சுதந்திரப் போராட்டம் என்று கூற முடியாது.

ஒவ்வொரு கலவரத்துக்கும் வெவ்வேறு காரணங்கள் இருக்கின்றன என்று அந்த சரித்திர ஆய்வாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதையே பெரியார் கூறியபோது, பார்ப்பனர்கள் - 'தேச விரோதி' என்றார்கள். இப்போது வரலாற்று ஆசிரியர்களே கூறும்போது, வாய்மூடிக் கிடக்கிறார்கள்.

இது பற்றிய விரிவான கட்டுரை ஒன்றை 'இந்து' ஞாயிறு இதழில் (மார்ச் 25) வெளி வந்திருக்கிறது.


# சுப்ரமணியம் – கல்பனா மணவிழா

கிருட்டினகிரி மாவட்டம் பாண்டவர் குட்டை கழகத் தோழர் பா.க.சுப்ரமணியம் (விரிவுரை யாளர், தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்) - கிருட்டினகிரி மாவட்டம் கொங்கனேரி மு. கல்பனா (விரிவுரையாளர், இசுலாமியா மகளிர் கல்லூரி, வாணியம்பாடி) ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தம் 9.2.2007 காலை திருப்பத்தூரில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சிறப்புடன் நடைபெற்றது. மணவிழாவையொட்டி மணமக்கள் 'பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்கு ரூ.1000 நன்கொடை வழங்கினர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 07th April 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஏப்ரல் 12, 2007 புரட்சி 4 முழக்கம் 70 விலை : ரூ.2.50


## அர்ஜுன் சிங் அதிரடி நடவடிக்கை

# பார்ப்பன வட்டாரம் அதிர்ச்சி

உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை நடைபெறவிருக்கும் நேரத்தில் - பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டுக்கு உச்சநீதி மன்றம் இடைக்காலத் தடைவிதித்தவுடன் பார்ப்பன வட்டாரங்கள் மகிழ்ச்சிக் கடலில் குதித்தன. உயர் கல்வி நிறுவனங்களில் பார்ப்பனர்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர். ‘இந்து’ பார்ப்பன நாளேடு, ‘தகுதி திறமை’ மய்யங்களான அய்.அய்.டி., அய்.அய்.எம். போன்ற நிறுவனங்களில் இடஒதுக்கீடுகள் நுழையக் கூடாது என்று தலையங்கம் தீட்டி, தனது பார்ப்பன புத்தியை வெளிப்படுத்தியது. இந்த நிலையில், தமிழகம் முழு அடைப்பு நடத்தி, எதிர்ப்பைப் பதிவு செய்தது. ஆந்திராவிலும் முழு அடைப்பு வெற்றிகரமாக நடந்துள்ளது.

மத்திய அமைச்சரவை கூடி, நீதிமன்றம் தடையை நீக்குவது பற்றி பரிசீலித்தது. இந்த நிலையில், மத்திய மனித வளத் துறை அமைச்சர் அர்ஜுன்சிங், பாராட்டத்தக்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். அடுத்த அறிவிப்பு வரும் வரை உயர்கல்வி நிறுவனங்கள், மாணவர் சேர்க்கையை நிறுத்தி வைக்குமாறு மத்திய மனித வளத்துறை அமைச்சகம் அய்.அய்.டி., அய்.அய்.எம். மற்றும் மத்திய அரசின் உதவி பெறும் நிறுவனங்கள் அனைத்துக்கும் உத்தரவிட்டுள்ளது. மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மை உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் இந்த உத்தரவு பொருந்தும்.

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள இடைக்காலத் தடையில் 27 சதவீத அடிப்படையில் பிற்படுத்தப்பட்டோரை சேர்ப்பதற்கு, தடைவிதிக்கப்படவில்லை என்றும், எனவே, மாணவர் சேர்க்கையை தொடரலாம் என்று வீரப்ப மொய்லி கருத்து தெரிவித்திருந்தார். இந்த நிலையில் உயர்கல்வி நிறுவனங்கள் அவசர அவசரமாக உச்சநீதிமன்றத் தடையைக் காட்டி, இடஒதுக்கீடு இல்லாமலே, அனுமதியைத் தொடங்க திட்டமிட்டிருந்தன. இந்த நிலையில் அர்ஜுன் சிங் சமூகநீதிக் கண்ணோட்டத்தில் மேற்கொண்ட இந்த சரியான நடவடிக்கையால் பார்ப்பன வட்டாரங்கள் அதிர்ச்சி அடைந்தள்ளன.

இதற்கிடையே நீதித் துறை எல்லை மீறக் கூடாது என்று பிரதமர் மன்மோகன் சிங்கும் டில்லியில் நடைபெற்ற மாநில முதல்வர்கள் மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதிகள் மாநாட்டில் பரபரப்பாகப் பேசியுள்ளார். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி முன்னிலையிலேயே பிரதமர் பேசியது குறிப்பிடத்தக்கதாகும்.

நாடாளுமன்றம், நீதித் துறை மற்றும் நிர்வாகம் ஆகிய மூன்று தூண்களுக்கும் இடையிலான மெல்லிய கோட்டைத் தாண்டி நீதித்துறை செயல்படுவது கூடாது. எல்லை மீறி செயல்படுவது இந்தத் தூண்களிடையே பிரிவினையை உருவாக்கும். அரசியலமைப்புச் சட்டத்தின் இதர அமைப்புகளின் செயல்பாடுகளை தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி எடுத்துக் கொள்வது குறித்து நீதித்துறை எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நீதித்துறையின் செயல்பாடு என்பதற்கும், நீதித் துறையில் எல்லை மீறல் என்பதற்கும் இடையில் மெல்லிய வேறுபாடு என்பது இருக்கிறது. இதர அமைப்புகளின் செயல்பாடுகளை தன்வசம் எடுத்துக் கொள்வது என்பது எல்லை மீறலே ஆகும்.

நீதித் துறையின் முதன்மையான பணி என்பது சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுவதே ஆகும். மேலும், அரசியலமைப்புச் சட்டத்தை செயல்படுத்துவது மற்றும் அரசியலமைப்புச் சட்டத்தின்படி எந்தவொரு அரசு அதிகார மையமும் தனது கடமைகளைச் செய்ய உதவி செய்வது என்பதும் ஆகும். இந்தப் பணிகளே நீதித்துறைக்கு பலமான அதிகாரத்தை வழங்கியுள்ளன. எனினும் அதே நேரத்தில், தனது இந்த அதிகாரத்தை அரசியலமைப்புச் சட்டத்தின் இதர அமைப்புகளின் செயல்பாடுகளை தனதாக்கிக் கொள்ள பயன்படுத்தக் கூடாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்று தூண்களும் நல்ல புரிதலுடன் செயல்படாவிட்டால், நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும் சீரிய முறையில் சேவை ஆற்ற முடியாது. மூன்று தூண்களும் ஒவ்வொன்றின் அதிகாரம் மற்றும் செயல்பாடுகளை அவசியம் மதித்து நடக்க வேண்டும். அப்போதுதான் ஒரு நல்லிணக்கமான நிலைமையை உருவாக்க முடியும். ஒவ்வொரு அமைப்பிற்கும் அரசியலமைப்புச் சட்டம் வரையறுத்துள்ள பொறுப்புகளும் கடமைகளும்உள்ளன. அவற்றை ஒன்றுபட்டு நிறைவேற்ற வேண்டியுள்ளது.

மேலும், நாடு முழுவதும் சுமார் 2.5 கோடி வழக்குகள் தேங்கியுள்ளன. இவற்றை விரைந்து முடிக்க வேண்டும். 1984 ஆம் ஆண்டு குடும்ப நீதி மன்றங்கள் சட்டத்தின்படி அமைக்கப்பட வேண்டிய குடும்ப நீதிமன்றங்களை இன்னும் பல மாநிலங்கள் அமைக்காமலேயே உள்ளன. இந்த குறைபாடு உடனடியாக களையப்பட வேண்டும்.

மேலும், சமீப காலத்தில் தங்களது சொந்த மற்றும் அரசியல் செல்வாக்கை கூட்டிக் கொள்வதற்காக சில சீர்குலைவு சக்திகள் பொதுநலன் வழக்குகள் தொடர்வது மோசமான கலாச்சாரமாக உருவெடுத்துள்ளது. இத்தகைய வழக்குகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு முன்பு முழுமையாக ஆராய வேண்டியது அவசியம்.

இவ்வாறு பிரதமர் மன்மோகன் சிங் கூறினார். உச்சநீதிமன்ற தலைமை நீதி அதே விழாவில் பிரதமர் பேச்சுக்கு பதிலளித்துப் பேசியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## எஸ்.வி.ஆர். மறுப்பு கட்டுரை வெளி வருகிறது

‘பெரியார் முழக்கம்’ இதழில் தோழர் எஸ்.வி.ஆர். உரைக்கு மறுப்பு தெரிவித்து - ‘தமிழர் கண்ணோட்டம்’ இதழில் தோழர் பெ.மணியரசன் எழுதிய கட்டுரைக்கு தோழர் எஸ்.வி.ஆர். எழுதும் மறுப்பு விரைவில் ‘பெரியார் முழக்கம்’ இதழில் வெளிவருகிறது.

## இந்துக் கடவுள்களை வணங்காதீர்!

அண்ணல் அம்பேத்கர் பாசிச இந்துமதத்தைவிட்டு பவுத்த மார்க்கத்தைத் தழுவினார்.



இந்தத் திட்டத்தின் அரங்கேற்றம் 1956 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி நாகபுரியில் நடைபெற்றது. 5 லட்சத்துக்கும் அதிகமான தாழ்த்தப்பட்ட மக்கள் அன்று அங்கே இந்து என்ற இழி பெயரை ஒழித்துவிட்டு பவுத்தர்கள் ஆனார்கள். அவர்களுக்கு தீட்சை அளித்தவர் டாக்டர் அம்பேத்கர்.

22 அம்சங்கள் அடங்கிய பிராமணத்தை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அந்த 22 பிராமணங்களும் வருமாறு:

1. பிரம்மனையோ, விஷ்ணுவையோ, சிவனையோ நான் கடவுள் என்று கருத மாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 2. இராமனையோ, கிருஷ்ணனையோ நான் கடவுள் என்று கருத மாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 3. இந்துத் தெய்வங்களான கவுரி, கணபதி இத்தியாதிகளை நான் கடவுள் என்று ஏற்க மாட்டேன்; அவர்களை வழிபாடு செய்யவும் மாட்டேன். 4. கடவுள் பிறவி எடுத்ததாகவோ, எந்தவொரு உருவத்தில் அவதாரம் செய்ததாகவோ நான் நம்ப மாட்டேன். 5. பகவான் புத்தர் மகா விஷ்ணுவின் அவதாரம் என்பதை நான் நம்ப மாட்டேன். அப்படிப் பிரச்சாரம் செய்வது விஷமத்தனமானது, தவறானது என்று நான் உறுதியாக நம்புகிறேன். 6. சாவு சம்பந்தப்பட்ட இந்து மதச் சடங்கான சிரார்த்தை நான் ஒரு போதும் செய்ய மாட்டேன்; இறந்தவர்களின் பெயரால் நான் பிண்டம் கொடுக்கவும் மாட்டேன். 7. பவுத்தத்தின் கோட்பாடுகளுக்கு எதிராக நான் என்றுமே நடக்க மாட்டேன். 8. பார்ப்பனர்களால் நடத்தப்படும் சமஸ்காரங்கள் எதனையும் நான் என்றுமே ஏற்றுக் கொள்ள மாட்டேன். 9. அனைவரும் சமம் என்ற கொள்கையை நாம் நம்புகிறேன். 10. சமத்துவத்தை நிலைநாட்ட நான் முயல்வேன். 11. பகவான் புத்தர் காட்டிய எட்டு அம்ச வழியை நான் பின்பற்றுவேன். 12. தம் மதத்தின் 10 பரமிதங்களையும் நான் பின்பற்றுவேன். 13. எல்லா உயிர்ப் பிராணிகளிடத்தும் நான் கருணை காட்டுவேன். அவைகளைக் காக்க முயலுவேன். 14. நான் பொய் சொல்ல மாட்டேன். 15. நான் திருட மாட்டேன். 16. காமத்தில் நான் உழல மாட்டேன்; பாலுணர்வில் அத்துமீற மாட்டேன். 17. போதைக்குக் காரணமான குடியையோ, மதுவையோ நான் அருந்த மாட்டேன். 18. ஞானம், கருணை, அறிவுரை ஆகியவற்றின் அடிப்படையிலான புத்தரின் போதனைகளுக்கு இணங்க என் வாழ்வை உருவாக்க நான் முயலுவேன். 19. பார்ப்பனர் தவிர்த்த பிற மனிதர்களை கீழான பிறவிகள் என்று கருதுவதும் சமத்துவமற்ற நிலையில் நம்பிக்கை உடையதும் மனிதர்களின் விடுதலைக்குக் கேடாக இருப்பதுமான இந்து மதத்தை நான் கைவிட்டுவிட்டு இன்று புத்தமதத்தைக் கைக்கொள்ளுகிறேன். 20. புத்த தம்மமே சிறந்த மார்க்கம் என்று நான் உறுதியாக நம்புகிறேன். 21. நான் இன்று புதிய பிறவி எடுக்கிறேன் என்று நான் நம்புகிறேன். 22. புத்த தம்மத்துக்கு இணங்கவே இன்று முதல் நான் செயல்படுவேன் என்று நான் உறுதி கூறுகிறேன்.

**(ஏப்ரல் 14, புரட்சியாளர் அம்பேத்கரின் 117-வது பிறந்த நாள்)**

## ஈழத் தமிழர் ஆதரவைக் குலைத்திட உளவு நிறுவனங்களின் சதி (4)

# மாலத்தீவில் குழப்பம் செய்த ‘ரா’

தாயகத்தின் விடுதலைக்காக போராட முன் வந்துள்ள விடுதலை இயக்கங்களின் தலைவர்களிடம், அரசிடம் ஊதியம் பெறும் அதிகாரிகள், அதிகாரத் திமிருடன், உதிர்த்த வார்த்தைகளே இவர்களின் பார்ப்பனிய அதிகாரத்துவத்தை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. திம்பு பேச்சுவார்த்தையில் போராளிகளை பங்கேற்கச்செய்வதில் பெரும் வெற்றி பெற்றுவிட்டதாகவும், இது மகத்தான சாதனை என்றும் உளவுத் துறை அதிகார வர்க்கம் பீற்றிக் கொண்டது. ஆனால் நடந்தது என்ன ? திம்பு பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே (1985-ஆகஸ்டு) ஜெயவர்த்தனா ஆட்சி, தமிழர்கள் மீது ராணுவத் தாக்குதலைத் தீவிரப் படுத்தியதோடு, போராளிகளின் மறைவிடங்களிலும், தாக்குதல்களை தொடுத்தது. செய்திகளை அறிந்த போராளிகள், பேச்சு வார்த்தையை பாதியிலேயே முறித்துக் கொண்டு வெளியேறினர்.

வெளியுறவு மற்றும் உளவுத் துறை அதிகார வர்க்கத்தின் முயற்சிகள் பெரும் தோல்வியை சந்தித்தன.

திம்புப் பேச்சு தோல்வி அடைந்த பிறகும், அதிகார வர்க்கம் தனது போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. திம்பு பேச்சு வார்த்தையின் போது போராளிகளுடன் சென்னையிலிருந்து தொலைபேசியில் (Hot line) தொடர்பு கொண்டு கருத்துகளைத் தெரிவித்து வந்தார் பாலசிங்கம் ! பேச்சு வார்த்தை முறிந்ததற்கு பாலசிங்கம் தான் காரணம் என்று உளவுத்துறை முடிவு செய்தது. பேச்சு வார்த்தை நடக்கும் போதே - தமிழர்கள் மீது ஜெயவர்த்தனா, தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியதைப் பற்றியோ, உருப்படியான திட்டங்களை ஜெயவர்த்தனா ஆட்சி முன் வைக்காதது பற்றியோ கவலைப்படாத உளவுத் துறை, போராளிகளை மிரட்டி, பணிய வைப்பதில் மட்டும் குறியாக இருந்தது. பாலசிங்கம் - திம்புவில் தொடர்பு கொண்டு பேசியதை பதிவு செய்து கண்காணித்து வந்த உளவுத் துறை, பாலசிங்கத்தின் மீது கோபம் கொண்டது. (திம்புவில் தொடர்பு கொண்டு பேசும் இணைப்புகளை உருவாக்கித் தந்ததே உளவுத் துறைதான்) கோபமடைந்த உளவுத் துறை பாலசிங்கத்தை இந்தியாவிலிருந்து நாடு கடத்த உத்தரவிட்டது. 1985 ஆக. 23 ஆம் தேதி சென்னை பெசன்ட் நகரில் விடியற்காலை யில் அன்டன் பாலசிங்கம் தங்கியிருந்த வீட்டில், அவரை கைது செய்த காவல்துறை அடுத்த நாளே விமானத்தில் ஏற்றி லண்டனுக்கு அனுப்பியது. ஏற்கனவே லண்டனுக் குப் போய்விட்ட ‘டெலோ’ ஆலோசகர்கள் சந்திரகாசன், நடேசன் சத்தியேந்திரா ஆகியோருக்கும் நாடு கடத்தல் தமிழகத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உளவு நிறுவனத்தின் கைபொம்மையாகி, ராஜீவ் ஆட்சி எடுத்த இந்த விபரீத முடிவு நாடு முழுவதும் கடும் எதிர்ப்புகளை உருவாக்கியது. தமிழ்நாடு கொந்தளித்து எழுந்தது. இதனால் அடுத்த ஆறு வாரங்களில் நாடு கடத்தல் உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

தொடர்ந்து ராஜீவ் காந்தி மேற்கொண்ட ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியிலேயே முடிந் திருக்கின்றன. உளவுத் துறையும், அதிகார வர்க்கமும் மேற்கொண்ட ‘திணிப்பு’ நடவடிக்கைகள் வெற்றி பெறாமலே போனது.

ஈழத் தமிழ்ப் போராளி குழுக்களுக்கு, இந்தியாவில் - ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டதற்கான காரணமே, இலங்கை அரசை மிரட்டி, இந்தியாவின் கட்டுப்பாட்டுக் குள் கொண்டு வருவதுதான் என்பதை, ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம்.

உளவுத் துறையின் செயல்பாடுகள், அந்த எல்லை யோடு மட்டும் நின்றுவிடவில்லை. போராளிக் குழுக் களை, வேறு பிரச்சினைகளுக்குப் பயன்படுத்திய அதிர்ச்சியூட்டும் சம்பவங்களும் உண்டு.

தென்கிழக்கு ஆசியாவில், காஷ்மீர், சிக்கிம் நாடுகளை தனது கட்டுப்பாட்டுக்குக் கீழே கொண்டு வந்த பிறகு, நேபாளம், பூட்டான் நாடுகளும், இந்திய ராணுவத் தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுவிட்டன. இலங்கையையும் தனது கட்டுப்பாட்டுக்குக் கீழே கொண்டு வரும் முயற்சிகள் தொடங்கிய நிலையில் இலங்கைக்கு அருகிலே உள்ள மாலத்தீவு மட்டும் ஒதுங்கியே இருந்தது. மாலத் தீவிலே தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருந்து வருபவர் அப்துல் ஹயூம். இந்தியாவுடன் அதிக நெருக்கமில்லாத அப்துல்ஹயூம், பாகிஸ்தானோடு மிகவும் நெருக்கமாக இருந்தவர். மாலத்தீவையும், இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர, ‘ரா’ உளவு நிறுவனம் திட்டம் தீட்டியது. அதற்கான ரகசிய திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அப்துல் ஹயூம், ஏற்கனவே ஆட்சியிலிருந்தவர்களைக் கவிழ்த்து விட்டு அதிகாரத்தைப் பிடித்தவர். அவரால், ஆட்சியி லிருந்து விரட்டி அடிக்கப்பட்டவர்கள் இரண்டு பேர். ஒருவர் சிங்கப்பூரிலும், மற்றொருவர் கொழும்பிலும் தஞ்சமடைந் திருந்தனர். இவர்களைப் பயன்படுத்தி மாலத் தீவில் கலகம் ஒன்றை உருவாக்கி, ஆட்சியைக் கவிழ்க்க திட்டங்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு - ஈழப் போராளி குழு ஒன்றையே பயன்படுத்த இந்தியாவின் உளவு நிறுவனம் ‘ரா’ (RAW - Research and Analysis Wing) முடிவு செய்தது.

> 1987 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 22 ஆம் தேதி இந்திய ராணுவத்தின் விசேட விமானம் வவுனியா வந்து, உமா மகேசுவரனை சென்னைக்கு அழைத்து வந்தது. சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள ஒரு வீட்டில் உமாமகேசுவரன் - ‘ரா’ அதிகாரிகள் ரகசிய சந்திப்பு நடந்தது.

இந்தியாவிடம் நேரடியாகப் பயிற்சிப் பெற்ற போராளிக் குழுக்களைப் பயன்படுத்தினால், பின்னணியில் இந்தியா நிற்பது புரிந்து விடும் என்பதால், இந்தியாவின் பயிற்சித் திட்டத்திலிருந்து ஒதுங்கி நின்ற உமா மகேசுவரனின் தலைமையில் செயல்பட்ட ‘புளோட்’ என்ற போராளிக் குழுவைப் பயன்படுத்த முடிவு செய்தார்கள். முதலில் - கொழும்புக்கும், சிங்கப்பூருக்கும் சென்று, அப்துல் ஹயூமின் அரசியல் எதிரிகளை சந்தித்துப் பேசி, ஒப்புதல் பெற்றது ‘ரா’ நிறுவனம்.

வவுனியாவில் செட்டிகுளம் என்ற பகுதியில் தங்கி யிருந்தார் உமா மகேசுவரன். அப்போது விடுதலைப் புலிகள் அமைப்புக்கும், உமாமகேசுவரன் அமைப்புக்கு மிடையே மோதல்கள் நடந்து கொண்டிருந்தன. 1987 ஆம் ஆண்டு, ஆகஸ்டு 22 ஆம் தேதி இந்திய ராணுவத்தின் விசேட விமானம் வவுனியா வந்து, உமா மகேசுவரனை சென்னைக்கு அழைத்து வந்தது. சென்னை ஆழ்வார் பேட்டையில் உள்ள ஒரு வீட்டில் உமாமகேசுவரன் - ரா அதிகாரிகள் ரகசிய சந்திப்பு நடந்தது. மாலத் தீவுப் பிரச்சினையை வெளிப்படையாக சொல்லாமல், தாங்கள் கூறும் பகுதியில் தாக்குதல் நடத்த வேண்டும் என்றும், அதற்குரிய பணம், ஆயுதம் வழங்குவதாகவும் ‘ரா’ பேரம் பேசியது. புலிகளுக்கு எதிராகவே, தம்மை ‘ரா’ நிறுவனம் பயன்படுத்துவதாக உமாமகேசுவரன் கருதி சம்மதம் தெரிவித்தார். ஒரு தொகை முன் பணமாக வழங்கப் பட்டது. தாக்குதல் நடத்தப்படும் இடம், நாள் ஆகியவற்றை பிறகு தெரிவிப்பதாக, ‘ரா’ அதிகாரிகள் கூறிவிட்டனர். மீண்டும் ராணுவ விமானத்திலேயே உமாமகேசுவரன் வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். ‘ரா’ நிறுவனம் தந்த பணத்தைக் கொண்டு கற்பிட்டி என்ற பகுதியில் ‘மாசிக்கருவாடு’ (இது இலங்கையில் பிரபலமான உணவு) தயாரிப்பு தொழிற்சாலை ஒன்றையும், கொழும்பின் புறநகர்ப் பகுதியில், மிகப் பெரிய கோழிப் பண்ணை ஒன்றையும் ஏற்படுத்த, உமாமகேசுவரன் முதலீடு செய்து, ‘ரா’வின் அழைப்புக்காகக் காத்திருந்தார்.

இந்த நிலையில் கோழி இறைச்சி ஏற்றுமதி வியாபாரி என்று கூறிக் கொண்டு, தனது பெயர் அப்துல்லா என்று கூறிக் கொண்டு, ஒருவர், உமாமகேசுவரனை சந்தித்தார். உமாமகேசுவரனும், ஒரு கோழி வியாபாரி என்ற முறையிலேயே பேசினார். சந்திக்க வந்தவர் - “உங்களை எனக்குத் தெரியும்; நீங்கள்தான் புளோட் தலைவர் உமாமகேசுவரன்; நான் மாலத் தீவின் குடிமகன்; மாலத் தீவில் அப்துல் ஹயூம், இஸ்லாமிய நெறிகளுக்கு எதிராக ஆட்சி நடத்துகிறார். மக்களுக்கு உரிமை இல்லை. அவரது ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும். ‘ரா’ அதிகாரிகள் தான், என்னிடம் உங்களை சந்திக்கச் சொன்னார்கள்” என்று கூறியவுடன், உமாமகேசுவரன் அதிர்ச்சியடைந்தார். “மாலத் தீவு பற்றி என்னிடம் ‘ரா’ அதிகாரிகள் எதுவும் சொல்லவில்லையே; அங்கே ஆட்சிக் கவிழ்ப்புக்கு நான் என்ன செய்ய முடியும் ?” என்று கேட்டார். “உங்களிடம் இது பற்றி பேசியிருப்பதாக ‘ரா’ அதிகாரிகள் என்னிடம் கூறினார்களே, உங்களிடம் ஏதும் கூறவில்லையா ? அவர்கள் உங்களிடம் திட்டங்களை விரிவாகக் கூறுவார்கள். நீங்கள் அவர்களுடன் பேசி, உங்கள் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளுங்கள். நம்முடைய சந்திப்பின் நினைவாக, இந்தப் பரிசை பெற்றுக் கொள்ளுங்கள்” என்று கூறி, புத்தம் புதிய ‘மெஸ்டா’ கார் ஒன்றை பரிசாக வழங்கிவிட்டு அப்துல்லா விடைபெற்றார். இடையில் ஒருவரா காலம் ஓடியது. மற்றொரு ‘ரா’ அதிகாரி, உமாமகேசுவரனை சந்தித்தார். கேரளாவின் துறைமுக நகரமான கொச்சினில் அடுத்து சந்திக்க வேண்டும்; இது வேறு யாருக்கும் தெரிய வேண்டாம் என்று கூறிச் சென்று விட்டார்.

இந்த முறை -இந்திய ராணுவ விமானத்தில் உமாமகேசுவரன் செல்லவில்லை. இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் கொழும்பிலிருந்து திருவனந்தபுரம் வந்தார். ‘ரா’ அதிகாரிகள் அவரை அங்கிருந்து காரில் கொச்சினுக்கு அழைத்துச் சென்றனர். கொச்சின் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த சிங்கப்பூர் கப்பல் ஒன்றில் இந்த முக்கிய சந்திப்பு 1987 அக்டோபர் 14 ஆம் தேதி நடந்தது. மாலத் தீவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஏன் இவ்வளவு ஆர்வம் காட்டுகிறீர்கள் என்று ‘ரா’ அதிகாரிகளிடம் உமாமகேசுவரன் கேட்டார். அதற்கு ‘ரா’ அதிகாரிகள் இவ்வாறு பதிலளித்தனர்:

“இந்தியா மிகப் பெரிய நாடு; ராஜீவ் ஆசியாவிலேயே பெரும் தலைவராக வளர்ந்து வருகிறார். ஆனால், இது ஜெயவர்த்தனாவுக்கோ, சிங்கள அரசியல்வாதி களுக்கோ தெரியவில்லை. நாங்கள் அவர்களுக்கு இதைப் புரிய வைக்க வேண்டும். தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் செல்வாக்கு பெற்று, எல்லா இடங்களிலும் ஊடுருவி விட்டார்கள். இந்த நிலையில் ஜெயவர்த்தனா - ஜெ.வி.பி. - விடுதலைப் புலிகளுக்கு நாங்கள் பாடம் கற்பிக்க விரும்புகிறோம்; அதற்கு ஒரு தளம் வேண்டும்; எனவே தான் மாலத் தீவைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்; ஏற்கனவே, ஆட்சி அதிகாரத்திலிருந்து இறக்கப்பட்ட தற்போதைய அதிபரின் அரசியல் எதிரிகளை முன்னிறுத்தி இதை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்.

இதை நீங்கள் வெற்றிகரமாக செய்து முடித்து விட்டால், மாலத் தீவிலுள்ள இரண்டு தீவுகளை நீங்கள் தளமாகப் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடு செய்கிறோம். அந்தத் தீவிலிருந்து கிடைக்கும் வருமானத்தையும் நீங்களே எடுத்துக் கொள்ளலாம்” என்று உமாமகேசு வரனுக்கு நம்பிக்கை ஊட்டினார்கள். மூன்று மணி நேரப் பேச்சு வார்த்தைக்குப் பின்பு உமாமகேசுவரன் மாலத் தீவில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு சம்மதித்தார். “பாலத்தீன மக்கள் விடுதலை முன்னணியிடம் பயிற்சி பெற்றவர்கள் என்னிடம் இருக்கிறார்கள்; எனக்குத் தேவை ஆயுதமும், பணமும் தான்” என்று உமாமகேசுவரன் கூறினார். “அது பிரச்சினையல்ல, கொழும்பில், உங்களுக்கு முதல் கட்டமாக அப்துல்லா (அவரும் அப்போது உடனிருந்தார்) ஒரு கோடி ரூபாய் இலங்கைக் காசு தருவார். எல்லாம் முடிந்த பிறகு ரூ.10 கோடி இலங்கைக் காசு தருகிறோம். அடுத்த வாரம் ஆயுதங்கள் உங்கள் கைகளில் கிடைக்கும்” என்று ‘ரா’ அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆயுதங்களை எங்கே வைப்பீர்கள் என்ற கேள்வியை ‘ரா’ அதிகாரிகள் கேட்டனர். மன்னார் மாவட்டத்தில் எங்கள் கட்டுப்பாட்டுப் பகுதியில் வைத்துக் கொள்கிறோம் என்றார், உமாமகேசுவரன். விடுதலைப் புலிகள் உங்கள் பகுதியில் ஊடுருவி, தாக்குதல் நடத்தினால் என்ன செய்வீர்கள் என்று ‘ரா’ அதிகாரிகள் கேட்டனர். சற்று நேரம் அவர்களே யோசித்துவிட்டு, “உங்கள் கட்டுப் பாட்டுப் பகுதிகளை விடுதலைப் புலிகள் கைப்பற்றாமல் இருக்க இந்திய அமைதிப்படையின் கட்டுப்பாட்டின் கீழ் அதைக் கொண்டு வந்து விடுகிறோம்” என்று கூறினர். அந்தப் பகுதி அப்போது அமைதிப் படையின் கட்டுப் பாட்டின் கீழ் வராமல் இருந்தது.

அதன்படி கொச்சின் சந்திப்புக்குப் பிறகு, புளோட் முகாம்கள் இருந்த முள்ளி குளம், செட்டிகுளம், முருங்கன்

4 ஆம் பக்கம்

# தமிழ்ப் புத்தாண்டு சித்திரைக்கு மாறியது எப்படி?

*(தை மாதம் முதல் நாளைத் தான்தமிழர்களுக்கான புத்தாண்டு நாளாகக் கொண்டாட வேண்டும் என்று ஏன் கூறுகிறோம் – என்பதற்கான காரணங்களை எடுத்துரைக்கிறது, இக்கட்டுரை)*

“முன் காலத்தில் வருடப் பிறப்புச் சித்திரை முதல் நாளாக இருந்ததில்லை. தை முதல் நாளைத் தான் வருடப் பிறப்பாகப் பெரியோர்கள் கொண்டாடினார்கள். அந்த நாள் முதல் எல்லோருடைய வாழ்வும் பல வகையிலும் புதிய வாழ்வாக இருக்க வேண்டும் என்று ஏற்படுத்தினார்கள். உண்ணுவதிலும் புதுமை, உடுப்பதில் புதுமை, வீட்டில் புதுமை, மனதிலும் புதுமை, புதிய பச்சரிசியை பொங்குவார்கள். புதிய ஆடைகளை வாங்கி உடுப்பார்கள். வீட்டுக்கு வெள்ளை அடித்து அழகு செய்வார்கள். தெருவில் புது மண் போட்டு, செம்மண் இட்டு, ஒழுங்கு செய்வார்கள். ஊரெல்லாம் திருவிழா நடத்துவார்கள். இப்படி நகரங்களில் புத்தாண்டு பிறப்பாக பொங்கல் கொண்டாடுகிறார்கள்.”

... தை முதல் நாள் தான் தமிழர்களுக்கு புத்தாண்டாக இருந்தது என்பதை நடைமுறை உதாரணங்களோடு இப்படி விளக்கிக் காட்டியுள்ளவர் டாக்டர் மு. வரதராசனார்.

பழந்தமிழர்கள் தங்களது அறிவுக்கு உகந்தவாறு காலங்களைக் கணித்தார்கள். மழை, வெயில், குளிர், பனி, தென்றல், வாடை இவை மாறி மாறிப் பருவ காலங்களில் இயற்கை மனிதனை ஆண்டு வந்ததால் தமிழர்கள் ஒரு வருடத்தை ‘ஆண்டு’ என்று குறிப்பிட்டனர். அவ்வாறே தன்னை ஆள்பவனையும், வணங்கும் கடவுளையும் ஆண்டவன் என்று குறிப்பிட்டனர். ஒரு ஆண்டை தமிழன் ஆறு பருவ காலமாகப் பிரித்தான். இளவேனில் (தை மாசி), முதுவேனில் (பங்குனி, சித்திரை), கார் (வைகாசி, ஆனி), கூதிர் (ஆடி, ஆவணி), முன்பனி (புரட்டாசி, அய்ப்பசி), பின் பனி (கார்த்திகை மார்கழி) . தமிழன் தன் வாழ்வை இளவேனிற் காலத்தில் தொடங்கினான். இதையே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். எனவே தை மாத முதல் நாளே ஆண்டின் துவக்கமாகக் கொண்டான். இவை தை முதல் நாளே தமிழர்களுக்கான புத்தாண்டு என்பதற்கான வாழ்வியல் காரணங்கள்.

தமிழர்களின் காலக் கணக்கீட்டைக் கொண்டும், இந்தக் கருத்தை நியாயப்படுத்த முடியும். காலக் கணக்கீட்டிற்கு அடிப்படையாக இருப்பது சூரியன்தான். பகல், இரவு, நாள், கிழமை, பருவம், ஆண்டு எல்லாமே சூரியன் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டே கணக்கிடப்படுகின்றன. சூரியனைச் சுற்றி பூமியும், மற்ற கோள்களும் சுற்றினாலும், பூமியில் உள்ளவர்கள் பார்வையில் சூரியன் காலையில் எழுகிறது. மாலையில் மறைகிறது. சந்திரன் தேய்கிறது, வளர்கிறது. நட்சத்திரங்களின் இருப்பிடங்கள், கோள்களின் நிலைகள்... மனிதர்களின் பார்வையில் மாறுகின்றன. இந்தப் பார்வையில் தெற்கே சென்ற சூரியன், வடக்கு நோக்கித் திரும்புகிற நாள் தை முதல் நாளாக, புத்தாண்டின் துவக்கமாகத் தமிழர்களால் ஏந்தப்பட்டது. சூரியன் வடக்கு நோக்கித் திரும்புவது தான் தமிழர்கள் வாழும் பகுதியில் நிகழ்வதால் தமிழர்கள், தங்களின் வானியல் கணிதப்படி அதுவும் தை மாதத்தில் நிகழ்வதால் தமிழ் மக்கள் தை முதல் நாளை தமிழர் புத்தாண்டாக ஏற்றுக் கொண்டிருந்தனர்.

தமிழர்கள் வகுத்துக் கொண்ட வானியல் கணிப்பின்படி, தை முதல் நாளே தமிழ் புத்தாண்டாக இருந்திருக்கிறது. ஆனால் அறிவியல் கண்ணோட்டத்தில் சூரியன் உதயமாவதும் இல்லை, மறைவதும் இல்லை. அது என்றும் ஒளிர்கிறது. பூமி, தற்சுழற்சியாக சூரியனை சுற்றி வரும்போது 24 மணி நேரத்தில் சூரிய ஒளிபடுகிற இடமெல்லாம் பகலாகவும், மறுபகுதி இரவாகவும் அமைகிறது.

தமிழர் கொண்டாடிய தை புத்தாண்டு, சித்திரைக்கு மாறியது எப்படி? குப்தர் வம்சத்தில் வந்த இரண்டாம் சந்திர குப்தன் தனது பெயரை விக்கிரமாதித்தன் என்று மாற்றிக் கொண்டு - தனது பெயரால் ‘விக்கிரம சகம்’ என்ற ஆண்டு முறையை உருவாக்கிக் கொண்டான். வானவியலை அறிவியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்த ஆரியபட்டருக்கு எதிராக வானவியலில் - சாதகம், சோதிடத்தைப் புகுத்தும் முயற்சிகள் அவனது காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. எனவே வானியல் சிந்தனையாளர் ஆரியபட்டர் புறக்கணிக்கப்பட்டு, பழமையில் ஊறியவரான மிகிரர் உயர்த்திப் பிடிக்கப்பட்டார். அப்படி விக்கிரமாதித்தன் உருவாக்கிய ‘விக்கிரமசகம்’ எனும் ஆண்டு முறையில் சித்திரை முதல் நாளே ஆண்டின் முதல் நாளாகக்கப்பட்டது. ‘விக்கிரம சகம்’ 60 ஆண்டுகளை வரையறுத்தது. ‘பிரபவ’ ஆண்டில் தொடங்கி ‘அட்சய’ ஆண்டில் முடியும். இவைகளில் ஒரு பெயர்கூட தமிழ் இல்லை. 60 ஆண்டுகளுக்கும் வடமொழிப் பெயர்கள்தான். ஆனால், தமிழர்கள் தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் வேடிக்கை - வேதனை.

இந்த 60 ஆண்டுகளையும் கடவுளோடு தொடர்புபடுத்தி, ஆபாசம் வழியும் கதைகளையும் உருவாக்கி விட்டார்கள். நாரதரும், கிருஷ்ணனும் உறவு கொண்டு (இருவரும் ஆண்கள்) பெற்ற குழந்தைகளே ‘பிரபவ முதல் அட்சய முடிய 60 ஆண்டுகள்’ என்று தமிழ்க் கலை களஞ்சியமான ‘அபிதான சிந்தாமணி’ கூறுகிறது. இதற்கு புராண ஆதாரங்கள் வேறு உள்ளன. இந்த 60 ஆண்டுகளுக்கு மேல் 61வது ஆண்டைக் குறிக்கப் பெயர் இல்லை. மீண்டும் ‘பிரபவத்திலிருந்து தான் தொடங்க வேண்டும்’ நடைமுறைக்கும் அறிவுக்கும் ஒவ்வாத குழப்பங்களும், மூடநம்பிக்கைகளும் இதில் அடங்கிக் கிடக்கின்றன.

இந்த நிலையில் தான் - தமிழ் அறிஞர்கள் 1921-ம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் கூடி ஆராய்ந்தார்கள். மூன்று முக்கிய முடிவுகளை அவர்கள் அப்போது எடுத்தார்கள்.

1. திருவள்ளுவர் பெயரில் தொடர் ஆண்டாகப் பின்பற்றுவது.
2. அதையே தமிழ் ஆண்டு எனக் கொள்வது.
3. திருவள்ளுவர் காலம் கி.மு. 31 (வழக்கில் உள்ள ஆங்கில ஆண்டுடன் 31-ஐக் கூட்டினால் திருவள்ளுவர் ஆண்டு) திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல் நாள். கிழமைகள் வழக்கில் உள்ளவை என்று முடிவெடுத்தார்கள். இப்படி முடிவெடுத்தவர்கள் தமிழகத்தின் மூத்த தமிழ் அறிஞர்கள் மறைமலை அடிகள், திரு.வி.க., சுப்பிரமணியப் பிள்ளை, சச்சிதானந்தப் பிள்ளை, ந.மு. வேங்கடசாமி நாட்டார், நாவலர் சோம. சுந்தர பாரதியார், கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் ஆவர்.

அதன் பிறகு 1939 ஆம் ஆண்டு திருச்சியில் ‘அகில இந்திய தமிழர் மாநாடு’ சோமசுந்தர பாரதியார் தலைமையில் கூடியது. அதில் தந்தை பெரியார், கரந்தை தமிழ்ச்சங்கத் தலைவர் உமா மகேசுவரனார், பேராசிரியர் கா. சுப்பிரமணியம், தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், திரு.வி.க., மறைமலையடிகளார், பி.டி.இராஜன், ஆற்காடு இராமசாமி முதலியார், புரட்சி கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை அழகிரி உட்படப் பலரும் பங்கேற்றனர். அந்த மாநாடும் தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்றும், பொங்கல் திருநாளே தமிழர் திருநாள் என்றும் பறைசாற்றியது.

1971-ல் அன்றைய கலைஞர் ஆட்சி, திருவள்ளுவர் ஆண்டு முறையை ஏற்றது. இம்முறையையே 1971 முதல் அரசு நாட்குறிப்பிலும், 1972 முதல் அரசிதழிலும், 1981 முதல் அரசின் அனைத்து அலுவல்களிலும் பின்பற்றி வருகிறது.

1969-ம் ஆண்டு கலைஞர் ஆட்சி பொங்கல் திரு நாளுக்கு அடுத்த நாளை திருவள்ளுவர் நாள் என்று ஏற்று அரசு விடுமுறை அளித்து ஆணை பிறப்பித்தது. எனவே தை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு ஆகும். இடையில் வந்து புகுந்த சித்திரை - தமிழர் மீது புகுத்தப்பட்ட பண்பாட்டுத் திணிப்பாகும்.

**– விடுதலை இராசேந்திரன்**

## பல்லடத்தில் ஏப்.15–ல் நாத்திகர் விழா

கோவை மாவட்டம் பல்லடத்தில் ஏப்.15 அன்று காலை முதல் இரவு வரை பெரியார் திராவிடர் கழகம் நாத்திகர் விழாவை நடத்துகிறது. காலை 9 மணியளவில் பல்லடம் பேருந்து நிலையம் அருகிலுள்ள பி.எம்.ஆர். திருமண மண்டபத்தில் மகளிர் கருத்தரங்கம் நடைபெறுகிறது. தோழர்கள் பெங்களூர் கலைச்செல்வி, பேராசிரியை ருக்மணி, சூலூர் தமிழ்ச்செல்வி பேசுகிறார்கள். கவி அரங்கத்தில் வான்மதி த. வேலுச்சாமி, செங்கனல் ம. பாலசண்முகம், அறிஞர் அ.ப.சிவா பங்கேற்கிறார்கள். தொடர்ந்து வழக்காடு மன்றம் நடைபெறுகிறது. ‘வெஞ்சினம் கொள்ள வேண்டியதிலும், விழிப்புணர்வற்ற தமிழினம் குற்றமுடையதே’ எனும் தலைப்பில் நடைபெறும்.

வழக்காடு மன்றத்துக்கு புலவர் செந்தலை ந.கவுதமன் நடுவர். வழக்குரைஞர் கடலூர் அழகரசன் வழக்கை தொடுக்க, மயிலாடுதுறை அழகிரி வழக்கை மறுத்துப் பேசுகிறார். பல்லடம் தாய்த் தமிழ்ப் பள்ளி சிறார்களின் கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன.

மாலை 4 மணி அளவில் பல்லடம் மங்கலம் சாலையிலிருந்து மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் புறப்படுகிறது. தொடர்ந்து பல்லடம் காமராசர் திடலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் வழக்கறிஞர் துரைசாமி தலைமையில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, புலவர் புலமைப்பித்தன் (முன்னாள் மேலவை துணைத் தலைவர்), திருச்சி செல்வேந்திரன் (தி.மு.க. வெளியீட்டு செயலாளர்), ஆனூர் செகதீசன் (கழகத் துணைத் தலைவர்), நாடாளுமன்ற உறுப்பினர் க. சுப்பராயன் (சி.பி.அய்.), ஆ. வந்தியத்தேவன் (ம.தி.மு.க.), கு.இராம கிருட்டிணன் (கழக பொதுச்செயலாளர்) மற்றும் தோழர்கள் பேசுகிறார்கள்.

பல்லடம் பெரியார் திராவிடர் கழகம் இந்த விழாவுக்கான ஏற்பாடுகளை தீவிரமாக செய்து வருகிறது.

## அம்பேத்கர் விளக்குகிறார் : கறுப்புக் கயிறு கட்டுவது ஏன்?

மனு எழுதிய ஸ்மிருதியில் (தர்ம சாஸ்திரத்தில்) காணப்படும் சமத்துவம் இல்லாமை என்பது, கடந்த கால வரலாறு என்றும், இந்துவான ஒருவன் நிகழ்காலத்தில் நடந்து கொள்வதற்கும், மனு தர்மத்திற்கும் தொடர்பு இல்லை என்றும் வாதிடலாம். இப்படி வாதிடுவதைவிடப் பெரிய தவறு எதுவும் இல்லை என்று சொல்லுவேன். மனுவின் சட்டம் கடந்த காலத்தது அல்ல. நிகழ் காலத்தின் ஒரு கடந்த வரலாறு என்பதுடன் அது நிகழவில்லை. அது வாழ்ந்து கொண்டிருக்கும் பழைமை; நிகழ்காலப் பிரச்சினைக்கு எவ்வளவு முக்கியத்துவம் உண்டோ அவ்வளவு முக்கியத்துவம் கடந்தகால மனு நீதிக்கு உண்டு.

மனுவினால் விதிக்கப்பட்ட சமம் இல்லாத தன்மை, பிரிட்டிஷ் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பு இந்நாட்டின் சட்டமாக இருந்தது என்பது அந்நியர் பலர் அறியாத ஒன்றாக இருக்கலாம். சில எடுத்துக்காட்டுகள் நிலையைப் புரிந்து கொள்ள உதவும்.

பேஷ்வாக்களின் ஆட்சியில், அவர்களின் தலைநகரான பூனா (புனே) நகருக்குள், பிற்பகல் 3 மணிக்குப் பின்பும், முற்பகல் 9 மணிக்கு முன்பும் தீண்டப்படாதவர்கள் நுழையக் கூடாது. ஏனென்றால் காலை 9 மணிக்கு முன்பும், பிற்பகல் 3 மணிக்குப் பின்பும் அவர்களின் நிழல் நீளமாக இருக்கும். அந்த நிழல் பார்ப்பனர் மீது பட்டால் அவர்கள் தீட்டாகிவிடுவார்கள்.

மகாராஷ்டிராவில் தீண்டப்படாதவர்கள், கழுத்தில் அல்லது மணிக்கட்டில் கறுப்புக் கயிறு கட்டிக் கொள்ள வேண்டும். அவர்களைப் பிறர் உடனடியாக அடையாளம் காண்பதற்காக அவ்வாறு விதிக்கப்பட்டது.

பம்பாய் மாநிலத்தில் பொற்கொல்லர்கள் (சோனார்கள்) வேட்டியைப் பஞ்சக்கச்சம் வைத்துக் கட்டக் கூடாது, “நமஸ்காரம்” எனும் மரியாதைச் சொல்லைக் கூறக் கூடாது. (குறிப்பு: இங்கு அண்ணல் அம்பேத்கர், பம்பாய் கோட்டையில் இருந்து செயல்பட்ட ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அரசின் தீர்மானத்தையும், அந்தத் தீர்மானப்படி பொற்கொல்லர்கள் நடக்க வேண்டும் என அரசுச் செயலாளர், அந்த சாதித் தலைவர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தையும் தந்துள்ளார். தீர்மானம் 1779 ஜூலை 28 இல் நிறைவேற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து கடிதம் 1779 ஆகஸ்டு 9 இல் எழுதப்பட்டது. பொற்கொல்லர்கள் நமஸ்காரம் எனச் சொல்லுவதால், தங்களுக்கு இந்து மதப்படி உள்ள உரிமை பாதிக்கப்படும் எனத் திரும்பத் திரும்பப் பார்ப்பனர்கள் புகார் கூறியதால், அப்படி ஒரு தீர்மானம் பம்பாய் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டது)

மராத்திய ஆட்சியில் பார்ப்பனர் அல்லாத மற்ற எவரேனும் வேத மந்திரம் ஓதினால் அவருடைய நாக்கு வெட்டப்படும். உண்மையிலேயே சோனார்கள் (பொற்கொல்லர்கள்) பலருடைய நாக்கு அவ்வாறு பேஷ்வாவின் கட்டளையால் வெட்டப்பட்டது. தீண்டப்படாதவன் மிக உயர்ந்த குத்தகை கொடுக்க வேண்டும்.

மனு வாழ்ந்தது, கிறித்துவுக்குச் சில காலத்திற்கு முந்தி அல்லது பிந்தி இருக்கலாம். ஆனால், இந்து அரசர்கள் ஆண்ட அண்மைக் காலம் வரை, சமத்துவம் அற்ற மனு நீதிதான் சட்டமாகும் - டாக்டர் அம்பேத்கர்.

**(Dr.Babasaheb Ambedkar:Writings and Speeches - Vol.12 pages 719-722)**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# தோல்வியில் முடிந்த ‘ரா’வின் திட்டம்

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆகிய பகுதிகள், புளோட் ஒப்புதலோடு இந்திய ‘அமைதி’ப்படையின் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. அப் பகுதிகளை இணைக்கும் முக்கிய தரை வழிப் பகுதிகளில் இந்திய இராணுவத் தடை அரண்கள் உருவாக்கப்பட்டன. மாலத் தீவு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான ஆயுதங்களைப் பாதுகாத்து வைப்பதற் காகவே, தமிழ் ஈழ மண்ணில் ‘ரா’ உளவுத் துறை இந்த நடவடிக்கைகளில் இறங்கி யது.

அதே நேரத்தில் - தமிழ்நாட்டில் மண்டபத்துக்கு அருகே உள்ள தீவு ஒன்றில் வைத்து ‘ரா’ - ‘புளோட்’டுக்கு ஆயுதங்கள் வழங்கியது. மண்டபத்துக்கு அருகே உள்ள ஒரு தீவிலேயே மூன்று பிரிவுகளுக்கு பயிற்சிகளும் தரப்பட்டன.

மாலத் தீவுக்குப் புறப்படுவதற்கான சமிக்ஞை கிடைத்தவுடன் மண்டபம் தீவிலிருந்து ஆயுதங்களும், ஆட்களும், தூத்துக்குடி துறைமுகம் கொண்டு வரப்பட்டனர். ‘அல் அகமத்’ என்ற போலிப் பெயர் ஒட்டப்பட்டிருந்த கப்பல் - **1988** நவம்பர் **2** ஆம் தேதி இரவு **11** மணிக்கு **72** பேருடனும் - ஆயுதங்களுடனும் புறப்பட்டது. இந்திய இலங்கை கடல் எல்லைகளைத் தாண்டி, சர்வதேச கடல் எல்லைக்குள் செல்லும் வரை, ‘ரா’வின் ஏற்பாட்டின்படி, இந்திய கப்பல் படை கப்பல்கள் பாதுகாப்பு தந்தன. சர்வதேச கடற்பரப்பில் வேறு ஒரு விசைப்படகு களுக்கு ஆட்களும், ஆயுதங்களும் மாற்றப் பட்டன. தூத்துக்குடியிலிருந்து புறப்பட்ட கப்பல், மீண்டும் தூத்துக்குடி துறைமுகம் திரும்பியது.

தாக்குதல்காரர்கள் - அதிகாலை ஒரு மணிக்கு மாலத் தீவு கடல்பகுதியை சேர்ந்த போது - நல்ல காற்றும் மழையும் வீசியது. இதனால் திசை மாறியது கலகக் காரர்களின் படகு! அதிபர் மாளிகையைக் கைப்பற்றி, காவல் அரண்களை தாக்கி, அதிபரை கைது செய்வதே திட்டம். திசை மாறிப் போய்விட்டதால் திட்டமிட்டபடி இருளில் வந்து இறங்க முடியாமல், பொழுது விடிந்துவிட்டது. கொழும்பி லிருந்து - உமாமகேசுவரன் கொண் டிருந்த வானொலி தொடர்பு, காற்று மழை காரணமாக செயலிழந்தது. துப்பாக்கி யால் சுட்டு, அதிபர் மாளிகையை கலகக் காரர்கள் கைப்பற்றி விட்டார்கள். ஆனால், அதிபர் அங்கில்லை. அவர் வேறு ஒரு தீவுக்குப் போய் தங்கிவிட்டார்.

அடுத்து எதைத் தாக்குவது என்பதில் கலக்காரர்களிடையே குழப்பம். செய்தி யறிந்த மாலத் தீவு அதிபர் - தான் தங்கியிருந்த தீவிலிருந்தே, சர்வதேச உதவிகோரி, வானொலியில் வேண்டு கோள் விடுத்தார். அதிபரை கைது செய்யும் ‘ரா’வின் திட்டம் படு தோல்வியில் முடிந் தது. மாலத் தீவின் நட்பு நாடான பாகிஸ்தானோ, சீனாவோ, உத விக்கு படையை அனுப்பி, காப் பாற்றிவிட்டால், ‘ரா’ உளவு நிறுவனத்தின் சதி அம்பலமாகி விடும் என்ற நிலையில், இந்தியாவே முந்திக் கொண்டு, படையை அனுப்புவதே புத்திசாலித்தனம் என்ற முடிவுக்கு ராஜிவ்காந்தி வந்தார். இந்திய விமானப் படைப் பிரிவு ஒன்றும், கப்பல்படைப் பிரிவு ஒன்றும் மாலத் தீவுக்கு உடனே அனுப்பப்பட்டது. இந்திய விமானப் படை விமானங்கள், தாக்கு தலுக்கு சென்றவர்களைக் கைது செய்து - அவர்கள், பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்த சில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளை விடுவித்தது. கலவரக்காரர்களை மாலத் தீவுக்கு அனுப்பி வைக்கும்போது, அவர்களுக்கு பாதுகாப்பாக செயல்பட்ட அதே கப்பல் படை கப்பல்களே, அவர்களைக் கைது செய்து வந்தது, அது தான் வேடிக்கை.

*தமிழ்நாட்டில் மண்டபத்துக்கு அருகே உள்ள தீவு ஒன்றில் வைத்து ‘ரா’ – ‘புளோட்’டுக்கு ஆயுதங்கள் வழங்கியது. மண்டபத்துக்கு அருகே உள்ள ஒரு தீவிலேயே மூன்று பிரிவுகளுக்கு பயிற்சிகளும் தரப்பட்டன.*

நாடாளுமன்றத்திலே பேசிய பிரதமர் ராஜீவ், “நட்பு நாடு ஒன்றுக்கு உதவக் கூடிய நல்ல வாய்ப்பு இந்தியாவுக்கு கிடைத்தது” என்று பெருமையுடன் கூறிக் கொண்டார். இதற்குப் பின்னால் - இலங்கையுடன் மாலத் தீவுக்கு இருந்த வர்த்தகத் தொடர்புகள் குறைந்து இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகள் அதிகரித்தன. மாலத் தீவின் மொத்த இறக்குமதிப் பொருள்களில் **65** சதவீதம் இலங்கையிலிருந்தே இறக்குமதி செய்யப் பட்டு வந்தன. மாலத் தீவிலிருந்து மொத்த ஏற்றுமதியில் **10** சதவீதம் இலங்கைக்குச் சென்றது. இந்தியாவுடனான மாலத் தீவு வர்த்தகம், ஒரு சதவீதம் கூட கிடையாது. இந்தியா மாலத் தீவுக்கு விமான, கப்பல் படை அனுப்பியதைத் தொடர்ந்து நிலைமை தலை கீழானது. **1988**-ல் **8.2** மில்லியன் அமெரிக்க டாலர் மதிப் புள்ள பொருள் களை கொழும்பு மாலத்தீவுக்கு ஏற்றுமதி செய்து வந்தது. திடீரென **1989**-ல் **5.8** மில்லியன் அமெரிக்க டாலராக இது சரிந்தது. அது வரை இலங்கையுடன் மாலத் தீவு கொண்டிருந்த உறவிலும், மிகப் பெரும் மாற்றம் ஏற்பட்டது. இந்தியா வுடனான தனது உறவை மாலத் தீவு வலிமையாக்கிக் கொண்டது. இந்தியா மாலத்தீவுடன் உறவை வளர்த்துக் கொள்வதற்கான பல புதிய திட்டங்களை அனுமதித்தது.

ஆனாலும், மேலை நாட்டு ஊடகங்கள் - மாலத் தீவில் இந்தியாவின் தலையீடு பற்றி கடுமையான விமர்சனங்களை முன் வைத்தன! “தெற்கு ஆசியாவின் போலீஸ்காரனாக இந்தியா தன்னை நிலைநிறுத்திக் கொள்ள திட்டமிட்டு நடத்திய சதியே இது” என்று எழுதின. வேறு இரண்டு கேள்விகளையும் மேலைநாட்டு ஊடகங்கள் முன் வைத்தன. கலகக்காரர்கள் இலங்கை இந்திய கடல் பகுதியாக கப்பலில் எப்படி வரமுடிந்தது? அந்தப் பகுதிகள், “இந்திய அமைதிப் படையின்” (அய்.பி.கே.எப்.) முழு கண் காணிப்பில் இருக்கும்போது - இந்திய அமைதிப்படைக்குத் தெரியாமல், கலவரக்காரர்கள் வந்தார்கள் என்பதை நம்ப முடியாது. அத்துடன், மாலத் தீவு அதிபர், உதவி கேட்டவுடனேயே இந்திய விமானப் படைகள், உடனடியாக அனுப்பப் பட்டுள்ளது. எனவே, இந்தியாவின் தொடர்பு இதில் உண்டு என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி இவை உறுதியாக்குகின்றன என்று மேலை நாட்டு ஊடகங்கள் எழுதின.

தமிழ்நாட்டில் திண்டிவனம் அருகே பாறைகளைத் தகர்க்கும் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்ற ஜீப் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் **16** பேர் இறந்த சோக சம்பவம் நடந்துள்ளது. உடனே பார்ப்பன ஜெயலலிதா, விடுதலைப்புலி களோடு இச்சம்பவத்தை தொடர்புபடுத்தி தி.மு.க. ஆட்சியை டிஸ்மிஸ் செய்யக் கோருகிறார். ஈழப் போராளிகள் ஒடுக்கப்பட வேண்டும் என்றும், ஈழத்தில் தமிழர்களுக்கு ஒரு தாயகம் அமைவது இந்தியாவுக்கே ஆபத்து என்றும் பார்ப்பன ஊடகங்கள் கூக்குரலிடு கின்றன! ஆனால், இந்தியாவின் உளவுத் துறையான ‘ரா’ என்ன செய்தது?

ஈழப் போராளிக் குழுவை வேறு ஒரு நாட்டில் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பயன் படுத்தியது.

அதற்காக - தமிழ்நாட்டிலேயே வைத்து ஆயுதங்களும் பணமும் தரப்பட்டுள்ளது.

இலங்கையில் ராஜீவ் ஜெயவர்த்தனா ஒப்பந்தத்தை நிறைவேற்றச்சென்ற இந்திய இராணுவம், தமிழ் ஈழத்தில் இந்த ஆயுதங்களைப் பதுக்கி வைப்பதற்கு பாதுகாப்பு அரண் அமைத்து தந்தது.

ஆயுதங்களோடு கலகக்காரர் இந்திய இலங்கைக் கடல்வழியாகப் பயணம் செய்ய பாதுகாப்பு தந்ததோடு இந்தியக் கப்பலையும் கொடுத்து உதவியது.

கவிழ்ப்பு முயற்சி தோல்வியில் முடிந்தவுடன், நட்பு நாடகமாடி, உண்மைகள் அம்பலமாகாமல் தடுக்க, விரைந்து படையை அனுப்பியது.

இப்படி தேசிய சுய நிர்ணய உரிமைக்காக போராடும் இயக்கங்களை தங்களது மேலாண்மை அரசியலுக்காக அரசியல் சதுரங்கத்தில் பகடைக்காய் களாக உருட்டி, விளையாடியவைதான், இந்திய அரசும், அதன் உளவு நிறுவனங் களும்! அவர்கள்தான் சொந்த நாட்டின் விடுதலைக்குப் போராடும் போராளி களை பயங்கரவாதி என்கிறார்கள்!

(அடுத்த இதழில் முடியும்)

## சிந்தனை வட்டம் –2

**15.4.2007** ஞாயிறு மாலை **5** மணியளவில் **28** புதுத்தெரு, கண்ணம்மா பேட்டை, சென்னை தியாகராயர் நகரில் தோழர் தியாகு “இந்தியா! இலங்கை! தமிழீழம்!” என்ற தலைப்பில் உரையாற்றுகிறார்.

**ஏற்பாடு:** பட்டுக்கோட்டை இராமசாமி, மணல் மேடு செள்ளைச்சாமி - சிந்தனை வட்டம்.

## திருத்தம்

**8.3.2007** ‘பெரியார் முழக்கம்’ இதழில் **3** ஆம் பக்கத்தில் வெளிவந்த தோழர் எஸ்.வி.ஆர். உரையில் - **‘இந்திய தேசிய இனம்** ஆதிக்க தேசிய இனம் என்று, சில தமிழ் தேசியவாதிகள் கூறுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை இங்கு கிடையாது” - என்று வந்துள்ளதில், ‘இந்திய தேசிய இனம்’ என்பதை - **‘இந்தி தேசிய இனம்’** என்று திருத்திப் படிக்கக் கோரு கிறோம். உரையை வெளியிட்டதில் நேர்ந்த பிழைக்கு வருந்துகிறோம். (ஆர்)

## சிறையில் கழகத் தோழர்கள்! வழக்கு நிதி குவிப்பீர்!

| | ரூபாய் |
|---|---|
| கடந்த இதழில் | 1,97,952.00 |
| சென்னை கற்பக விநாயகம் | 500.00 |
| கழகத் தலைவரிடம் வழங்கியது | |
| டி.ஆர். சண்முகம், மேட்டூர். | 2000.00 |
| மேட்டூர் கா. இராசேந்திரன் | 1000.00 |
| மேட்டூர் சாமிநாதன் | 2000.00 |
| தூத்துக்குடி மாவட்டத்தில் வழக்கு நிதி விவரம் | |
| பால். பிரபாகரன் (மாநில ஆட்சிக் குழு உறுப்பினர் | 500.00 |
| பால். அறிவழகன் (நகரச் செயலாளர்) | 500.00 |
| கோ.அ.குமார் (நகரத் தலைவர்) | 500.00 |
| பொறிஞர் சி. அம்புரோசு (மாவட்டத் தலைவர்) | 250.00 |
| க. மதன் (மாவட்ட துணைச் செயலாளர்) | 200.00 |
| சா. த. பிரபாகரன் (நகர துணைத் தலைவர்) | 200.00 |
| ச.கா. பாலசுப்பிரமணியன் (மாவட்டச் செயலாளர்) | 100.00 |
| செ. செல்லத்துரை, (நகர இணைச் செயலாளர்) | 100.00 |
| அ. அறிவு பித்தன் | 100.00 |
| வே. பால்ராசு (மாவட்ட துணைத் தலைவர்) | 100.00 |
| குரு. மாலைநாதன் (நகரப் பொருளாளர்) | 100.00 |
| ஏற்காடு சரவணன் | 500.00 |
| ஏற்காடு தமிழ்ச்செல்வி | 200.00 |
| | 2,06,802,00 |

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:

**க. இராசேந்திரன் ‘ஆசிரியர்’, புரட்சி பெரியார் முழக்கம், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.**

“புரட்சிப் பெரியார் முழக்கம்” **ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**


தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ☎ 2451 2857, 2461 6233

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 12th April 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் **www.puratchiperiyarmuzhakkam.com** திருவள்ளுவர் ஆண்டு 2038 ஏப்ரல் 19, 2007 புரட்சி 4 முழக்கம் 71 **விலை : ரூ.2.50**


## பல்லடத்தில் பேரெழுச்சியோடு

# ‘நாத்திகர் விழா’





கோவை மாவட்டம் பல்லடத்தில் 15.4.07 ஞாயிறு காலை 10 மணியளவில் பி.எம்.ஆர். திருமண மண்டபத்தில் தோழர் ப. மூர்த்தி நினைவு அரங்கத்தில், பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் சி.விசயன் வரவேற்புரை நிகழ்த்த பல்லடம் திருவள்ளுவர் தாய்த்தமிழ்ப் பள்ளி சிறார்களின் கலை நிகழ்ச்சிகளோடு ‘நாத்திகர் விழா’ தொடங்கியது.

### பெரியார் இயக்கத்தின் தாக்கம்

இன உணர்வில் - மூட நம்பிக்கை ஒழிப்பில் - இடஒதுக் கீட்டில் - மணக்கொடை (வரதட்சணை) - இன்றைய இளைஞர் மனதில் பெரியாரின் விடுதலைப் பெண் - பெரியாரின் பெண்ணியம் என்கிற தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கத்திற்கு தஞ்சை குப்பு வீரமணி அவர்கள் தலைமை வகித்தார். இன உணர்வில் என்கிற தலைப்பில் - கா.சு.நாகராசு; மூட நம்பிக்கை ஒழிப்பில் - சிற்பி அர. செல்வராசு; இடஒதுக் கீட்டில் - நா. பன்னீர் செல்வம்; மணக்கொடை (வரதட் சணை) - சூலூர் தமிழ்ச் செல்வி; இன்றைய இளைஞர் மனதில் - வே. மதிமாறன்; பெரியாரின் விடுதலைப் பெண் - பெங்களூர் கலைச் செல்வி; பெரியாரின் பெண்ணியம் - பேரா. ருக்குமணி ஆகியோர் சிறப்பாக உரையாற்றினர். கருத்தரங்கத்திற்கு முன்னதாக பல்லடம் நகர மன்றத் தலைவரும், நகர தி.மு.க. செயலாளருமான ஆர். இராம மூர்த்தி உரையாற்றினார். அவர் தனது உரையில் பெரியார் திராவிடர் கழகத்திற்கு எந்தவிதத்தில் எதிர்ப்புகள் வந்தாலும் நாங்கள் உடனிருந்து உறுதுணையாக நிற்போம் என்று உறுதியளித்தார். கருத்தரங்கைத் தொடர்ந்து, வெஞ்சினம் கொள்ள வேண்டியதிலும் விழிப்புணர்வற்ற தமிழினம் குற்றமுடையதே என்கிற தலைப்பில் வழக்காடு மன்றம் நடைபெற்றது.

வழக்காடு மன்றத்திற்கு புலவர் செந்தலை கவுதமன் நடுவராகவும், வழக்குத் தொடுப்பவராக - வழக்குரைஞர் கடலூர் அழகரசன், வழக்கை மறுப்பவராக - மயிலாடுதுறை அழகிரியும் வாதாடினர். மிக உணர்ச்சிபூர்வமாக வழக்காடு மன்றம் நடைபெற்றது. பிற்பகல் 2.30 மணிக்கு தொடங்கிய வழக்காடு மன்றம் 3.30 மணி வரை நடைபெற்றது. மதிய உணவைக் கூட மறந்த நிலையில் மக்கள் அரங்கு நிறைந்து இருந்தனர். அரங்கிற்கு வெளியேயும் மக்கள் திரண்டிருந்து வழக்காடு மன்றத்தின் விவாதங்களைக் கேட்டனர்.

வழக்காடு மன்றம் தொடங்குவதற்கு முன்னர், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், பெங்களூரைச் சேர்ந்த ஜார்ஜ், ரோசி ஆகியோருக்கு அரங்க மேடையில் வாழ்க்கைத் துணைநல ஒப்பந்த விழா நடைபெற்றது.

மாலை 5 மணியளவில் திருவள்ளுவர் தாய்த் தமிழ்ப் பள்ளி அருகிலிருந்து, கழக வடக்கு மாவட்டத் தலைவர் சு.துரைசாமி தலைமையில் பொள்ளாச்சி நகர செயலாளர் வே. வெள்ளியங்கிரி, உடுமலை நகர கழக செயலாளர் யாழ். நடராசன், மேட்டுப்பாளையம் அமரன், திருப்பூர் கோபிநாத், இராமசாமி, அவினாசியப்பன், இரா. குமார், கிளாத்திகுளம் செந்தில், சோமு, நிலம்பூர் சசி, இருகூர் திருநாவுக்கரசு ஆகியோர் முன்னிலை வகிக்க மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம் பல்லடம் நகரின் முக்கிய வீதிகளில் வந்தது. ஊர்வலத்தில் முதுகில் அலகு குத்தி கார் இழுத்தும், முதுகில் அலகு குத்தி பறவை(காவடி)யாக தொங்கிய படியும், பெண்கள் தீச்சட்டி ஏந்தியும், கன்னத்தில், நாக்கில் உடம்பில் அலகு குத்தி கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை என்று முழக்கம் இட்டபடி நகர வீதிகளில் வந்தனர். வீதிகளின் இருபுறங்களிலும் மக்கள் திரண்டிருந்து ஊர்வலத்தை பார்த்தனர்.

காமராசர் திடலில் ஊர்வலம் முடிவடைந்தது. அங்கு பறவை காவடியாக தொங்கியபடி சுற்றினர். பன்னீர் செல்வம், கோபால் ஆகிய இருவரும் பறவை காவடியில் தொங்கினர்.

மாலை 7 மணியளவில் காமராசர் திடல் பொன்னுசாமி நினைவரங்கத்தில் ‘சமர்ப்பா’ இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியோடு பொதுக் கூட்டம் தொடங்கியது. அதைத் தொடர்ந்து கவியரங்கம் நடைபெற்றது. கவியரங்கில், தோழர்கள் திருப்பூர் சுரேசு, அ.ப.சிவா, பல்லடம் பால். சண்முகம், வான்மதி வேல்சாமி ஆகியோர் கவிதை வாசித்தனர். பல்லடம் திருமூர்த்தி வரவேற்புரையாற்றினார். கூட்டத்திற்கு வழக்கறிஞர் செ. துரைசாமி தலைமை வகித்தார்.

மாவட்டத் தலைவர் சு. துரைசாமி, கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன், பாராளுமன்ற உறுப்பினர் க. சுப்பராயன், ஆதித் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் நீலவேந்தன், ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன் ஆகியோர் உரையைத் தொடர்ந்து, கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை நிகழ்த்தினார். விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் சூலூர் பன்னீர் செல்வம் நன்றி கூறினார்.

மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் தோழர்கள் திருப்பூர் இராமசாமி, கிளாகுளம் செந்தில், திருப்பூர் மணி, இராமு அகியோர் கன்னத்தில் அலகு குத்தி வந்தனர். முதுகில் அலகு குத்தி கார் இழுத்த தோழர்கள் - சுக்கம்பாளையம் க. குமார், திருப்பூர் பாலு. ஆணிப் படுக்கையில் தோழர் இராமலிங்கம் படுத்து வந்தார்.

விழாவில் களப்பணி ஒருங்கிணைப்பாளர்கள் அங்ககுமார், பிரகாசு, தெற்கு மாவட்டத் தலைவர் க. நாச்சி முத்து, ஆட்சிக் குழு உறுப்பினர்கள் வெ. ஆறுச்சாமி, இரா.மனேகாரன், கா. கருமலையப்பன், தாராபுரம் குமார், கோவை கதிரவன், சோமு, கா.ஆதி, பழ. முருகானந்தம், சம்பத், திருப்பூர் மாணவரணி, கார்த்தி, செகன், இரமேசு குமார், சன். பாண்டியநாதன், அனுப்பட்டி பிரகாசு, முகில் இராசு, அகிலன் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

விழா வெற்றியடைய - க. ஆறு முகம், ந. இரமேசு, சிவக்குமார், மு. வடிவேல், சு. வடிவேல், ந. சின்னச்சாமி, ம. இரவி, இராஜ்கபூர், திருமூர்த்தி, குளத்துப் பாளையம் குமார், குணசேகர், பொங்கலூர் கார்த்தி, சிவராசு, செகதீசன், இராமசாமி, கிருஷ்ணமூர்த்தி, இஸ்மத், குட்டி பழனிசாமி, ஆ. பொன்னுசாமி ஆகியோர் கடுமையாக உழைத்தனர். நகரம் முழுவதும் சுவரெழுத்துப் பிரச்சாரமும், விளம்பரத் தட்டிகளும் பிரமாண்டமாக வைக்கப்பட்டன. ●

## துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் உரை

# அய்.அய்.டி.யின் பார்ப்பன ஆதிக்கம்

மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை வரும் கல்வியாண்டிலிருந்தே முழுமையாக அமுல்படுத்துவது உள்ளிட்ட மேலும் சில கோரிக்கைகளை வைத்து கடிதம் நடத்திய 'சம்பூகன் சமூக நீதி' பயணத்தின் ஒரு கட்டமாக கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் அவர்கள் மேட்டூர் பொதுக் கூட்டத்தில் 10.11.2006 அன்று பேசியதிலிருந்து:

கோரக்பூர், மைசூர் போன்ற சமஸ்தானங்கள் தங்களுக்கு உட்பட்ட சிறு நிலப் பகுதிகளில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு முதன்முதலில் இடஒதுக்கீடு வழங்கிய பெருமையைப் பெற்றன.

இப்போது இருக்கின்ற முழு தமிழ்நாடு, கொச்சி, திருவாங்கூர் நீங்கலாக இருந்த கேரளப்பகுதி, சுதேசி மன்னர்கள் ஆட்சியைத் தவிர இருந்த மைசூர் ராஜ்யம், ஆந்திர மாநிலத்தின் முழுப் பகுதி ஆகிய இவைகள் அடங்கிய அன்றைய சென்னை மாகாணத்தில் (ராஜதானி) தான் ஒரு அரசின் சார்பாக இடஒதுக்கீடு ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்கப்பட்டது.

1922-லேயே நீதிக்கட்சி இடஒதுக்கீட்டைப் பற்றி மிக விரிவாக விவாதித்தது; சட்டம் கொண்டு வர விரும்பியது. இருந்தாலும், சில ஆண்டுகள் கழித்து தான் அது நடைமுறைக்கு வந்தது.

நீதிக்கட்சியின் ஆதரவுடன் திரு. சுப்பராயன் தலைமையில் அமைந்த சுயேட்சை ஆட்சியில் இருந்த திரு. முத்தையா (முதலியார்) தான் துணிச்சலாக அந்தக் காரியத்தில் இறங்கினார். அவர் மிகச் சிறிய துறையான தான் அமைச்சர் பதவி வகித்த பத்திரப் பதிவுத் துறையில் அதைச் செயல்படுத்தினார். அதன் பிறகு, இடஒதுக்கீடு நீதிக்கட்சி ஆட்சிக் காலத்தில் அரசின் எல்லாத் துறைகளுக்கும் பரவலாக்கப்பட்டது. அதிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்தப்பட்டு, இன்று 69 விழுக்காடு என்ற அளவில் தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு இருக்கிறது. இது போதுமா என்றால், கண்டிப்பாக போதாது என்பதே உண்மை. பழங்குடியினர், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட இனம் ஆகிய மக்களின் விகிதாச்சாரத்திற்கு இது மிகவும் குறைவாகவே உள்ளது.

மய்ய அரசால் உயர்கல்வியில் அறிவிக்கப்பட்டிருக்கின்ற பிற்படுத்தப்பட்டோருக்கான 27 விழுக்காது இடம் முழுமையாக வரும் கல்வியாண்டிலேயே கொடுக்கப்பட வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்குள்ள இடஒதுக்கீட்டில் உச்சநீதிமன்றத்தால் திணிக்கப்பட்டுள்ள பொருளாதார அளவு கோலை மய்ய அரசு நீக்க வேண்டும். இதன் மூலம் இடஒதுக்கீட்டின் பயனை அம்மக்கள் முழுமையாக அனுபவிக்க வேண்டும் என்பதுதான் பெரியார் திராவிடர் கழகத்தின் தற்போதைய தலையாய கடமையாக இருக்கிறது. இந்தப் பணியை நிறைவேற்ற மய்ய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் பொருட்டுதான் தமிழ்நாட்டின் நான்கு மூலைகளிலிருந்தும் புறப்பட்டு வழி நெடுக பெரியார் திராவிடர் கழகம் தனது பிரச்சாரத்தைச் செய்து கொண்டு வருகிறது.

தமிழினத்தை மீட்க, தமிழினத்தின் மேல் பார்ப்பனர்களால் ஏற்றி வைக்கப்பட்டுள்ள இழிவு துடைக்கப்பட, நலிவு நீங்க இடஒதுக்கீடு மிகப் பெரிய அளவில் கை கொடுக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

மாநில, மய்ய அரசுகள் ஒடுக்கப்பட்டோருக்கு ஆதரவாக சட்ட வரைவையோ, சட்டத் திருத்தத்தையோ கொண்டு வருகிறபோது மிகவும் ஆத்திரப்பட்டு பார்ப்பனர்கள் அதை எதிர்ப்பதற்கு இதுவேதான் காரணம். தங்கள் இனத்திற்காக வாதாடக்கூடியவர்கள், ஆத்திரப்படக் கூடியவர்கள், போர்க் குணம் கொண்டு போராடக் கூடியவர்கள், முழு மூச்சோடு அதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடியவர்கள் பார்ப்பனர்களைத் தவிர வேறு யாரும் உலக வரலாற்றிலேயே இருக்க முடியாது.

ஒரு சிறு சம்பவம் பார்ப்பனர்களை பாதிக்கிறதென்றால், அதை மிகப் பெரியதாக ஆக்கி, அதனால் பாதிக்கப்படுகின்ற பார்ப்பனரல்லாதவர்கள் எத்தனை லட்சம் பேர் என்றாலும் அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் தங்கள் இனத்திற்கு வேண்டிய, தாங்கள் அனுபவிக்கின்ற பலன் கொஞ்சம்கூட குறையக் கூடாது என்பதற்கு எவ்வளவு இழிவான காரியங்களையும் சிறிதும் தயக்கமின்றி செய்வது தான் பார்ப்பனர்களின் குணம்.

மத்திய அரசின் வேலை வாய்ப்பில் 27 விழுக்காடு இடஒதுக்கீட்டை வி.பி.சிங் அறிவித்தார். இன்று வரையில் அதன்படி இடம் நிரப்பப்படுவதில்லை. ஏனென்றால், முக்கிய அதிகாரிகள் அத்தனை பேரும் டில்லியிலும் சரி, மற்ற மாநிலங்களின் தலைநகர்களிலும் சரி பார்ப்பனர்களும் அவர்களின் அடிவருடிகளான மற்ற உயர்சாதிக்காரர்களும் தான் இருக்கிறார்கள். இந்தியா முழுக்க உள்ள பார்ப்பனர்களை உள்ளடக்கிய உயர்சாதிக்காரர்கள் சராசரியாக 10 விழுக்காடு தான் இருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்த வரை அவர்கள் வெறும் 3 விழுக்காடு தான். ஆனால், மிகச் சிறுபான்மையினரான இவர்கள் மய்ய அரசில் இன்றும் 70 விழுக்காடு முக்கிய இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

மய்ய அரசில் பிரிவு 3, பிரிவு 4 இல் தான் நம்மாட்கள் இருக்கிறார்கள். மீதமுள்ளது அத்தனையும் ஆண்டு அனுபவித்து பலனை அடைபவர்கள் பார்ப்பனர்கள் தான்.

சென்னை அய்.அய்.டி.யில் உள்ள நானூறு பேராசிரியர்களில் முன்னூறுக்கும் மேற்பட்ட இடங்களை பார்ப்பனர்களும், உயர்சாதியினரும்தான் அனுபவிக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள் வெறும் மூன்று பேர் தான். பழங்குடியினத்தவர் சுத்தமாக இல்லை. இது போன்ற அக்கிரமம் உலகில் வேறு எங்காவது உண்டா ?

சென்னை அய்.அய்.டி. ஏறத்தாழ ஆயிரத்து முந்நூறு ஏக்கர் பரப்பளவில் இருக்கிறது. நம் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் போன்று நினைத்து விடாதீர்கள். ஒரு சிறிய மாதிரி நகரத்தை உருவாக்கக்கூடிய அளவு பரப்பு கொண்டது. சென்னை அய்.அய்.டி. துணை நகரம் உருவாக்க இப்போது வேறு வேறு இடங்களை பார்க்கிறார்களே அது தேவையே இல்லை. சென்னை நகரத்தின் கால்பாகத்தை அங்குகண்டிப்பாக உருவாக்க முடியும். அவ்வளவு பெரிய இடத்தைக் கொண்டது. நவீனக் கட்டடங்களைக் கொண்டது. பாதிக்கும் மேற்பட்டவை குளிரூட்டப்பட்ட கட்டடங்கள். எல்லா வசதிகளும் அங்கு உண்டு. இப்படிப்பட்ட இடத்தில் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் வெறும் பதினோரு பேர்தான் அங்கு படிக்கிறார்கள். பழங்குடியினத்தைச் சார்ந்தவரும் எவரும் இல்லை.

நம் இனத்தைச் சார்ந்த இந்த மாணவர்களுக்கு உதவி செய்தார் என்ற காரணத்திற்காக அங்கு பணியாற்றும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்த கணிதப் போராசிரியர் வசந்தா கந்தசாமிக்கு இன்று வரையில் அய்.அய்.டி.யில் மிகுந்த தொல்லைக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். முதல்வர் டாக்டர் கலைஞர், வசந்தா கந்தசாமியின் போராட்ட குணத்தை அங்கீகரிக்கும் பொருட்டு அவருக்கு 'கல்பனா சாவ்லா' விருது வழங்கியது மிகச் சிறப்பான அம்சம். வசந்தா கந்தசாமியை ஏறிட்டுப் பார்க்க ஆளே கிடையாது. அவரிடம் பேசவே பயந்தார்கள். பெரியார் திராவிடர் கழகம் தான் தொடர்ந்து ஆறு வருடங்களாக அவருக்காகப் போராடியது. அய்.அய்.டி.யின் உயர் பதவியில் இருக்கும் பார்ப்பனர்களின் வீடு இருக்கும் பகுதிகளில் எல்லாம் தெருத் தெருவாக கூட்டம் போட்டு, பார்ப்பன கும்பலைப் பற்றி மக்களிடம் தெரியப்படுத்திய பிறகுதான் வசந்தா கந்தசாமிக்கு ஓரளவுக்கு தொல்லை கொடுக்காமல் பார்ப்பனர்கள் விட்டிருக்கிறார்கள். இது தான் பார்ப்பனர்களின் நடைமுறை. சில பேர் பார்ப்பனர்கள் பாவம் என்று நினைக்கிறார்கள். நாம் கொஞ்சம் கண்டு கொள்ளாமல் இருந்தால் பார்ப்பனர்கள் நம் கழுத்தைப் பிடிப்பார்கள். நாம் சற்று நிமிர்ந்தால் நம் காலை அவர்கள் தொடுவார்கள். பார்ப்பனர்களுக்கு கழுத்தைப் பிடிப்பதும், காலைப் பிடிப்பதும் இரண்டும் சமம்.

பெரியார் சொன்னார்: ரகளையோ, ரத்த காயமோ பார்ப்பனர்களுக்கு வேண்டாம் என்று எங்களைப் போன்றவர்கள் நினைக்கிற வகையில் தான் பார்ப்பனர்களுக்கு இலாபம். எனக்குப் பிறகு வருகிறவர்கள் பார்ப்பனர்களை சும்மா விடமாட்டார்கள். பார்ப்பனர்களே ! நீங்கள் வாழை இலை போன்றவர்கள். பார்ப்பனரல்லாத மக்களாகிய நாங்கள் முள் செடி போன்றவர்கள். வாழை இலை முட்செடி மீது விழுந்தாலும், முட்செடி வாழை இலை மீது விழுந்தாலும் பாதிப்பு வாழை இலைக்குத்தான் என்று எச்சரிக்கை செய்தார். ஆனால் பார்ப்பனர்கள் மட்டம் மாறவே இல்லை என்றார் ஆனூர் செகதீசன். ●

### சென்னையில் பெரியார் சிலை திறப்பு

சென்னை மேற்கு கலைஞர் நகரில் கடந்த 18.3.2007 ஞாயிறு காலை 11 மணிக்கு தந்தை பெரியார் சிலை மற்றும் கல்வெட்டு திறக்கப்பட்டது. இர.திருவள்ளுவன் வரவேற்க, பன்னீர்செல்வம் தலைமையில் பெரியார் சிலையை நாத்திகம் இராமசாமி திறந்து வைத்தார். பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கு.இராமகிருட்டிணன் கல்வெட்டைத் திறந்து வைத்தார். தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பேராசிரியர் பெரியார் தாசன், ஆத்தூர் முத்துசாமி, அன்பு தனசேகர், எ. கேசவன் ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் தபசி. குமரன், கரு. அண்ணாமலை, குகன், சொ. அன்பு, சீ.மணிவண்ணன், இராசுக்குமார், கே. திலீபன், பா. இராசன், ந. தினகரன் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

### உச்சநீதிமன்ற தீர்ப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம்

அகில இந்திய இதர பிற்படுத்தப்பட்ட ஊழியர்கள் நலச் சங்கங்களின் கூட்டமைப்புச் சார்பில் 27 சதவீத இடஒதுக்கீட்டிற்கு தடை விதித்த உச்சநீதிமன்ற தீர்ப்பை கண்டித்தும், ஓ.பி.சி. இடஒதுக்கீட்டை உடனடியாக நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசை வலியுறுத்தியும், 12.4.2007 வியாழன் காலை 11 மணியளவில் சென்னை அரசு பொது மருத்துவமனை எதிரிலுள்ள மெமோரியல் அரங்கம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக துணைத் தலைவர் ஆனூர் செகதீசன், அன்பு தனசேகர், வாலாசா வல்லவன், விவசாய மேம்பாட்டு சிறப்புக் குழு துணைத் தலைவர் கே.எஸ்.அழகிரி ஆகியோர் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் கழக மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் எ. கேசவன், கருங்குழி கண்ணன், தபசி. குமரன், இரா. உமாபதி, கே. ஜாக்குலின், அ. பல்லவி, மேரி, தமிழ்ச்செல்வம், ஆ. தமிழ்ச்சுடர், செ.மோகன், க. இராசேந்திரன், சீ. மணிவண்ணன், க. அன்பழகன், வ. நீதிராசன் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

### பத்ரி நினைவு நூலகத்துக்கு நூல் அன்பளிப்பு

சென்னை இராயப்பேட்டையிலுள்ள தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகத்திற்கு தி.மு.க. சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரும், தி.மு.க. தலைமை நிலைய செயலாளருமான எஸ்.ஏ.எம். உசேன் அவர்கள் ரூ.8000/- மதிப்புள்ள நூல்களை வழங்கினார்.

உசேன் அவர்களுக்கு, கழக சார்பில் நன்றி.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41.
போன்: 2451 2857, 2461 6233
periyarmulakkam@yahoo.com

# ராஜீவ்காந்திக்கு உரிய பாதுகாப்பு செய்யத் தவறியது யார்?

பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் என்ற பதவியில் அமர்த்தப்பட்டுள்ள முன்னாள் உளவுத்துறை இயக்குநர் எம்.கே.நாராயணன் - தமிழ்நாட்டில், விடுதலைப்புலிகள் ஊடுருவி விட்டதைப் போல், ஒரு பிரச்சாரத்தை உருவாக்கி வருவதை நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டினோம். அலுமினிய குண்டு, சைக்கிள்களில் பயன்படுத்தப்படும் 'பால்ஸ்' போன்ற உதிரி பாகங்களைக் கொண்டு எவ்வளவோ பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால், தமிழ்நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக இந்தத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள எல்லோருமே - ஏதோ விடுதலைப்புலிகளின் ஆயுதத் தயாரிப்புக்காகவே தயாரித்து, கடல் வழியாகக் கடத்தி வருவதுபோல், ஒரு அச்ச உணர்வு தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக பம்பாயைச் சார்ந்த ஒரு உற்பத்தியாளரை தமிழக உளவுத் துறை கைது செய்தது. "அலுமினிய குண்டுகள் தயாரிப்போர் எல்லோருமே விடுதலைப்புலிகளுக்கு ஆயுதத் தயாரிப்புக்காகவே உதவுகிறார்கள் என்று உளவுத் துறை கூறுவது உண்மையல்ல; கடந்த பல ஆண்டுகாலமாகவே இவர் இந்தத் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறார்" என்று கைதானவர் சார்பாக உயர்நீதிமன்றத்தில் வாதாடப்பட்டது. வாதத்தை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், அவருக்கு பிணை வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் இது தொடர்பாக கைது செய்யப்பட்டவர்கள் பின்னணி பற்றி, உளவுத்துறை எந்தத் தகவலையும் வெளியிடாததை 'தினமணி' நாளேடு ஆய்வுக் கட்டுரை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது (மார்ச் 25, திருச்சி பதிப்பு) கைதான அனைவரையும் ஒரே வழக்கின் கீழ் எப்படி இணைக்கலாம் என்று உளவுத்துறை திட்டமிடுவதே காரணம் என்று, அந்த ஏடு எழுதியுள்ளது. பொய் வழக்குகளே புனையப்படுகின்றன என்ற சந்தேகமே ஏற்படுகிறது.

'டெகல்கா' ஆங்கில வார ஏட்டில் அதன் செய்தியாளர் வினோஜ்குமார் எழுதியுள்ள கட்டுரை ஒன்று (ஜுன் 30, 2006) எம்.கே.நாராயணன் பற்றிய கருத்துகளை முன் வைத்துள்ளது. எம்.கே. நாராயணன், விடுதலைபுலிகள் இயக்கத்தைக் கடுமையாக எதிர்ப்பவர். அவரது செயல்பாடுகளில் உள்ளீடாகவே புலிகள் எதிர்ப்பே இருக்கும் என்று அக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. "ஈழத் தமிழர்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப்புலிகள் அல்ல; ஈழத் தமிழர் பிரச்னைக்கு இறுதியான தீர்வு உருவாக வேண்டுமானால், அதற்கு பல்வேறு குழுக்களின் ஆதரவைப் பெற்றால்தான் இயலும்" என்பதே எம்.கே.நாராயணன் கருத்து என்பதையும் அக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது. ஈழத்தில் - சிங்கள ராணுவத்தை எதிர்த்து போராடும் ஒரே அமைப்பு விடுதலைப்புலிகள் தான். போர் நிறுத்த ஒப்பந்தம், இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையே தான் உருவானது. இலங்கை அரசே தமிழர்களின் ஒரே பிரதிநிதி விடுதலைப் புலிகள்தான் என்று ஏற்றுக் கொண்ட பிறகும்கூட எம்.கே. நாராயணன் - விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே தமிழர்களின் ஒரே பிரதிநிதியல்ல என்று கூறுவது அவரது விடுதலைப்புலிகள் எதிர்ப்புக் கண்ணோட்டத்தையே பிரதிபலிக்கிறது. 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இணையதளம் ஒன்றில், எம்.கே.நாராயணன் எழுதிய கட்டுரையில், இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே உருவான போர் நிறுத்த ஒப்பந்தத்தையே எதிர்த்தார். தனது மேலாண்மை உறுதிப்படுத்தும் நோக்கத்துடனே விடுதலைப்புலிகள் இந்த உடன்பாட்டை ஏற்றுள்ளனர் என்று எம்.கே. நாராயணன் அதில் எழுதியிருந்தார். "விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளில் நார்வே தூதர்கள் ஈடுபடவில்லை. விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையான கரும்புலிப்படையை கலைத்துவிட வேண்டும் என்று அதிபர் சந்திரிகா வலியுறுத்திய நிபந்தனையை புலிகள் நிராகரித்துவிட்டார்கள். அவர்கள் தொடர்ந்து பயங்கரவாதிகளாகவே செயல்படப் போகிறார்கள் என்பதற்கு இதுவே சான்று" என்று எம்.கே.நாராயணன் அக்கட்டுரையில் விஷம் கக்கி இருந்தார்.

சிறீலங்காவின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கும், விடுதலைப்புலிகளின் "வன்முறை" நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்கும், எத்தகைய வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்பது பற்றி இந்தியா மிகவும் கவலையுடன் பரிசீலிக்க வேண்டும்" என்று அந்தக் கட்டுரையை அவர் முடித்திருந்தார். போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகும்கூட, விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை இந்தியா தீவிரப்படுத்த வேண்டும் என்று எழுதும் அளவுக்கு, எம்.கே.நாராயணன், விடுதலைப்புலிகளின் மீதான பகைமை கொண்டுள்ள அதிகாரி. மத்திய உள்துறை அமைச்சகம் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடுகிற ஆண்டறிக்கையில் விடுதலைப்புலிகள் பற்றிய குறிப்புகள் எதுவும் இடம் பெறுவது இல்லை. எம்.கே.நாராயணன், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்ட பிறகு, 2004-2005 ஆம் ஆண்டுக்கான உள்துறை அமைச்சகத்தின் அறிக்கையில், "விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு ஆபத்தானதாகும்" என்ற குறிப்பு சேர்க்கப்பட்டது. தமிழ் ஈழத்தில் சுனாமி பேரழிவு உருவான நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள இலங்கை அரசுடன் உள்ள பகையை ஒதுக்கி, விடுதலைப் புலிகள், மனிதாபிமான அரசுடன் இணைந்து புனர்வாழ்வுப் பணிகளில் செயல்பட நேசக்கரம் நீட்டியபோது, அதைக் குலைக்கச் செய்வதில், இந்திய உளவுத் துறைக்கு பெரும் பங்கு உண்டு என்று, 'வின்' தொலைக்காட்சியில் செய்தி விமர்சனம் வழங்கி வரும் டி.எஸ்.எஸ்.மணி 'டெகல்கா' ஏட்டுக்கு அளித்த பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார்.

'டெகல்கா'வின் இணையதளம் வெளியிட்டுள்ள மற்றொரு கட்டுரையில் மேலும் பல அதிர்ச்சியூட்டும் தகவல்கள் இடம் பெற்றிருந்தன. தமிழ்நாட்டில் அகதிகள் முகாம்களிலிருந்து இலங்கை ராணுவத்துக்கு உதவும் தமிழ்க் குழுக்களுக்கு ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதற்காக நல்ல தொகை மாத ஊதியமாக அவர்களுக்கு தரப்படுகிறது. என்று இந்திய செய்தி நிறுவனம் வெளியிட்ட தகவலை, 'டெகல்கா' சுட்டிக் காட்டியுள்ளது.

"இப்படி ஆட்கள் தேர்வு நடத்தியது, 'ரா' உளவு நிறுவனத்துக்கு தெரியும். 'ஈ.என்.டி.எல்.எப்.' என்ற இலங்கை அரசு ஆதரவு தமிழ்க் குழுவின் தலைவரான பரந்தன்ராஜன் என்பவர் தமிழ்நாட்டின் அகதி முகாம்களிலிருந்து, கருணா குழுவுக்காக ஆட்களை தேர்வு செய்து வருகிறார்" என்றும் அக்கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

(The recruitment is being conducted with the knowledge of India's externel inteligence agency RAW (Research and Analysis Wing) Tehelka.com added. the ENDLF, reportedly headed by Parathan Rajan, has been recruiting cadres for the Karuna Group) 1987 ஆம் ஆண்டு இலங்கையில் இந்திய ராணுவம் இருந்த போது - 'ரா' உளவு நிறுவன அதிகாரிகள் பரந்தன்ராஜன் தலைமையில் உருவாக்கியதுதான் 'ஈ.என்.டி.எல்.எப்.' என்ற குழுவாகும். இந்தியாவின் பினாமியாக செயல்பட்டது இந்தக் குழு. சென்னையிலும், பெங்களூரிலும் தங்கி செயல்படும் பரந்தன் ராஜன், அண்மையில் விடுதலை புலிகளுக்கு எதிராக செயல்படும் கருணா குழுவோடு இணைந்துள்ளார். 'தமிழ் ஈழ அய்க்கிய விடுதலை முன்னணி' என்ற அரசியல் பிரிவையும் அவர் தொடங்கியுள்ளார். இவை அனைத்தும் 'ரா' உளவு நிறுவனத்தின் ஏற்பாடாகவே இருக்கலாம் என்று, 'டெகல்கா'வின் அந்தக் கட்டுரை கூறுகிறது.

(Given his (Paranthan Rajan) background, observers feel Rajan's alliance with Karuna might be RAW's handiwork) 'வழக்கத்துக்கு விரோதமாக ராஜன் 1990 ஆம் ஆண்டிலிருந்து நீண்ட காலமாக இந்தியாவில் தங்கி சுதந்தரமாக விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு நடவடிக்கைகளில் செயல்பட்டு வருகிறார். அவர் 'ரா'வின் ஏஜென்ட் என்பதற்கு, இது அசைக்க முடியாத ஆதாரம்; விடுதலைப் புலிகளை எதிர்க்கும் சக்திகளை ஒருங்கிணைக்கும் தளமாக 'ஈ.என்.டி.எல்.எப்'வை 'ரா' உளவு நிறுவனம் பயன்படுத்தி வருகிறது என்றும் அக்கட்டுரை கூறுகிறது. விடுதலைப்புலிகள் மட்டுமே ஈழத் தமிழர் பிரதிநிதிகள் அல்ல என்று எம்.கே. நாராயணன்கள் வலியுறுத்துவதற்கு காரணமே, இதுதான். இத்தகைய பினாமி துரோகக் குழுக்களை பேச்சு வார்த்தைகளில் பங்கெடுக்கச் செய்து தமிழர்களின் பிரச்சினையைக் குழப்புவதிலேயே இவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். ஈழத் தமிழ்ப் போராளிகளை தமிழ்நாட்டிலோ, இந்தியாவின் வேறு மாநிலங்களிலோ அனுமதிக்க முடியாது என்று ஒருபுறம் கூறிக் கொண்டு, மறுபுறம், விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயல்படும் குழுக்களை உளவு நிறுவனங்கள், சுதந்திரமாக செயல்பட அனுமதித்துவரும், 'இரட்டை வேடத்தை' தமிழ்நாட்டு மக்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். இவற்றை எல்லாம் நன்றாக அறிந்து வைத்திருக்கும் அதிகார அமைப்பில் உள்ளவர்தான் எம்.கே. நாராயணன்.

1982 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் தேதி சென்னை தியாகராயர் நகர் 'பாண்டிபசாரில்' இரவு 9.45 மணிக்கு, ஒரு சம்பவம் நடந்தது. அப்போது ஈழ விடுதலைக்கான போராளிக் குழுக்கள் எதுவுமே வளர்ச்சிப் பெறாத காலம். விடுதலைப் புலிகள் அமைப்பைச் சார்ந்த பிரபாகரன், சிவக்குமார் ஆகியோரும், புளோட் அமைப்பைச் சார்ந்த உமாமகேசுவரனும், நேருக்கு நேர் சந்தித்த போது துப்பாக்கியால் சுட்டுக் கொண்டனர். உமாமகேசுவரன் காயமடைந்தார். பிரபாகரனும், சிவக்குமாரும் கைது செய்யப்பட்டனர். அடுத்த சில நாட்களில் உமாமகேசுவரனும் கைது செய்யப்பட்டார். தமிழ்நாட்டில், சட்டம் ஒழுங்கு பிரச்சினையை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். உத்தரவின் பேரில் அன்றைய காவல்துறை தலைமை இயக்குநர் மோகன்தாஸ் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். அப்போது இந்திய உளவுத் துறையில் கூடுதல் இயக்குனராக இருந்தவர் எம்.கே.நாராயணன். சென்னையில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தைத் தொடர்ந்து, அடுத்த நாளே டெல்லியிலிருந்து சென்னைக்கு பறந்து வந்தார் எம்.கே.நாராயணன். காவல்துறை இயக்குனர் மோகன்தாசை சந்தித்து - பிரபாகரன், உமாமகேசுவரன் மீது நடவடிக்கை எடுப்பதில் அவசரம் காட்டாதீர்கள்; நடவடிக்கைகளைத் தள்ளிப் போடுங்கள் என்று கேட்டுக் கொண்டார். பிறகு முதலமைச்சர் எம்.ஜி.ஆரையும் சந்தித்து, இதையே வலியுறுத்தினார். ஆனால் முதல்வர் எம்.ஜி.ஆரோ, இது எங்கள் மாநிலத்தின் சட்டம் ஒழுங்குப் பிரச்சினை. இதில் நீங்கள் தலையிட வேண்டாம் என்று நேருக்கு நேராக கண்டிப்பாகக் கூறிவிட்டார். ராஜிவ் கொலைப் பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணைய விசாரணையின் போது காவல்துறை இயக்குநர் மோகன்தாஸ் அளித்த வாக்குமூலத்தில் (2.1.1996) இதைப் பதிவு செய்துள்ளார்.

பிரபாகரனும், உமாமகேசுவரனும் சென்னையில் கைது செய்யப்பட்டு விட்டார்கள் என்ற தகவல் கிடைத்தவுடன், சிறீலங்காவின் காவல்துறை தலைமை அதிகாரி (அய்.ஜி.) ருத்ரா ராஜசிங்கம் உடனடியாக சென்னைக்கு பறந்து வந்தார். மத்திய அரசின் அனுமதியின்றி, இலங்கைக் காவல்துறை அதிகாரி தமிழ்நாடு வந்திருக்க முடியாது. பிரபாகரன், உமாமகேசுவரனைப் பிடித்துக் கொடுத்தால், ஒவ்வொருவருக்கும் 5 லட்சம் வெகுமதி அளிக்கப்படும் என்று சிறீலங்கா அரசு அறிவித்திருந்தது.

உளவுத் துறை அதிகாரி எம்.கே. நாராயணன், தமிழ்நாட்டுக்கு வந்து, தமிழக முதல்வரை நேரில் சந்தித்து வலியுறுத்த வேண்டிய அவசியமென்ன ? உடனடியாக - இலங்கை காவல்துறை தலைமை அதிகாரி, ஏன், தமிழகத்துக்கு வர வேண்டும் ? இந்த நிகழ்வுகளுக்கு இடையே தொடர்புகள் உண்டு. கைது செய்யப்பட்ட பிரபாகரன், உமாமகேசுவரன் உட்பட நான்கு ஈழப் போராளிகளையும், தமிழ்நாட்டில் காவலில் வைக்காமல், சிறீலங்கா அரசிடம் ஒப்படைக்க, உளவுத்துறை திட்டமிட்டதே இதற்குக் காரணம். இப்படி ஒரு சதி நடக்கிறது என்ற நிலையில், அன்று காமராசர் காங்கிரஸ் கட்சி என்ற பெயரில் கட்சி நடத்தி வந்த பழ. நெடுமாறன், அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டினார். தமிழ்நாட்டில் கைது செய்யப்பட்ட ஈழப் போராளிகளை இலங்கை அரசிடம் ஒப்படைக்கக் கூடாது என்று அனைத்துக் கட்சிக் கூட்டம் தமிழக அரசையும், மத்திய அரசையும் வலியுறுத்தியது. இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். பிரதிநிதியை அனுப்பி வைத்தார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்ட முதல்வர் எம்.ஜி.ஆர்., கைது செய்யப்பட்ட ஈழப் போராளிகளை மரியாதையுடன் நடத்துமாறு காவல் துறைக்கு உத்தரவிட்டார். இலங்கைக்கு நாடு கடத்தும் திட்டமில்லை என்று காவல்துறை இயக்குநர் மோகன்தாஸ் அறிவித்தார். எதிர்கட்சியிலிருந்த கலைஞரும், போராளிகளை இலங்கை அரசிடம் ஒப்படைப்பதை எதிர்த்துப் பேசியதோடு, உடனடியாக பிரதமர் இந்திரா காந்திக்கு தனது தூதர் ஒருவரை அனுப்பி, உளவுத் துறையின் நாடு கடத்தும் முயற்சிகளை நிறுத்தக் கூறினார். உளவுத் துறையின் சதித் திட்டம் தோல்வியில் முடிந்தது.

எம்.கே.நாராயணன் தொடர்பான மற்றொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 1991 ஆம் ஆண்டு மே 21

4 ஆம் பக்கம்

# புலிகள் படைக்கும் சரித்திரம் : சோலை

ஈழப் போராளிகள் இப்போது தான் முதன்முதலாக விமானத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றனர். அதனைக் கண்டு வன்முறை, பயங்கர வாதம் என்று ராஜபட்சேக்கள் மட்டுமல்ல, இங்குள்ள அதிமேதாவிகள் சிலரும் ஆர்ப்பரிக்கிறார்கள்.

தினம் தினம் ஈழத்து மக்களைப் பலி கொள்ள எந்த விமான தளத்திலிருந்து இலங்கை ராணுவப் போர் விமானங்கள் பறந்த செல்கின்றனவோ, அந்தப் பயங்கரவாதப் பாசறையைத்தான் அவர்கள் தாக்கினர். சிங்கள மக்களைத் தாக்கவில்லை. அந்த விமான தளத்திற்கு அருகிலுள்ள சர்வதேச விமான நிலையத்தைச் சேதப் படுத்தவில்லை.

தினம் தினம் அப்பாவி ஈழ மக்களை இலங்கை ராணுவ விமானங்கள் குண்டு போட்டு அழிப்பது பயங்கரவாதமல்லவா ? அந்த அரசாங்க பயங்கரவாதத்தை ஏன் இவர்கள் கண்டிப்பதில்லை ?

ஈழப் பிரச்சினைக்குப் போர் முனை யில் தீர்வு காண முடியாது. பேசித் தீர்த்துக் கொள்க என்று எத்தனை முறை இந்தியா இலங்கை அதிபர்களுக்கு புத்திமதி கூறி யிருக்கிறது ? அந்த அறிவுரையை அவர்கள் கேட்க மறுத்தனர். போர் நிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஈழப் போராளிகளின் அரண்களை அழிக்க முனைந்தனர். தமிழினப் படுகொலையை வேகப்படுத்தினர்.

கிழக்கு மாநிலத்தில் சம்பூர் கிராமத் தைக் கைப்பற்றி விட்டோம். வாகரையைக் கைப்பற்றி விட்டோம். மட்டக்களப்பு மாவட்டமே தங்கள் வசம் தான் என்று ராஜபட்சேக்கள் பெருமை பேசினர். சம்பூரிலிருந்தும் வாகரையிலிருந்தம் ஈழப் போராளிகள் பின் வாங்கினர் என்பதும் உண்மை. அந்தப் பின் வாங்கல் அநியாய மாக ரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட போர்த் தந்திரம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை ராணுவம் மூன்று மாதங்களாகப் போர் நடத்தியது. 95 சதவிகிதப் பகுதிகளைக் கைப்பற்றி விட்டதாக அறிவித்தது. அந்த வெற்றிச் செய்தியை உலகிற்குத் தெரிவிக்க விரும்பியது. கொழும்பில் இருக்கும் வெளிநாட்டுத் தூதர்களை அழைத்துச் சென்றது. அவர்கள் பயணித்த ஹெலிகாப்டர், மட்டக்களப்பு பள்ளி மைதானத்தில் இறங்கும் நேரம் பூமியிலிருந்து குண்டுகள் பறந்து வந்தன.

வருவது பல்வேறு நாட்டுத் தூதர்கள் என்று செல்போனில் ஒரு தூதர் தகவல் தந்தார். போராளிகள் மன்னிப்புக் கேட்ட னர். முன்னறிவிப்பின்றி வரலாமா என்று வருத்தம் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் உணர்த்துவது என்ன ? மட்டக் களப்பு என்றும், போராளி களின் கட்டுப்பாட்டில் தான் என்பதனை வெளிநாட்டுத் தூதர்களே நேரடியாகத் தெரிந்து கொண்டனர்.

கொழும்பு ராணுவ விமான தளத்தைத் தகர்த்த இரண்டு நாட்களுக்குப் பின்னர், மட்டக்களப்பின் இலங்கை ராணுவ முகாமைத் தாக்கினர். அந்த முகாமிற்கு அரணாக கருணாவின் கூடாரம். இன்னொரு பக்கம், பொடி டப்பா அளவிற்குக் கட்சி வைத்திருக்கும் டக்ளஸ் தேவானந் தாவின் கூடாரம். அந்த டக்ளஸ்தான் ஈழ மக்களின் ஏகப் பிரதி நிதியாம். அந்த மனிதரையும் அமைச்சர் என்று இலங்கை அரசு ஜிகினா கிரீடம் சூட்டியிருக் கிறது. இந்த மூன்று முகாம்களையும் ஒரேயொரு போராளி இன்னுயிர் தந்து துவம்சம் செய்து விட்டான்.

கொழும்பு ராணுவ விமானதளம் அரசாங்க பயங்கரவாதத்தின் ஆணி வேர். மட்டக்களப்பு ராணுவ முகாம் அந்தப் பயங்கரவாதத்தின் இன்னொரு பாசறை.

தமிழ் மக்களைத் தினம் தினம் ரத்த நீராட்டும் இந்தப் பயங்கரப் படுகுழிகள் தான் அழிக்கப்பட்டன. சாமானிய சிங்கள மக்களுக்கு எந்தச்சேதமும் இல்லை.

ஈழப் போராளிகளின் கடற்படை வலிமை வாய்ந்தது என்பதனை ஏற்கெனவே ராஜபட்சேக்கள் அறிவித்திருக்கின்றனர். ஏற்கெனவே கொழும்பிற்கு அருகிலுள்ள கப்பற்படைத் தளத்தைத் தாக்கி, கடல் போராளிகள் தங்கள் வல்லமையை மெய்ப்பித்திருக்கிறார்கள்.

விடுதலை வேட்கைக்கு முன்னால், ஆயுதங்களும் குண்டுகளும் போராளி களின் கால் தூசுகள் என்பதனை எத்தனையோ நாடுகளில் எத்தனையோ விதமாக சரித்திரம் மெய்ப்பித்திருக்கிறது.

ஈழப் போராளிகளின் விமானத் தாக்கு தல் உணர்த்துவது என்ன ? ஒரு பக்கம் நவீன ஆயுதங்களையும், போர் விமானங் களையும் வாங்கி இலங்கை அரசு குவிக் கிறது. அதனையும், தங்கள் சிட்டுக் குருவி விமானங்களால் எதிர் கொள்ள முடியும் என்று போராளிகள் மெய்ப்பித்திருக் கிறார்கள். எனவே, இலங்கையில் இனவாத அரசுகள் தொடங்கிய போர், புதிய பரிணாமத்தை எட்டியிருக்கிறது.

இலங்கை அதிபர் ராஜபட்சே அவசர அவசரமாக டெல்லி வருகிறார். இனி இந்தியா - இலங்கை கடல் கூட்டு ரோந்து என்று ஆரம்பிப்பார். காரணம், ஈழக் கடற்புலிகளைச் சந்திக்கும் ஆற்றல் இலங்கை கப்பற்படைக்கு இல்லை. எனவே, ஈழப் போராளிகளுடன் இந்திய ராணுவத்தை ஜெயவர்த்தனே மோதவிட்டது போல் இன்னொரு மோதலுக்கு வழி தேடுகிறார்கள்.

ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காண இந்தியா எவ்வளவோ ஆலோசனை களைத் தெரிவித்திருக்கிறது. ஏன் ? தமிழக முதல்வர் கலைஞர்கூட தம்மைச் சந்தித்த வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர மேனனிடமும் பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே நாராயணனிடமும் தெரிவித்திருக்கிறார். ஆனால், இன்று வரை இலங்கை அரசு எந்த ஆலோசனையையும் செயல்படுத்தவில்லை. அது மட்டுமல்ல, ஆழ் கடலில் மீன் பிடிக்கச் செல்லும் நமது மீனவர்களைச் சுட்டுத் தள்ளுவதையும் இலங்கை ராணுவம் நிறுத்துவதாகத் தெரியவில்லை. மாறாக அதிகரித்துக் கொண்டே வருகிறது. இதை நமது அரசு ராஜபட்சேக்களிடம் கேட்க வேண்டாமா ?

**(‘குமுதம் ரிப்போர்ட்டர்’ இதழில் (12.4.2007) பிரபல எழுத்தாளர் சோலை எழுதிய கட்டுரையின் ஒரு பகுதி)**

*3 ஆம் பக்கத் தொடர்ச்சி*

ஆம் தேதி ஸ்ரீபெரும்புதூரில், ராஜீவ் கொலை செய்யப்பட்டார். அப்போது இறந்து போன ஹரிபாபுவின் கேமிராவுக்குள் சிக்கிய புகைப்படம் தான், கொலை காரர்களை அடையாளம் காட்டும் ஒரே ஆதாரமாக இருந்தது என்று சிறப்புப் புலனாய்வுக் குழு கூறியது. ஆனால், சம்பவம் நடந்த அடுத்த நாளே - அதாவது 22.5.91-ல் அன்றைய உளவுத் துறை இயக்குனராக இருந்த நாராயணன், பிரதமர் அலுவலகத்தில் சில வீடியோ காட்சிகளை ஆவணமாக சமர்ப்பித்துள் ளார். ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்தின் வீடியோ படத்தை ஸ்கேன் செய்து பார்க்கப்பட்டது என்றும், ராஜீவுக்கு மாலை அணிவித்த அந்தப் பெண் யார் என்பதை கண்டறிய முயற்சிக்கப்பட்டது என்றும், உளவுத் துறை குறிப்பை எழுதியிருந்தது. ஆனால், ராஜீவ் கொலை பற்றி விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழுவிடம் அந்த வீடியோ படத்தை உளவுத் துறை சமர்ப் பிக்கவே இல்லை. சிறப்புப் புலனாய்வுத் துறையின் இயக்குனர் டி.ஆர். கார்த்தி கேயன், ராஜீவ் கொலையில் வெளிநாட்டு சதி பற்றி விசாரிக்க நியமிக்கப்பட்ட வர்மா ஆணையத்தின் முன் அளித்த வாக்கு மூலத்தில் இதைப் பதிவு செய்துள்ளார். (வர்மா ஆணையம் அறிக்கை 11வது அத்தியாயம் - 53வது பக்கம்)

உளவுத் துறை இயக்குனராக இருந்த எம்.கே.நாராயணன், ராஜீவ் பாதுகாப்புப் பிரச்சினையில் தனது கடமையை ஒழுங்காக செய்யவில்லை என்று வர்மா ஆணையம் சுட்டிக் காட்டியது. அப்போது ராஜீவ்காந்தி, இந்தியாவின் பிரதமர் அல்ல. எதிர்க்கட்சித் தலைவர். தேர்தல் பிரச்சாரத்துக்காக ஸ்ரீபெரும்புதூருக்கு வருகிறார். அன்று பிரதமர் பதவியில் இருந்தவர் - சந்திரசேகர். “உளவுத் துறை இயக்குனராக இருந்த நாராயணன், ராஜீவுக்கு செய்யப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் அதிருப்தி கொண்டிருந்தார். ஆனால் வெளியில் சொல்ல முடியாத சில காரணங்களால், அவரால் ஏதும் செய்ய முடியவில்லை. எனவே ராஜீவ் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றி இதுவரை அவர் மவுனம் சாதிக்கிறார்” என்று வர்மா ஆணையம் எம்.கே.நாராயணன் பற்றி குறிப்பிட்டது.

அதுமட்டுமல்ல - “ஆணையம் இப்படிக் கருதுவது உண்மை என்றால், உயர்ந்த பதவியில் உள்ள ஒருவருக்கு அத்தகைய இயலாமை ஏன் ஏற்பட்டது. இது மோசமான கவலைக்குரிய பிரச்சினை. இதற்கான காரணத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும். அதை அகற்ற வேண்டும். அதுவே ஆரோக்கியமான அரசியலுக்கு உகந்தது” - என்றும் வர்மா ஆணையம் இடித்துக் காட்டியது.

“14.24: The Commission is left with the impression that the DIB M.K. Narayanan was not satisfied with the security arrangements for Rajiv Gandhi and was apprehensive about his safety, but for some undisclosed reason he was ineffective and has chosen to maintain silence even now. If the impression of the commission be correct, such disability in the holder of a high office is disturbing and its cause needs to be discovered and eradicated for the health of policy” (Page 75)

ராஜீவ் காந்திக்கு உரிய பாதுகாப்பு தரப்படாமல் தடுத்தது யார் ? அந்த சக்திகளுக்கு எம்.கே. நாராயணன் உடந்தையாக இருந்தது ஏன் ? அந்த ரகசியங்களை, எம்.கே.நாராயணன் வெளி யிடாதது ஏன் ? ஸ்ரீபெரும்புதூர் கூட்டத் தின் ‘வீடியோ’வை உளவுத் துறை எடுத் திருந்தும், அதை சிறப்புப் புலனாய்வுக் குழுவின் முன் சமர்ப்பிக்காமல் போனதற்கு பின்னணி என்ன ? இவை இன்னும் விடை தெரியாத கேள்விகள்.

வர்மா ஆணையத்தின் முன் இப்படி சந்தேகக் கூண்டில் நிறுத்தப்பட்டவர்தான் எம்.கே.நாராயணன். அவர் தான், இப்போது, பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர். அதுவும் ராஜீவ் துணைவியார் சோனியாவின் தலைமையில் செயல்படும் கூட்டணி ஆட்சியில் ! அதே நாராயணன் தான் இப்போது விடுதலைப்புலிகளின் தளமாக தமிழகம் மாறிவிட்டதைப்போல் தோற்றத்தை உருவாக்கிக் கொண்டு, திரைமறைவில் காய்களை நகர்த்திக் கொண்டிருப்பவர்.

ஆட்சிகள் மாறினாலும் - இந்திய தேசியப் பார்ப்பன ஆட்சியின் அதிகாரங் களை ஆட்டிப் படைக்கும் சக்திகள் தங்களது பார்ப்பன மேலாதிக்கப் பார்வை யுடனே திட்டங்களைத் தீட்டி செயல் படுத்துகின்றன. உளவுத்துறை நடத்திய திரைமறைவு திட்டங்களை ஏராளமாக எழுதிக் கொண்டே போகலாம்.

ஆனாலும், ஈழத் தமிழர் பிரச்சினையில் உண்மையான ஈடுபாட்டோடு களத்தில் நிற்கும் ஒரு இயக்கம் - இந்த உளவுத் துறைகளால் களங்கப்படுத்தும் அவலங்களை தமிழர்களுக்கு உணர்த்திட வேண்டும் என்ற நோக்கத்துடனே இத் தொடரை எழுதினோம். தமிழர்கள் இந்த சூழ்ச்சி களை மக்கள் மன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற வேண்டுகோளை முன் வைத்து இத் தொடரை நிறைவு செய்கிறோம்

**– விடுதலை இராசேந்திரன்**

## அம்பேத்கர் பிறந்த நாள் சென்னையில் கழகம் மரியாதை


14.4.2007 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் சென்னை நேரு விளையாட்டு அரங்கம் அருகிலுள்ள அம்பேத்கர் சிலைக்கும், சேத்துப்பட்டிலுள்ள அம்பேத்கர், பெரியார் சிலைக்கும் கழகத் துணைத் தலைவர் ஆனூர் செகதீசன் மாலை அணிவித்தார். பின்னர் இராயப்பேட்டையிலுள்ள அனுமந்தபுரம் பகுதியை சார்ந்த செல்வம் நடத்திய அம்பேத்கர் பிறந்த நாள் நிகழ்ச்சியிலும் அவர் கலந்து கொண்டு கேக்வெட்டி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் பகுதித் தலைவர் ஏகாம்பரம், இந்திய மனித உரிமை கட்சி மகிழ்வாணன், பகுஜன் சமாஜ் கட்சி தென் சென்னை மாவட்ட செயலாளர் கன்னியப்பன், விடுதலை சிறுத்தைகள் சாரநாத், சென்னை மாமன்ற உறுப்பினர் உமா சாசவி, அய்ஸ் அவுஸ் பகுதி காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த பாபு, கழக மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் எ.கேசவன், அன்பு தனசேகர், தபசி குமரன், தமிழ் செல்வம் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

Tamil Weekly

Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 19th April 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 ஏப்ரல் 26, 2007 புரட்சி 4 முழக்கம் 72 விலை : ரூ.2.50


## ‘பண்டு கிராமங்கள் - இரட்டை பெஞ்ச்’ கொடுமைகளை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்த கழகச் செயல்வீரர்களை சாதி வெறியர்கள் உயிரோடு கொளுத்த முயற்சி!

# ‘அரசு கொறடா’ ஆதரவுடன் வெறியாட்டம்!

திண்டுக்கல் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கிராமங்கள் தோறும் இரட்டைக்குவளை ஒழிப்பு - பஞ்சமி நில மீட்பு - ரிலையன்ஸ், வால்மார்ட் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டுக் கொள்ளை எதிர்ப்புப் பயணம் 11.4.07 முதல் 22.4.07 வரை நடத்தத் திட்டமிடப்பட்டது.

அனைத்து ஊர்களிலும் இரட்டைக் குவளை முறையின் கொடுமையை விளக்கியும், பஞ்சமி நில மீட்பின் அவசியத்தை விளக்கியும், விளைபொருட்களுக்கு விவசாயிகளே விலை நிர்ணயம் செய்ய வேண்டியதன் அவசியம் பற்றியும் விரிவாக மக்களிடம் விளக்கப்பட்டது. பாடல்கள் மூலமும் மக்களிடம் கருத்துகள் எடுத்துச் சொல்லப்பட்டன. அனைத்து கிராமங்களிலும் மக்கள் நல்ல ஆதரவு அளித்தனர். பிரச்சாரத்தைக் கேட்டு கழகத் தோழர்களுக்கு பொது மக்கள் நன்கொடை வழங்கினர். எந்த இடத்திலும் சிறு சலசலப்புக்கூட இல்லை.

கழகத் தோழர்கள் பயணம் சென்ற பாதையிலுள்ள ஊர்களில் இரட்டை குவளை முறை இருக்கிறதா என ஆய்வு செய்ய கழகத் தோழர்களின் ஆய்வுக்குழு கிராமம் கிராமமாகச் சென்றது. அப்போது இரட்டைக் குவளை முறை மட்டுமல்லாமல் இரட்டை பெஞ்ச் முறை என்னும் கொடுமையும் இருப்பதும் தெரிய வந்தது. அதாவது பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு உயரமான பெஞ்ச் அல்லது திண்ணை, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வெறும் தரை அல்லது உயரம் குறைவான பெஞ்ச் என்ற பிரிவினை முறை.

இந்த இரண்டு கொடுமையும் பழனி ஒன்றியத்தில் வயலர் அருகேயுள்ள மிடாப்பாடி, மயிலாபுரம், நல் லெண்ணக் கவுண்டன்புதூர், பாப்பாகுளம், அய்யம் பாளையம், சின்னாக்கவுண்டன்புதூர், பழனி அருகேயுள்ள



தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரை தரையில் உட்கார வைத்திருக்கும் கொடுமை

வேலாயுதம்பாளையம்புதூர், காவலப்பட்டி ஆகிய ஊர்களில் நடைமுறையில் உள்ளன. அதே போல தொப்பம்பட்டி ஒன்றியத்தில் கோவில் அம்மாபட்டி, அத்திமரத்துவலசு, ராஜாம்பட்டி, பணம்பட்டி, அக்கரைப்பட்டி, சரவணப்பட்டி, ஆலாவலசு, பூலாம்பட்டி, வாகரை, மரிச்சிலம்பு, போதுப்பட்டி, கொழுமங்கொண்டான், சங்கஞ்செட்டிவலசு, கல்துரை, கோட்டத்துரை, பெரியமொட்டனூத்து, தாளையூத்து, நாச்சியப்பக் கவுண்டன்வலசு ஆகிய ஊர்களிலம் இக் கொடுமைகள் உள்ளன. அப்பகுதி தாழ்த்தப்பட்ட மக்களிடமும் இதுபற்றி பேசி ஆதாரங்களை கழகத் தோழர்கள் சேகரித்தனர். புகைப் படமும் எடுத்தனர்.



தொடர்ச்சியாக தொப்பம்பட்டி அருகிலுள்ள வாகரைக்கு 15.4.07 மாலை 5.30 மணிக்கு பிரச்சாரக் குழு சென்றது. இந்த வாகரை கிராமத்தில் தான் பஞ்சாயத்து தலைவராக தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தோழர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதை பொறுத்துக் கொள்ள முடியாத ஆதிக்கசாதி வெறியர்கள், அந்தத் தோழரை பஞ்சாயத்து கட்டடத்துக்கு வெளியே தரையில் அமர வைத்து, அவரைக் கொலை செய்யவும் முயற்சித்தனர். கழகப் பாடகர் பிரச்சாரம் குறித்த அறிவிப்பைத் தொடங்கிய உடனேயே கழகத் தோழர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்கள் சுமார் 50 பேர் குவிந்தனர். மைக்கை நிறுத்து என்றனர்; பிறகு “இரட்டைக் குவளை பத்தியெல்லாம் இங்கு பேசக் கூடாது. நாங்கள் தெப்பம்பட்டி யிலேயே உன் பேச்சைக் கேட்டோம்; வாகரைக்கு வந்து பாத்துக்கலாம் என்றுதான் இருந்தோம் எனக் கூறி தோழர் மருதமூர்த்தியை கீழே தள்ளினர். பெட்ரோலை கொண்டு வாங்கடா, இவிங்க மேல் ஊத்துங்கடா, வண்டி மேல ஊத்துங்கடா என கும்பல் கத்தியது. இங்க பார், இதெல்லாம் **பண்டு கிராமம்** (Fund கிராமம் - சாதி வளர்ச்சிக்காக நிதி திரட்டி வைத்து, தாழ்த்தப்பட்டோரை அடக்கி வைத்திருக்கும் கிராமம்) சுத்தி இருக்கற 30 ஊர்களும் பண்டு கிராமந் தான். இதுல எங்கேயும் உங்கள நாங்க பார்க்கக் கூடாது. மீறிப் பேசினீங்கனா அங்கேயே கொளுத் தீருவோம்” என்று வெறிக் கூச்சலிட்டனர்.

பிரச்சாரக் குழுவின் மீது தாக்குதல் நடந்த வாகரை கிராமத்திற்கு மிக அருகிலுள்ள தொப்பம்பட்டி வரை காவலர்கள் வந்தனர். ஆனால், ஒட்டன்சத்திரம் துணைக் கண்காணிப்பாளர் அலுவலக எல்லைக்குள் நுழைந்ததும் காவலர்கள் யாரும் வரவில்லை. வரவில்லை என்பதைவிட கொடுமை என்னவென்றால், இதுபற்றி கள்ளிமந்தையம் காவல்நிலையத்தில் புகார் செய்ய கழகத் தோழர்கள் சென்றனர். கழக வழக்கறிஞர்கள் செல்லத்துரை, ஜெபராஜ் இருவரும் உடன் சென்றனர். உதவி ஆய்வாளர் சீனிவாசன், யாரைக் கேட்டு வாகரைக்கு உள்ளே வந்தீர்கள் ? புகாரெல்லாம் வாங்க முடியாது. உடனே கிளம்பி ஓடுங்கள் என மிரட்டியுள்ளார். 15.4.07 மாலை 6.30 முதல் 7.30 வரை அவருடன் கழகத் தோழர்கள் வாதம் செய்தும் புகாரை வாங்கவில்லை. 7.30 மணிக்கு வாகரையிலிருந்து இரண்டு மினி லாரிகளில் சுமார் 100 பேர் கள்ளிமந்தையம் காவல் நிலையத்திற்கு வந்திறங்கினர். ஒரு சிலர் உதவி ஆய்வாளரிடம் பேசுவதற்காக காவல் நிலையத்திற்குள் சென்றனர். மற்றவர்கள், ஏண்டா ஒழுங்கா ஓடாம கம்ளெய்ண்ட் பண்ண வந்திட்டீங்களா எனக் கூறி காவல்நிலையம் எதிரிலேயே வாகனத்தை அடிக்கத் தொடங்கினர். சத்தம் கேட்ட உதவி ஆய்வாளர் சீனிவாசன் வெளியே வந்த வாகனத்தைக் காப்பாற்றி உடனே வெளியேறுங்கள் என்றார்.

காவல் நிலையத்திலேயே கழகத் தோழர்களின் வாகனத்தை தாக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களை அழைத்துக் கொண்ட சாதி ஒழிப்புக்காக களப்பணியாற்றிவரும் கழகத் தோழர்களை விரட்டினார் உதவி ஆய்வாளர்.

உடனே ஒட்டன்சத்திரம் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்துக்கு கழகத் தோழர்கள் சென்றனர். அங்கு வெகு நேரம் யாரும் இல்லை. 9 மணிக்கு ஆய்வாளர் இராஜா வந்தார். அப்புகாரை வாங்கிக் கொண்டார். முதல் தகவல் அறிக்கை தருமாறு கழகத் தோழர்கள் கேட்டதற்கு, அவரோ ‘கேள்விப்பட்டேன்’. வாகரைக்காரர்களை தொலைபேசியில் கண்டித்தேன். அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது. புகாரெல்லாம் வாங்க முடியாது. முதல் தகவல் அறிக்கையும் தரமுடியாது” என்றார். “நான் ஒன்றும் செய்ய முடியாது, அரசுகொறடா சக்கரபாணி வாகரைக் காரர்களைக் கண்டித்ததற்கே என்னைக் கடுமையாகத் திட்டினார்.

4 ஆம் பக்கம்

## ஆட்சியை ஆதரித்த பெரியார், போராட்டம் நடத்தாமல் இருந்ததில்லை

# தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்து எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

## ஈரோடு பொதுக் கூட்டத்தில் கழகத் தலைவர் முழக்கம்

*தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கழகத் தோழர்களை சிறைப் படுத்தியுள்ள தமிழக அரசைக் கண்டித்து 19.3.07 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய கருத்தாழம் மிக்க உரை:*

"தோழர்களே! தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நமது தோழர்களை சிறைப்படுத்தியுள்ள செய்திகளை உங்கள் முன்னால் பகிர்ந்து கொள்வதும், அதில் தமிழக அரசு நடந்து கொள்ளும் முறை பற்றி அலசுவதும் தான் இந்தக் கூட்டத்தின் நோக்கம்.

மனித உரிமையில் ஆர்வமுள்ளவர்கள், ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் யாரும் இத்தகைய அடக்குமுறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். குற்றம் நடந்த பின்பு அதற்குரிய பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து சிறைப்படுத்தி வழக்கு நடத்துவது ஏற்கக் கூடியது. ஆனால், குற்றம் நடப்பதற்கு முன்பாகவே 'நடக்குமோ' என்று கருதி, கைது செய்கிற அதிகாரம் சட்டம் இருக்கக் கூடாது.

பிரிட்டிஷ் ஆட்சியில் முதல்முறையாக குற்ற நடைமுறைத் திருத்தச் சட்டம் என்பதை அறிமுகப்படுத்தி, அதில், 7-1ஏ என்ற பிரிவில் தான் வழக்கமாக எல்லோரையும் கைது செய்வார்கள். அதை காங்கிரசு எதிர்த்தது. குற்றம் நடக்கும் முன்பே கைது செய்ய கூடாது என்று போராடினார்கள். பின்பு காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது. இந்தி எதிர்ப்புப் போரும் வந்தது. போராட்டத்தில் கலந்து கொள்ளும் முன்பே சுயமரியாதை இயக்கத் தோழர்களை காங்கிரஸ் அரசு கைது செய்தது.

அப்போது பெரியார், "நீ தான் எதிர்த்தாய், இப்போது நீயே கைது செய்கிறாயே?" என்று கேட்டார். ஒவ்வொரு ஆட்சியிலும் எதிர்த்த சட்டங்களை அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது பயன்படுத்துவது வழக்கமாகிவிட்டது.

தி.மு.க.வினர் 'மிசா'வில் அடிபட்ட போது மிசா என்ற கொடுமையான சட்டம் இனிமேல் இருக்கக் கூடாது என்று கருதியது. 356 பிரிவு கூடாது என்று கூறினார்கள். ஆனால், எம்.ஜி.ஆர். மீதும் ஜெயலலிதா மீதும் பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்கள். நாம் அப்படிக் கூறுபவர்கள் அல்ல. மரணதண்டனைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் நாம், சங்கரராமன் வழக்கில் சங்கராச்சாரிக்கும் கொடுக்கக் கூடாது என்று தான் சொல்லுவோம். தேசிய பாதுகாப்புச் சட்டம் கூடாது என்று சொல்லுகிறோம். இந்து மக்கள் கட்சிக்கும் போடக் கூடாது என்றும் சொல்கிறோம். இது நாம் எடுத்திருக்கும் முதல் நிலை.

அடுத்து, இந்த வழக்கைப் பதிவு செய்தது பற்றி சில செய்திகளை நாம் சொல்ல வேண்டும். முதலில் பெரியார் சிலையை கோவிலுக்கு முன்பு வைத்தது தவறு என்று சொன்னார்கள். பெரியார் இருந்திருந்தால் இப்படிச் செய்யமாட்டார் என்றார்கள். இப்படி பலவிதமாக நம் எதிரிகள் மட்டுமல்ல, பெரியார் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

கோயிலுக்கு முன்பு பெரியார் சிலையை வைக்கலாமா என்று கேட்கிறார்கள். வைத்திருக்கிறோம். பல இடங்களில் வைத்திருக்கிறோம். 15-20 ஆண்டுகளுக்கு முன்பே காஞ்சிபுரம் சங்கர மடத்திற்கு முன்பே வைத்திருக் கிறோம்.



கோயிலுக்கு முன்பு பெரியார் சிலையை வைப்பது அவசியம்- இரண்டு பார்வையில்!

மதுக்கடைகளில் சிகரெட் பெட்டிகளில் 'இது தீங்கானது' - என்று எழுதிப் போடுவதைப் போல, எந்த இடத்தில் தீங்கு இருக்கிறதோ அங்கு தான் எச்சரிக்கை வாசகம் தேவை. கோயிலுக்குச் செல்வது மானத்துக்குக் கேடு என்று - பெரியார் சிலையை அதனருகில் வைப்பது கட்டாயம் என்பது ஒரு பார்வை!

இன்னொரு பார்வை என்ன வென்றால், வைக்கத்தில் கோவிலைச் சுற்றியுள்ள வீதிகளில் செல்வதற்கு உரிமை வாங்கித் தந்தவர் பெரியார். சுயமரியாதை இயக்கத்தினர் தான் சுசீந்திரத்தில் தொடங்கி, திருவண்ணாமலையில், மதுரையில், மலைக்கோட்டையில், எல்லா இடங்களிலும் தாழ்த்தப்பட்டவர்களை, நாடார்களை அழைத்துச் சென்று கோயிலுக்குப் போய் அடி, உதை வாங்கினார்கள். வழக்குகளை எதிர் கொண்டார்கள், சிறைப்படுத்தப்பட்டார்கள். அதற்குக் காரணமானது சுயமரியாதை இயக்கம். அதை வழி நடத்தியவர் பெரியார்!

அடுத்து கோயிலுக்குள் சென்று அங்கு வழிபாடு செய்வதற்கு, தமிழனுக்கு, தமிழ் மொழிக்கு உரிமை இல்லை என்று சொன்னார்கள். அதற்கு இறுதி வரை எதிர்ப்புக் குரல் கொடுத்தவர் நாத்திகரான பெரியார் தான். இறுதிப் போராட்டமாக அதையே அறிவித்தார். அதற்குள் மறைந்து விட்டார்.

கோவில் வீதிகளிலே பக்தர்களான நாம் நடந்து செல்வதற்காகப் போராடியவர், உள்ளே சென்று வழிபடுவதற்காகப் போராடியவர் - அப்படிப்பட்ட பக்தர்களாகிய, நமக்காக உழைத்த பெரியார் அங்கு நின்றிருந்தால்தான், "அய்யா, நீங்கள் இல்லாவிட்டால் நாங்கள் உள்ளே போயிருக்க முடியாதே" - என்று நன்றி காட்டுவதற்கு பெரியார் சிலை அங்கு இருந்தாக வேண்டும்.

அனுமதி பெற்று சிலை வைப்பதை யாரும் தடுக்க முடியாது. மறுப்பு இருந்தால் வழக்குப் போடுங்கள்.

இப்போது பூணூல் அறுத்தபோது சொல்கிறான், நீங்கள் சட்டப்படி நடந்திருக்க வேண்டும். சட்டத்தை மீறியிருக்கிறீர்கள் என்கிறார்கள். பெரியார் சிலை சூழ்ச்சிகரமாக உடைக்கப்பட்டது. இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் இரவில் போய், பெரியார் தொண்டர்களைப் போல கருப்புச் சட்டை அணிந்து சென்று இதைச் செய்திருக் கிறார்கள். பெரியார் தி.க. தோழர்கள் பகலில் நேரடியாகச் சென்று செய்ய வேண்டியதைச் செய்தார்கள். அது சூழ்ச்சி. இது உணர்ச்சி மேலீட்டால் செய்யப்பட்டது.

சீரங்கத்தில் பெரியார் சிலை வைக்கக் கூடாது என்று ஒரு அமைப்பே தொடங்கி நடத்தப்பட்டது. அதற்கு குரல் கொடுத்து மூளையாகச் செயல்பட்டவர் கோவையைச் சேர்ந்த "தயானந்த சரசுவதி" என்ற இந்துமத சாமியார். அவர் சங்கராச்சாரி யாரைவிட பெரிய சாமியார் ஆக வேண்டுமென்று செயல்பட்டுக் கொண்டிருப்பவர். அவருக்கு அடியாளாக இருப்பவர் 'இராம கோபாலனை'விட பெரிய தலைவனாகத் துடிக்கும் 'அர்ச்சுனன் சம்பத்' என்பவர்.

அவர் 5 ஆம் தேதி மாலை "பெரியார் சிலையை வைக்கக்கூடாது - வைக்க அனுமதிக்க மாட்டோம் - வைத்தால் தேவையற்ற கலவரம் நடக்கும்" என்று கோவையில் பத்திரிகையாளர்களுக்கு பேட்டியளிக்கிறார். 5 ஆம் தேதி மாலை சொல்கிறார்; 6 ஆம் தேதி உடைத்து விட்டார்கள்.

புகார் கொடுக்கும் தோழர்கள் புகாரில் அதைச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கைப் பதிவு செய்கிறார்கள். செய்து விட்டு, வழக்கிலிருந்து 'தயானந்த சரசுவதியை விடுவித்து விட்டார்கள். அதை காவல்துறை இயக்குநரே அறிவிக்கிறார்.

**ஈரோட்டில் நடந்தது என்ன?**

குற்றம் நடந்த இடத்தில் இராம. இளங்கோவன் இருந்தாரா, குமரகுரு இருந்தாரா இல்லையா என்பது காவல்துறை விசாரித்திருந்தால் தெரிந்தே இருக்கும். எதிர்வினை செய்துவிட்ட தோழர்களை அழைத்துக் கொண்டு காவல் நிலையத்திற்குச் சென்றவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். தயானந்த சரசுவதிக்கு ஒரு நியாயம், குமரகுருபரனுக்கும், இளங்கோவுக்கும் ஒரு நியாயமா?

தபசி குமரனைப் பற்றி ஆனூரார் சொன்னார் - சாயிபாபாவின் மோசடிகளைத் தோலுரிக்கும் விதத்தில் பேராசிரியர் நரேந்திர நாயக் அவர்களை வைத்து தொடர் நிகழ்ச்சிகளை சென்னையில் நடத்திக் கொண்டிருந்தார். டிசம்பர் 1 முதல் 12 வரை சென்னையில் கூட்டங்களை நடத்துவதற்கு அனுமதி கோருவதற்காக காவல்நிலையம் சென்ற தபசி குமரனை அங்கேயே உட்கார வைத்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். சட்டம் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்று கவலைப்பட்டு தயானந்த சரசுவதியை விடுவித்த காவல்துறை, தபசி குமரனை, இளங்கோவை, குமரகுருவை விடுவிக்க அந்த அறிவை ஏன் பயன்படுத்த வில்லை? பயன்படுத்தாத காவல் துறையை, அந்தத் துறையைக் கையில் வைத்திருக்கும் கலைஞர் என்ன செய்திருக்க வேண்டும்? இதைப் பார்க்கும் போதுதான் தெரிகிறது. கலைஞருக்குத் தெரியாமல் இது நடக்கவில்லை. தப்பு நடந்தாலும் பரவாயில்லை, அவர்களை ஒரு மிரட்டு மிரட்டி வையுங்கள் என்று கருதித் தான் இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நாங்கள் நினைக்க வேண்டியிருக்கிறது.

கொல்ல வந்தவர்கள் -திருப்பியடித்தவர்கள் யாவரும் ஒன்றே என்று கருதுகிறார். கலைஞர் எல்லோரையும் சமத்துவமாகவே நடத்தப் பார்க்கிறார். பெரியார் சிலை உடைப்பில் இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த ஆறு பேரைக் கைது செய்து வழக்குப் போட்டார்கள். நம் தோழர்கள் ஆறு பேர் மீதும் வழக்குப் போட்டார். அர்ஜுன் சம்பத் கிடைத்து விட்டார். 'பேலன்ஸ்' இல்லை என்று, பிணையில் வெளியில் வந்த குமரனைப் பிடித்து மீண்டும் சிறையில் போட்டு விட்டார்கள். சமத்துவமாக எல்லாவற்றையும் நடத்துகிறார். சமத்துவ பெரியாரல்லவா கலைஞர். நாங்கள் கலைஞரைப் பார்த்துக் கேட்கிறோம், நீங்கள் செய்வதைப் பற்றிக் கவலையில்லை. அண்ணா ஆட்சி, பெரியார் ஆட்சி என்று மட்டும் சொல்லாதீர்கள் என்றுதான் நாங்கள் கூறுகிறோம்.

சான்றிதழ் கொடுப்பதற்காகவே இங்கு ஒரு தலைவர் இருக்கிறார். இது அண்ணா ஆட்சி, பெரியார் ஆட்சி என்று பட்டம் கொடுத்திருக்கிறார். நம் தோழர்கள் செயல், பெரியார் வழி அல்ல என்று அவர் கூறியிருக்கிறார். பெரியார் இப்படியெல்லாம் சொல்லவில்லை என்று விளக்கம் வேறு கொடுத்திருக்கிறார்.

அதற்கும் பதிலடி கொடுத்தோம்..

1957 தஞ்சை சிறப்பு மாநாட்டில் பெரியார் கேட்கிறார், "சாதி ஒழிய வேண்டும் என்று பிரச்சாரம் செய்தோம், பேசினோம், தீர்வு வரவில்லை, அப்போது என்ன செய்வது?

"பத்து பார்ப்பனர்களை கொலை செய்தால்தான் சாதி ஒழியும் என்றால் என்ன செய்வது?" - என்று பெரியார் கேட்டபோது, கூட்டத்தில் எல்லோரும் 'ஆமாம்! ஆமாம்' என்று முழக்கம் போட்டார்கள். அதற்காகப் பெரியார் மீது வழக்கும் போட்டார்கள். நீதிமன்றத்தில் பெரியார் பேசுகிறார்.

"நான் பேசவில்லை என்று சொல்லவில்லை. பேசினேன். ஜனநாயக வழி பயன்படாதபோது அதைப் பயன்படுத்தத் தான் கூறினேன். இப்போது அல்ல! தேவைப்பட்டபோது எரிக்கச் சொன்னேன். அக்கிரகாரத்தை தீ வைக்கச் சொன்னேன்" என்றார். மற்றொரு முறை 1960-களில் பெரியார் கூறுகிறார் -

"வாஞ்சிநாத அய்யர், ராமசாமி அய்யர் போன்றவர்கள் என்னிடம் வந்து, 'என்னப்பா, நீ ராமாயணத்தை எரிக்கிறேன், புராணங்களை எரிக்கிறேன் என்றெல்லாம் பேசி வருகிறாய். பார்ப்பனர்கள் செய்த காரியங்களுக்காக சாஸ்திரங்களும், வேதங்களும் என்ன செய்தன?' என்று கேட்டார்கள். ஏன் சங்கராச்சாரியாரே கடிதம் எழுதிக் கேட்டார். அதற்கு நான் கூறினேன், "எங்களை 2000-3000 ஆண்டுகளாக சூத்திரர்களாக, தாசி மக்களாக எழுதி வைத்திருந்து அக்கிரமம் செய்து கொண்டிருப்பதற்காக 'உங்களை எல்லாம் கொன்றால்கூடத் தீராது' என்று சொன்னேன்" - என்று பெரியார் பேசியிருக்கிறார்.

'லட்சுமிபுரம் யுவர் சங்கம்' என்ற பார்ப்பனர் அமைப்பில் பேசுவதற்கு பெரியார் அழைக்கப்பட்டு, அங்கும் தமது கொள்கைகளை வலியுறுத்தி இப்படிக் கூறுகிறார்-

"நான் இருக்கும் போதே, சிக்கல்களை எல்லாம் தீர்த்துக் கொள்ளலாம். வருங்கால தலைமுறை என்னைப் போல் அமைதியாக இருக்கும் என்று சொல்ல

3 ஆம் பக்கம்

# பூணூலை அறுத்ததற்கா தேசப் பாதுகாப்பு சட்டம்?

2 ஆம் பக்கத் தொடர்ச்சி

முடியாது'' என்று 1953-ல் பேசியிருக்கிறார்.

1953-ல் பேசியது 2006-ல் நடந்திருக்கிறது அவ்வளவுதான்! ஆனால் இப்படியெல்லாம் இதையெல்லாம் பெரியார் சொல்லவில்லை என்று இவர்கள் கூறுகிறார்கள்.

''பெரியார் தொண்டர்கள் அமைதியாக இருக்க வேண்டும், ஆட்சிக்கு எதுவும் ஆபத்து வந்துவிடக் கூடாது. நம் ஆட்சி நடைபெறுகிறது. பெரியார்-அண்ணா ஆட்சியைக் கெடுத்து விடாதீர்கள்'' என்று சொல்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்களை ஆதரித்த பெரியார் - அப்படி ஆதரித்து வந்ததற்காக அமைதியாக இருந்தது கிடையாது.

காமராசரை ஆதரித்த பெரியார் தான், அவரது ஆட்சியில் தான் அரசியல் சட்டத்தை எரித்தார் - ராமர் பட எரிப்புப் போராட்டத்தை நடத்தினார் - தமிழகம் நீங்கிய இந்தியப் படத்தை எரித்தார். எல்லாப் போராட்டங்களும் காமராசர் ஆட்சியில்தான் நடந்தது. மூன்று வருடங்கள் தோழர்களுக்கு சிறைத்த தண்டனை கிடைத்தது. 5 தோழர்கள் சிறையிலேயே இறந்தனர். 13 பேர் விடுதலையான சிறிது காலத்தில் மரணமடைந்தனர். அப்படி இறந்த பின்பும் காமராசர் ஆட்சியை பெரியார் ஆதரித்துக் கொண்டுதான் இருந்தார். ஆனால், போராட்டங்களையும் நடத்தி வந்தார். அதற்காக அவர் கவலைப்பட்டதில்லை. ''ஆட்சியை ஆதரிப்பது வேறு - கொள்கையைச் சொல்வது வேறு'' என்ற கருத்தையே பெரியார் கொண்டிருந்தார்.

ஆனால், பெரியார் இயக்கத்துக்கு பொறுப்பானவர்கள், சொத்துக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் - ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்று பேசுகிறார்கள். கொள்கைக்கு ஆபத்து இருந்தால் பரவாயில்லை, ஆட்சிக்கு மட்டும் ஆபத்து வரக்கூடாது என்கிறார்கள்.

திருத்தணியில் ஜெயலலிதா ஆட்சியில் பெரியார் சிலையை மூட்டைக் கட்டி தூக்கிப் போட்டார்கள். அதை நெடுஞ்சாலைத் துறை செய்தது. அப்போது அமெரிக்காவில் இருந்தவர் சொன்னார் -

''தோழர்களே - கோபப்பட்டு விடாதீர்கள், ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது'' என்றார்.

அப்போது ''அம்மா'' ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது என்றார். இப்போது ''அய்யா'' ஆட்சிக்கு ஆபத்து வரக் கூடாது என்று சொல்கிறார்.

நாங்கள் பெரியார் கொள்கைக்கு ஆபத்து வந்துவிடக் கூடாது - என்று சொல்கிறோம். (பலத்த கை தட்டல்)

அதனால் தான் எங்கள் தோழர்கள் செய்தார்கள்! வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அது சரியா? தவறா? என்று நாங்கள் பேசிக் கொள்கிறோம். செய்த முறை தவறா? அடுத்த முறை எப்படிச் செய்வது? என்பதை தெளிவாக பேசிக் கொள்கிறோம். (கைதட்டல்)

காந்தி இறந்தபோது இனிப்புக் கொடுத்து மகிழ்ந்தவர்கள் பார்ப்பனர்கள். சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் சென்ற விமானம் கடலில் விழுந்தது கண்டு மகிழ்ந்து கொண்டாடியவர்கள் பார்ப்பனர்கள்.

பெரியார் சிலை உடைக்கப்பட்டபோது எங்கெல்லாம் இனிப்பு வழங்கினார்களோ, அங்குதான் தோழர் அடி கொடுத்தார்கள்.

தாக்கப்பட்ட எந்த இடத்திலும் தமிழர்கள் நுழைந்ததில்லை. சென்னை அயோத்தியா மண்டபத்தில் நிகழ்ச்சிகள் நடக்கும்போது, ''இங்கு காவலர்கள் தவிர பார்ப்பனரல்லாதார் அனைவரும் வெளியில் சென்று விடுங்கள்'' என்று ஒலிபெருக்கி வைத்து அறிவிப்பார்கள்.

சேலத்தில் உள்ள சங்கர மடத்தில், யஜுர் வேத பாடசாலயில், ஒரு தமிழன் எந்தக் காலத்திலும் உள்ளே சென்று பார்த்திருக்க முடியாது. இங்கே ஈரோட்டில் ராமரின் செருப்பு வைத்துள்ளதாகக் கூறப்படும் ''பாதுகா'' மண்டபத்தில் தமிழன் எப்போதாவது போயிருக்கிறானா?

நமது தோழர்கள் அருமையான இடமாகப் பார்த்து தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். பெரியார் தொண்டர்கள் சட்ட விரோதமாககூட செய்வார்களே தவிர நியாய விரோதமாக என்றுமே செய்ததில்லை. இது நியாய விரோதம் என்று நாங்கள் கருதவில்லை.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளை, தலித்துகளை மேலவளவு, நக்கலமுத்தான்பட்டி போன்ற இடங்களில் மட்டுமல்ல, பல்வேறு பகுதிகளில் கொன்றிருக்கிறார்கள். தூத்துக்குடி, வேலாயுதம்பாளையத்தில் 'தலித்' வீடுகளை சூறையாடி இருக்கிறார்கள். அவர்கள் மீதெல்லாம் தேசிய பாதுகாப்புச் சட்டம் பாயவில்லை. ஆனால், பூணூலை அறுத்தவர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது.

நீங்கள் யார் பக்கம் இருக்கிறீர்கள் என்று நாங்கள் நினைக்க முடியும்?

நாங்கள் இதுவரை தவறாக நினைத்திருந்தோம். பெரியாரைக் கொஞ்சகாலம் பார்த்திருக்கிறீர்கள். உங்களுக்கு பெரியாரைப் பற்றியும் கொஞ்சம் தெரிந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தோம். அண்ணா வோடு பல காலம் இருந்திருக்கிறீர்கள். அண்ணாவைப் புரிந்து கொண்டிருப் பீர்கள் என்று கருதினோம். நீங்கள் யார் பக்கம் நிற்கிறீர்கள்.

**எதற்கு தேசியப் பாதுகாப்புச் சட்டம்!**

புலிகள் இங்கிருந்து இரும்பு உருளைகளை அலுமினிய கட்டிகளை எடுத்துச் சென்றார்களாம். அதனால் தேசத்துக்கு என்ன ஆபத்து வந்து விட்டது? இலங்கையில் இருந்து இங்கு ஏதாவது வந்தால்கூட ஆபத்து என்று சொல்லலாம். இங்கிருந்து இலங்கைக்குப் போனால் உனக்கு என்ன ஆபத்து? அதற்கு எதற்கு தேசியப் பாதுகாப்புச் சட்டம்?

'இந்து' பத்திரிகையில் எழுதிவிட்டான் என்பதற்காக இந்த நடவடிக்கை! முற்போக்கு, ஜனநாயகம், பெரியார் என்ற வார்த்தைகளை விட 'இந்து' ஏட்டிலுள்ள வாசகர் கடிதம் பகுதிதான் கலைஞருக்கு பயத்தை ஏற்படுத்துகிறது. மிரண்டு போகிறார். 'இந்து' ஏடே எழுதுகிறது என்றுதான் கலைஞர் கோடிட்டுக் காட்டுகிறார். 'இந்து' ஏட்டைக் காட்டி எழுதும் இழிநிலைக்கு கலைஞர் வந்து விட்டாரே என்றுதான் எங்களுக்குச் சங்கடமாக இருக்கிறது.

பூணூலை அறுத்ததற்கு தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் உள்ளே போடுகிறார், கேவலமாக!

பெரியார் ஆரியர்-திராவிடர் என்று பிரித்துப் பார்த்துப் போராடினார். அண்ணா - வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது என்று போராடினார். திராவிடர் என்பதில் உள்ள 'ர்' எழுத்தை விட்டு விட்டு, 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயரை வைத்துக் கொண்டது, இது மக்களைக் குறிப்பதல்ல, மண்ணைக் குறிப்பது என்றார்கள்.

பெரியார் ஆட்சி என்றால் ஆரியன் - திராவிடன் என்று பார்க்க வேண்டும். அண்ணா ஆட்சி என்றால் வடக்கு, தெற்கு என்று பார்க்க வேண்டும். நாங்கள் கேட்டோம், ''உங்கள் ஆட்சியில் காவல்துறை இயக்குநர் 'முகர்ஜி' வங்காளத்துப் பார்ப்பனர், பெரியார் கொள்கைப்படி பார்ப்பனரை வைத்துள்ளது தவறு. அண்ணா கொள்கைப்படி வட நாட்டானை வைத்துக் கொள்வது தவறு.

தலைமைச் செயலாளர் திரிபாதி வட நாட்டுப் பார்ப்பனர். உள்துறை செயலாளர் மாலதி என்ற தமிழ்நாட்டுப் பாப்பாத்தி.

எது பெரியார் ஆட்சி? எது அண்ணா ஆட்சி? இப்படிச் சொல்லிக் கொள்ள உங்களுக்கு என்ன யோக்யதை இருக்கிறது? அப்படிச் சொல்ல யோக்யதை இல்லாதவர்கள் அதைச் சொல்லி ஏமாற்றாதீர்கள். பெரியார், அண்ணா பெயரை வைத்துக் கொண்டு இதைச் செய்யாதீர்கள்.

நீதிபதிகள் எல்லாம் வடநாட்டவராக இருக்கிறார்கள் என்று எங்கள் பழைய தலைவர் போராட்டம் நடத்துகிறார். நீதிமன்றத்தில் ஆங்கிலம் தெரிந்த வழக்குரைஞர்கள் ஆங்கிலத்தில்கூடப் பேசிக் கொள்வார்கள். ஆனால், மக்களோடு நெருங்கிப் பழக வேண்டிய தொடர்பு கொண்ட காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்ட ஆட்சியர்கள் தமிழகத்தில் பாதிக்கு மேல் வடநாட்டாராக இருக்கிறார்கள்.

ஈரோட்டில் 'சோனல் மிஸ்ரா' என்ற வடநாட்டு பாப்பாத்திதான் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் நமது தோழர்களை தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்த பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அனில்மேஷ்ராம், காவல் கண்காணிப்பாளர் அசோக்ராம் சின்கா - இருவரும் வடநாட்டுக்காரர்கள். மக்களோடு தொடர்புள்ள இந்தப் பதவிகளில் வடநாட்டார், பார்ப்பனர் இருப்பதற்குப் போராடாதவர்கள் - நீதிபதிக்காகப் போராடுகிறார்களாம்.

உங்கள் ஆட்சியில் தமிழர் ஆட்சியில், பெரியார் அண்ணா பெயரைச் சொல்லும் ஆட்சியில் வடநாட்டுப் பார்ப்பனர்களை உயர் அதிகாரிகளாக நியமித்துக் கொண்டு அந்தப் பேரைச் சொல்வது, நீங்கள் பழைய கலைஞர் இல்லை என்பதைத்தான் எங்களுக்கு உணர்த்துகிறது.

அடுத்த இதழில் முடியும்

## சித்திரை திருநாள் தமிழ்ப் புத்தாண்டாய் மாறிய விநோதம்

**– மகிழ்மாறன் –**

கடந்த ஏப்ரல் 14 அன்று பத்திரிகைகளில் பக்கம் பக்கமாய் விளம்பரங்கள், தள்ளுபடி அறிவிப்பு மற்றும் விலைக்குறைப்பு அறிவிப்புகள், நள்ளிரவில் கோவில் நடைதிறப்பு பற்றிய அறிவிப்புகள், பஞ்சாங்கப் புளுகர்களின் எதிர்காலப் பலன்கள் மற்றும் பலன்கள் கிடைக்கச் செய்ய வேண்டிய பரிகாரங்கள், வார இதழ்களின் பக்கங்கள் அதிகரிப்பு எல்லாவற்றுக்கும் மேலாக அரசியல் தலைவர்களின் வாழ்த்துக்கள்.

இவையெல்லாம் வழக்கமான ஒன்று தானே, அதை ஏன் புதிதாய் நினைவுபடுத்த வேண்டும். மேற்கண்ட நாள் தமிழ் புத்தாண்டு தொடக்கமல்லவா, ''விய'' வருடம் போய் ''ஸர்வஜித்து'' பிறந்ததால் மேற்கண்டவை நடப்பது இயல்பான ஒன்றுதானே, அதில் என்ன குற்றம் என்று நீங்கள் கேட்கக்கூடும். எல்லாம் வழக்கமான ஒன்றுதான், தலைவர்களின் வாழ்த்துகள்கூட. ஆனால் இந்த ''ஸர்வஜி''த்தில் இன்னொரு விநோதம் திராவிடர் இயக்கப் பார்வையாளர்கள் கண்ணில் பட்டுத் தொலைக்கிறதே! அது தி.மு.க.வின் தலைவர் கலைஞர் அவர்களின் ''தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து''. அவர் முதல்வர் எல்லோருக்கும் பொதுவானவர் 'சாயி பாபா' உட்பட. அதனால் வாழ்த்துச் சொல்கிறார். அதையேன் பெரிதுபடுத்த வேண்டும் என்று கேட்பவர்கள், கலைஞரவர்கள் பார்வையில் இந்த ''வருஷப் பிறப்பு'' பற்றி கடந்த காலங்களில் என்ன சொன்னார் என்பதை சற்றே நினைத்துப் பார்க்க வேண்டுகிறோம். 'வீரமணி'யார் கோஷ்டியினரும் நினைத்துப் பார்க்கலாம் தப்பில்லை.

கலைஞர் பார்வையில் சா.ச.மு. என்றும், சா.ச.பி. என்றும் பிரித்துப் பார்க்க அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

சா.ச.மு. காலகட்டம் அதில் கலைஞர் 1986 ஆம் ஆண்டு சித்திரைத் திருநாள் வாழ்த்து சொல்கிறார் தன் கைப்பட முரசொலியில் கீழ்கண்டவாறு.

சித்திரைத் திருநாள் இன்று - அடிமை
நித்திரை கலைந்து தமிழன் -
பத்தரை மாற்றுப் பொன்னாம் தமிழையும்
இத்தரை மீது இனமான உணர்வினையும்
காத்திட எழுக, எழுகவே
தமிழீழம் பூத்திட எழுக; எழுகவே.

பின் வரும் காலங்களிலும் கலைஞர் தமிழ்ப் புத்தாண்டை ஏற்க மறுத்து அவர் புராணக் கதைகளில் வரும் காரணம் அபத்தமானது. அதை ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று சொன்னார். 1989-ல் ஆட்சிக்கு மூன்றாம் முறையாக வருகிறார். சட்டமன்றத்தில் தமிழ்ப் புத்தாண்டு பற்றிய விவாதத்தில் கலந்து கொள்கிறார். மேற்கண்ட கருத்துக்களை வலியுறுத்துகிறார். தை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்கவிருப்பதாக முரசறைகிறார். அடுத்தடுத்த வருடங்களிலும் அதையே வலியுறுத்துகிறார்.

பின்பு சற்று மாற்றி தமிழனுக்கு இரண்டு ஆண்டுப் பிறப்பு என்பது சிறப்புத் தான். பரவாயில்லை. தை முதல் நாள் மற்றும் சித்திரை முதல் நாள் இவற்றை தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடலாம் என்று எழுதினார்.

இப்போது சா.ச.பி. காலகட்டம். 14.4.2007 ஆம் நாளிட்ட 'முரசொலி'யில் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்து என்றே தமிழ் மக்களை வாழ்த்துகிறார். மகிழ்ச்சியோடும், எழுச்சியோடும் கொண்டாடுமாறு வாழ்த்துகிறார். பூதக் கண்ணாடி போட்டுப் பார்த்தும், ''சித்திரைத் திருநாள்'' என்ற வார்த்தையோ அல்லது புராணக் கதைகளின்படி இது தமிழ்ப்புத்தாண்டு அல்ல என்பதைப் பற்றிய சின்ன வார்த்தைகளோ அல்லது வாக்கியங்களோ இல்லை.

காரணம் என்ன என்று சிந்திக்கிறீர்களா?

அதுதான் மேலே சொல்லப்பட்டதே கலைஞர் பார்வை சா.ச.மு. மற்றும் சா.ச.பி. என்று. இன்னும் புரியவில்லையா, சா.ச.மு. என்றால் சாய்பாபாவை சந்திப்பதற்கு முன்பு, சா.ச.பி. என்றால் சாய்பாபாவை சந்தித்ததற்கு பின்பு.

# கெம்பிளாஸ்ட் எதிர்ப்பு போராட்டம்

## கழகத் தலைவர் கைது



மேட்டூர் கெம்பிளாஸ்ட் தொழிற்சாலை, மண்ணில் புதைத்துள்ள ரசாயன கழிவுகளை அகற்ற வேண்டும்; கழிவு ஆற்றில் கலப்பதை தடுக்க வேண்டும்; மால்கோ ஆலை குவித்துள்ள மணல் கழிவுகளை அகற்ற வேண்டும்; பாதிக்கப் பட்டோருக்கு குடிநீர், மருத்துவ வசதி, இழப்பீடு வழங்க வேண்டும் என்று கோரி, 18.4.2007 அன்று சாலை மறியல் போராட்டம் நடந்தது. கெம் பிளாஸ்ட் தொழிற்சாலை முன் நடந்த மறியல் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பி.என்.பட்டி, பஞ்சாயத்து தலைவர் மயில்சாமி, கோனூர் பஞ்சாயத்து தலைவர் மாணிக்கம், மலை வாழ் மக்கள் உரிமை இயக்கம் தலைவி முத்துலட்சுமி முன்னிலை வகித்தனர். கெம்பிளாஸ்ட், மால்கோ தொழிற்சாலைகளை சுற்றியுள்ள கோனூர், இரட்டை புளியமரத்தூர், டி.எம்.பி. நகர், வீரனூர் பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், ரசாயன கழிவுகளால் பாதிக்கப் பட்டோர் உட்பட பலர் மறியலில் பங்கேற்றனர். மறியலில் ஈடுபட்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட 203 பேரை கைது செய்த போலீசார், குஞ்சாண்டியூர் ஏ.ஆர்.எஸ். திருமண மண்டபத்தில் சிறை வைத்தனர்..

# தென்னக இரயில்வே அதிகாரிக்கு எதிராக

## கோவையில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம்

சேலத்தில் ரயில்வே கோட்டம் அமைவதற்கு எதிராக செயல்பட்டு வரும் தென்னக இரயில்வே பொது மேலாளர் தாமஸ் வர்கீசைக் கண்டித்து, கோவையில் கழகத்தின் சார்பில் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பாலகாடு ரயில்வே டிவிஷனில் இருந்து கோவை, திருப்பூர் உள்பட பல்வேறு ரயில் நிலையங்களை பிரித்து சேலத்தில் ரயில்வே கோட்டம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்கு கேரள மாநிலத்தில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வருகிறது. சேலம் ரயில்வே கோட்டத்தில் கோவையை சேர்க்க விடாமல் தென்னக ரயில்வே பொதுமேலாளர் தாமஸ் வர்கீஸ் மறைமுகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும், கேரள மாநிலத்துக்கு சாதகமாக நடந்து கொள்வதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் கோவைக்கு வருகை தந்த தென்னக ரயில்வே பொது மேலாளர் தாமஸ் வர்கீசுக்கு எதிராக கழகத்தினர் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். போலீஸ் தடையை மீறி நடைபெற்ற இந்த போராட்டத்தை தொடர்ந்து கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

முதல் பக்கத் தொடர்ச்சி

அவரை மீறி புகாரெல்லாம் வாங்க முடியாது'' என்றார். புகாரையாவது வாங்குங்கள், வாங்க வில்லையென்றால் சாலை மறியல் செய்வோம் எனக் கூறி பல தோழர்கள் சாலையில் அமர்ந்தனர். அதன் பின் ஆய்வாளர் கழகத் தோழர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துப் பேசினார். புகார் மனுவை வாங்கிக் கொண்டார். ரசீது கேட்டதற்கு அதற்கும் முடியாது என்றார். நீண்ட நேர வாக்குவாதத்திற்குப் பின் ரசீது கொடுத்தார்.

அதன் பிறகு உங்கள் பிரச்சாரத்தை இதற்குமேல் தொடரக்கூடாது. அப்படித் தொடர வேண்டுமானால் எஸ்.பி.யிடம் அனுமதிக் கடிதம் வாங்கி நடத்துங்கள் என்றார். எஸ்.பி. அலுவலகத்தில் அனுமதிக் கடிதம் அல்லது அனுமதிச் சான்ற கொடுக்கும் வழக்கமே இல்லை என்ற நிலையில் பிரச்சாரத்தைத் தொடர முடியவில்லை. மேலும் பண்டு கிராமப் பகுதியில் மிகப் பெரும் காவல்துறைப் பட்டாளத்துடன் போனால் ஒழிய அங்கு பிரச்சாரம் நடத்த முடியாது என்பதை கழகத் தோழர்கள் அறிந்தனர். உள்ளூர் ஆய்வாளர், உதவி ஆய்வாளர் அனை வருமே சாதி வெறியர்களுக்கு கட்டுப்பட்டு, சாதி வெறியர்களின் பாதுகாவலரான அரசு தலைமைக் கொறடாவும், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினருமான சக்கர பாணிக்கு கட்டுப்பட்டு ஆதரவாகத்தான் இருக்கின்றனர்.

சட்டவிரோதமாக நடக்கும் இந்த தீண்டாமை வன்கொடுமைகளை காவல் துறை தடுப்பதில்லை. மாறாக சாதி ஒழிப்புப் பிரச்சாரம் செய்ய அனுமதிகூடக் கொடுப்பதில்லை. இரட்டைக் குவளை ஒழிப்பு என ஒரு வார்த்தை பேசியதற்கே உயிரோடு கொளுத்தத் துடிக்கும் காட்டு மிராண்டிகள் வாழும் பகுதியிலிருந்து உயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிவந்த தோழர்களிடம் புகாரைக்கூட வாங்க வில்லை காவல் துறையினர். முதல் தகவல் அறிக்கையும் தரவில்லை. எப்படி வாகரை செல்லலாம் என மிரட்டியும் பார்க்கின்றனர். இந்நிலையில் அங்கு நிரந்தரமாக வசிக்கும் தாழ்த்தப்பட்ட மக்களின் நிலை ?

பாப்பாபட்டி, கீரிப்பட்டியில் தேர்தலை நடத்திவிட்டோம். ஆனால், அவற்றைவிடக் கொடுமையான - கொடுமைகளை வெளியே பேச முடியாத நிலையில் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ் கிறார்கள். தேவகோட்டை பகுதியிலுள்ள நாடு அமைப்பு போன்றதே பழனி, தொப்பம்பட்டி, ஒட்டன்சத்திரம் பகுதிகளின் உள்ள பண்டுகிராம அமைப்பு. இப்பகுதி களில் தமிழக அரசின் காவல்துறை செயல்படாமல், தாழ்த்தப்பட்டோர் மீதான தீண்டாமை வன்கொடுமைகளைக் கண்டும் காணாமல் உள்ளது.

இந்த பண்டு கிராமங்களில் அரசு இவ்வன்கொடுமைகளைக் கடுமையாக ஒடுக்கி தடை செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெற்று வாழ வழி செய்ய வேண்டும்.

**இது தொடர்பாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஏப்ரல் 22 அன்று திண்டுக்கல்லில் போராட்டத்தை அறிவிக்க உள்ளார். அரசுக்கு உரிய கால அவகாசம் கொடுத்து அதன் பின் போராட்டம் நடத்தப்படும். அது கண்டன ஆர்ப்பாட்டம், தொடர் முழக்க ஆர்ப்பாட்டமாக இருக்காது. இரட்டைக்குவளைகளை - இரட்டை பெஞ்சுக்களை முற்றிலுமாக ஒழிக்கும் வண்ணம் கடுமையான போராட்ட மாக இருக்கும். ●**

# v«.nf.ehuhazid m«gy¥gL¤âa bjhlU¡F cyf¤ jÄH®fŸ ghuh£L!

தமிழ்நாட்டில் ஈழத் தமிழர் ஆதரவை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டுவரும், பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணனின் சதிகளை அம்பலப்படுத்தி 'புரட்சி பெரியார் முழக்கத்தில்' விடுதலை இராசேந்திரன் எழுதிய கட்டுரையை www.tamilnaatham.com இணையத்தளம் வெளியிட்டது. அந்தக் கட்டுரைக்கு பாராட்டுத் தெரிவித்து உலகத் தமிழர்கள் அனுப்பியுள்ள கடிதம்:

விடுதலை இராசேந்திரனின் கட்டுரையில் உண்மைத் தகவல்களே உள்ளன. எதற்காக அப்பாவி ஏழை ஈழத் தமிழர்களுக்கு எதிராக நாராயணன் செயல்படு கிறார் ? தமிழர்களின் மனித உரிமைகளை அவர் மதிக்கவில்லை. உலகெங்கும் வாழும் தமிழர்களை அவர் எதிர்க்கிறாரா ? அவர் பகவத்கீதையை நம்ப வில்லையா ? ஒவ்வொரு வினைக்கும் எதிர்வினை உண்டு. நாராயணனின் நியாயப் படுத்த முடியாத செயற்பாடுகளானது இந்தியாவை மிகப் பெரிய சிக்கலில் மாட்டிவிடும்.

**செல்வா, டொராண்டோ, கனடா.**

இந்தியாவில் உள்ள எதிரிகளான நாராயணன் போன்றவர்கள் குறித்த செய்திகளை வெளிக் கொண்டு வந்துள்ளார் விடுதலை இராசேந்திரன். எமது விடுதலைப் போராட்டத்தைச் சீர்குலைக்கும் சக்திகள் தொடர்பில் நாம் மேலதிகமாக அவதானமாக இருக்க வேண்டும். எமக்குத் தொந்தரவு தரும் இந்திய உளவுத் துறையினர் மீது கண் வைத்திருக்க வேண்டும். மேனன், சிதம்பரம், நாராயண சுவாமி மற்றும் இந்துராம் போன்ற பல பத்திரிகையாளர்களும் இந்தப் பட்டியலில் இடம் பெறுவர். இந்தக் கட்டுரையானது ஆங்கிலத்தில் கண்டிப்பாக மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

**– ஈழத் தமிழன், இங்கிலாந்து.**

காலத்தின் தேவையை அறிந்த எழுதப்பட்ட மிக நல்ல உண்மைக் கட்டுரை. பார்ப்பனிய மயக்கம் தெளியாத தமிழர்களுக்கு இது போன்றவற்றைக் கைநூலாக வெளியிட்ட இலவசமாகக் கொடுக்க வேண்டும். மண், பொன், பெண் என்பவற்றிலே கொள்ளும் மயக்கங்கள் காலத்தோடு தேயவல்லன. கிடைத்த பின்னர் தீரவல்லன. ஆனால், பிராமணிய மயக்கம் அப்படியல்ல. மேலும் இது எமது பெண்களிலே மிகவும் அதிகளவிலே உளது. எனவேதான், ஈழப் போரையும் எமது ஒப்பற்ற பெருந் தலைவரையும் பார்ப்பனியச் சதிகளையும் இணைத்த இவ்வாறான வரலாற்றுச் சான்றுகளைத் தங்களைப் போன்றோர் கைநூலாக வெளியிட்டால், என்னாலான உதவியைச் செய்ய முடியும். தயவு செய்து தொடர்பு கொள்க. என்னையும் ஐயப்படலாம். நேரடித் தொடர்பிலே அதைத் தீர்ப்பேன்.

**– கந்தையா இரா.மனோகரன், இங்கிலாந்து.**

## மே 19 சனிக்கிழமை – தஞ்சையில்

**சாதி ஒழிக்கச் சட்டம் எரித்த 50ஆவது ஆண்டில்...**

# பெரியார் திராவிடர் கழகம் நடத்தும் சாதி ஒழிப்பு மாநாடு



- எழுச்சி இசை, கருத்தரங்கம், பாவரங்கம், சட்ட எரிப்பு வீரர்களின் நினைவலைப் பகிர்வு, பேரணி, பொது மாநாடு,
- 1957 சட்ட எரிப்புப் போராட்ட வரலாற்று நூல் வெளியீடு

கழகத் தோழர்களே! சாதி ஒழிப்பாளர்களே,

**தயாராவீர்! தயாராவீர்!**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on : 26th April 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.